விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 333 ஐப்பசி 08ஆம் நாள் வியாழக்கிழமை 25 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## ஒபாமாவுக்கு அனுப்பப்பட்ட பொதியில் வெடிகுண்டுகள்

வொஷிங்டன், ஒக். 25
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர் ஹிலாரி ஆகியோருக்கு அனுப்பப்பட்ட பொதிக >> 25

## வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவம் நடத்திய பண்ணைகளை மக்களிடம் ஒப்படைக்க முடிவு

### வரவு - செலவுத் திட்டத்தில் நிதியும் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 25
வடகிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் நடத்தி வந்த பண்ணைகளை மக்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்;டுள்ளது. இதனை முன்னெடுப்பதற்கு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் >> 25

## தமிழர்கள் இருவரை கடத்திய கடற்படை அதிகாரி கைது

கொழும்பு, ஒக்.25
கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இரு தமிழ் வர்த்தர்களைக் கடத்திய குற்றச்சாட்டில் கடற்படை அதிகாரி ஒருவர் நேற்றுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட் >> 25

## அமைச்சர்களுக்கு 'றோ'வுடன் தொடர்பிருப்பதாக நம்பவில்லை

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25
இந்திய புலனாய்வுத் துறை அமைப்பான 'றோ'வுடன் தொடர்புடைய அமைச்சர்கள் அமைச்சரவையில் இருப்பார்கள் என்று நம்பிக்கையில்லை. இவ்வாறு முன் >> 25

## முதலாவது வடக்கு மாகாணசபையின் ஆயுள் காலம் நேற்று முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஒக். 25
முதலாவது வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது. வடக்கு மாகாண ஆளுநர் குரே தலைமையிலான நிர்வாகம் இன்றிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.
வடகிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர், 2013ஆம் ஆண்டு செப்ரெம் >> 25

## புதிய பயங்கரவாதத் தடை சட்டத்தால் பெரும் ஆபத்து

### புபுது ஜெகொட சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.25
புதிதாக உருவாக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதை விடவும் ஆபத்தானது என்று தெரிவித்துள்ளது முன்னிலை சோசலிசக் கட்சி. கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் >> 25

see more news in
newuthayan.com

# புதிய கட்சி தொடங்கினார் விக்கி

### சம்பந்தன் மீதான வசைபாடலுடன் அவரது கன்னியுரை அமைந்தது

யாழ்ப்பாணம், ஒக். 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதாக தெரிவித்த முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், 'தமிழ் மக்கள் கூட்டணி' என்ற புதிய கட்சியை ஆரம்பிப்பதாக அறிவித்தார். ஒரு மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கிச் செயற்படுவது அதிகாரமற்ற ஒரு இயக்கத்தின் வெறும் ஆதங்க வெளிப்பா டாகவே இருக்கும் என்பதால் >> 25



## விக்கியின் கொள்கையுடன் இணங்கிப்போனால் தமிழரசு கட்சியும் அவருடன் இணையலாமாம்

யாழ்ப்பாணம், ஒக். 25
தனது கொள்கையுடன் ஒத்துப்போனால் தமிழ் அரசுக் கட்சியும்கூடத் தனது கூட்டணியில் இணைந்து கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். தான் தனியாகக் கட்சி தொடங்குகிறார் என்று அறிவித்து 24 மணி நேரத்திற்குள் இவ்வாறு தெரிவித்திருக்கி >> 25

## பின்னர் பதில் கூறுகின்றேன்

### விக்கியின் கட்சி அறிவிப்பு தொடர்பில் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஒக். 25
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் புதிய கட்சியை ஆரம்பித்தமை தொடர்பிலும், அவர் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பிலும் பின்னர் பதில் கூறுகின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். வடக்கு மாகாண முன்னாள் >> 25

## மலையகத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் பெரும் ஆர்ப்பாட்டம்

### கொழும்பில் நேற்றுத் திரண்டனர் மக்கள்

கொழும்பு, ஒக்.25
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்திக் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சமூக வலைத்தளங்கள் ஊடாக >> 25

### வடகிழக்கு வீடமைப்பு

## அமைச்சு அலுவலகத்தில் தேங்கிக் கிடந்த ஆவணம்

யாழ்ப்பாணம், ஒக். 25
வடகிழக்கு மாகாணங்களில் கல் வீடமைப்பு பணிகளை ஐ.நா. முகவர் நிறுவனங்கள் ஊடாக முன்னெடுப்பது தொடர்பான ஒப்பந்த வரைவு தயாரிக்கப்பட்டு அமைச்சர், மனோகணேசனின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டும் இரண்டு வாரங்களாக அது கிடப்பில்கிடந்துள் >> 23

## 'அம்மாச்சி' பெயர் மாற்றம் குறித்து விக்கி நேற்று சீற்றம்

யாழ்ப்பாணம் ஒக் 25
தங்கள் அன்புத் தாயாராகிய இலட்சுமிப் பிள்ளையின் பெயரை சிங்கள ஆட்சியாளர்கள் கோவிப்பார்கள் என்ற காரணத்தினால் பொடிமெனிக்கே என்று மாற்றக்கூடிய சிந்தனையாளர்களே இன்று அம்மாச்சி என்ற பெரை மெல்ல நீக்கி பாரம்பரிய உணவகம் என மாற்ற முனைந்திருக்கின்றார்கள் .
இவ்வாறு வடக்கு >> 25

## தமிழ்க் காங்கிரஸ், புளொட் நேற்றைய கூட்டத்திலில்லை

யாழ்ப்பாணம், ஒக். 25
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் புதிய கட்சி அறிவிப்பு நிகழ்வுக்கு, பேரவையின் பங்காளிகளான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் புளொட் கட்சிகள் பங்கேற்கவில்லை. அந்தக் கட்சிகளின் உறுப்பி >> 23



# மாற்று அரசியலை மக்கள் காலம் செல்ல ஏற்பார்கள்

## சட்டத்துறைத் தலைவர் குருபரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

தமிழ் மக்கள் மாற்று அரசியலை காலம் செல்ல ஏற்பார்கள். கடந்த காலங்களில் இது நடந்துள்ளது. மாற்று அரசியல் என்பது கொள்கை ரீதியிலான அரசியல் என்றால் அதற்குரிய அரசியல் தெரிவுகளை முதலமைச்சர்கவனமாகச்செய்யவேண்டும். சரியான பாதையை சரியான நபர்களோடு தெரிந்தெடுப்பார் என்று நம்புகின்றேன். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கு.குருபரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் " பேரவையின் கூட்டம், நல்லூர்நடராஜாபரமேஸ்வரிமண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. போருக்குப் பின்னரான ''தமிழ்ச் சமூகத்தில் பிரதிநிதித்துவ அரசியல் மற்றும் மக்கள் அணிதிரள் அரசியல் ஆகியவற்றின் வகிபாகமும் தொடர்புறுநிலையும்" என்ற தலைப்பில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

### கூட்டமைப்பின் உருவாக்கம்

ஆயுதப் போராட்டம் உச்சமாக இருந்த காலத்தில், தேர்தல் அரசியலுக்கு வரையறை கொடுக்க முயன்றபோது உருவானதுதான்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. ஆயுதப் போராட்ட அரசியலின் நோக்கமும், மிதவாதஅரசியல்தலைமைகளின் நோக்கமும் வெவ்வேறானவை என்று தென்னிலங்கைத்தரப்புக்கள் காட்டிநின்றன. ஆயுதப் போராட்ட அரசியலுக்கு துணைசெய்அரசியலுக்காகவேதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. மிதவாத அரசியல்தலைமைகளை கையாள்வதன் ஊடாக, ஆயுத அரசியலை கையாள்வது தென்னிலங்கையின் போக்காக இருந்தது. இதை உடைக்க உருவாக்கப்பட்டது கூட்டமைப்பு. மக்களால்ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் ஆயுதப் போராட்டத்தின் அரசியல் என்பதைக் காட்டுவதற்காக கூட்டமைப்புஉருவாக்கப்பட்டது.

2009ஆம்ஆண்டுபோர்முடிந்தபின்னரானசூழலில்தேர்தல்அரசியல்வகிபாகம் என்ன என்ற கேள்வி? எழுந்தது. 30 ஆண்டுகளாகக் கொள்கைஉருவாக்கத்திலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அந்தக் கொள்கையை செயற்பாட்டு ரீதியாகமக்களின்நாளாந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வு தரக் கூடிய ஒரு நிழல் அரசை நடத்திக் காட்டிய கட்டமைப்பு இருந்ததன்பின்னராகஎழக்கூடியவெற்றிடத்தில் தேர்தல் அரசியலின் வகிபாகம் என்னஎன்றகேள்விஎழுப்பப்பட்டது.

### தேர்தல் அரசியல்

2010, 2015ஆம்ஆண்டுஅரசதலைவர் தேர்தல்களில் தமிழ் மக்கள் வாக்களிக்கின்றதன்மையைஎடுத்துநோக்கினால், சிங்களபௌத்தபேரினவாதத்தின்திணிப்புக்கும், இனப்படுகொலைக்கு எதிரான வெளிப்படுத்தலைக்காட்டும்நிகழ்வாகத் தேர்தல்களைப்பாவித்திருக்கின்றார்கள். எதிர்ப்பு வாக்காக மக்கள் பதிவு செய்தார்கள்.

மாகாண, நாடாளுமன்றத் தேர்தல்கள், தமிழ்மக்கள்என்னஅரசியல்நிலைப்பாட்டில் நிற்கின்றார்கள் என்ற வரையறை செய்யக்கூடியஇடத்தில்தேர்தல்அரசியல் வந்து சேர்ந்து விட்டது. தமிழ் மக்கள் யாரைத்தெரிவுசெய்கின்றார்கள்என்பது அவர்கள் போருக்குப் பின்னர் எந்த நிகழ்சிநிரலில்நிற்கின்றார்கள்என்பதைக் காட்டிநிற்கின்றது.

மக்கள் அணிதிரள்வில் பங்கெடுக்காத தேர்தல் அரசியல் கொள்கையையும், நிகழ்சிநிரலையும் வரையறைசெய்யும் பொறுப்பு தேர்தல் அரசியலுக்கு வந்து சேர்கின்றது. தேர்தலில் அரசியல் மக்களின் விருப்பைப் பெற்றவர்கள் எப்படிக் கையாண்டார்கள்?

### தமிழ்த் தேசிய அகற்றம்

2009ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட தென்னிலங்கையின் அரசியல் நிரலானது, தமிழ்த் தேசிய சிந்தை அரசியல் நீக்கம் என்றுசொல்லலாம். ஆனால், ஒருநிலைமாறு கால சமூகத்தில், தமிழ்த் தேசிய சிந்தனை அகற்றல் அரசியல் என்பதை இலகுவாகமுன்னெடுக்கமுடியாது. அடக்குமுறை மூலமாக அதனைச் செய்யலாம் என்று கடந்த அரசு முயற்சித்தது. இன்று இருக்கக் கூடிய அரசு தமிழ் பிரதிநிதிகளைக்கொண்டுஅதனைச்செய்கின்றது. ஆனால்சிந்தனைஅகற்றல்செய்யமுயற்சிக்கின்றபோது சிக்கல் இருக்கின்றது. அவர்கள் வந்து வாக்குக் கேட்கவேண்டும். நீங்கள் வாக்களிக்க மாட்டீர்கள். நீங்கள்வாக்களிக்கமாட்டீர்கள்என்றால் என்ன செய்யவேண்டும், நாங்களும் தமிழ்த் தேசியவாதிகள்தான் என்கின்ற விம்பத்தை தொடர்ந்து கட்டியமைக்க வேண்டியுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்பிரமுகர்கள் தேர்தலின்போது பேசிய பேச்சுக்களை நினைவூட்டிப் பாருங்கள். முதலமைச்சர் கடந்த மூன்று ஆண்டு காலமாகப் பேசிய பேச்சுக்களை விட திறமான பேச்சுக்கள். முதலமைச்சரை அறிமுகப்படுத்தியஅந்தஇரட்டைத்தலைமைகளால் தயாரிக்கப்பட்ட கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை நினைவுபடுத்திப் பாருங்கள். 1983ஆம் ஆண்டுக்கு முன்னரான இராணுவ இருப்பை உறுதிப்படுத்துவோம். தொழில் வழங்குவோம், அபிவிருத்தியை முன்னெடுப்போம், என்று இன்னோரன்ன வாக்குறுதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டது. தாயகம், தேசியம், சுயநிர்ணயம் பேசாத கூட்டமே இல்லை. ஆனால் தேர்தல் முடிந்ததன் பின்னர், ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கு முன்னரான மிதவாத அரசியல் தலைமையின் குணம் மீள எட்டிப் பார்க்கின்றது.

### சொல்வது ஒன்று செய்வது ஒன்று

வடகிழக்கில் ஒன்றைச் சொல்லலாம். தெற்கில்ஒன்றைச்சொல்லலாம். தேர்தல் நேரத்தில் திரும்பி வந்து மீண்டும் வாக்குக் கேட்கலாம். வாக்குப் பெற்றுச்செல்லலாம். தமிழ்த்தேசியசிந்தனைஅகற்றல் என்பதை தேர்தல் காலங்களில் சாதிக்க முடியாமல்இருக்கமீளமீளதமிழ்த்தேசியச் சிந்தனை தொடர்பான மொழிப் பாவனை பாவிக்கப்பட்டு வரத் தென்னிலங்கையிலும், வொசிங்டனிலும், புதுடில்லியிலும்வேறுமொழிவருகின்றது. இது அரசியலைமட்டுப்படுத்துகின்றமுயற்சி. அதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றது.

புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சி, ஒருமித்தநாடு பற்றிச் சொல்லப்படுகின்றது. இங்கு ஒற்றையாட்சியை ஊர்ஊராக கூட்டாட்சி என்று சொல்லுகின்றார்கள். இதற்குச்சொல்லும்விளக்கத்தைகுறைந்தபட்சம் வழிநடத்தல் குழுவில் சொல்லி, அதிலுள்ள உறுப்பினர்களையாவது ஏற்றுக் கொள்ளச் செய்யவில்லை. மிதவாத அரசியல், தமிழ்த் தேசியச் சிந்தனையைக் குறைத்து விடுகின்றபோது சிங்களப் பேரினவாதம் ஏற்றுக் கொள்ளும் என்பது பிழையானது. சிங்களப் பேரினவாதம் தமிழ்த் தேசிய அரசியலை மீள்வரைவிலக்கணம் செய்கின்றபோது, அந்த மீள்வரைவிலக்கணம் செய்யப்பட்ட அந்த கீழ் நிலைப்பட்ட ஒரு நிகழ்சித்திட்டத்தையாவதுசிங்களப்பேரினவாதம் ஏற்றுக்கொள்ளத்தயாரில்லை. எங்களது குறைந்தபட்சம்அவர்களின்அதிகபட்சம்.

### யதார்த்தம் என்ன?

இறுதியில் என்ன நடக்கின்றது. தமிழ் மக்களின் கோரிக்கைகள் மீள்வடிவம் பெறுகின்றது. கூட்டாட்சிஎன்றகோரிக்கை ஒருமித்தநாடாகமாற்றபட்டிருக்கின்றது. இனிக் கோரிக்கையை மீளவும் கூட்டாட்சியில் விடலாமோ? இதனைத்தான் சிந்தனை அகற்ற முயற்சி என்கின்றேன். அவர்கள் ஒவ்வொருமுறையும் எங்கள் வேணவாவை குறைத்து அனுப்ப, குறைத்துஅனுப்பியதைஎங்கள்வேணவாவாக மாற்ற முயற்சிக்கப்படுகின்றது. இன்றுதேர்தல்அரசியலின்போக்குஎன்பது, தேர்தல்நேரத்தில்அவர்களின்சிந்தனையாக வாங்கப்படுகின்ற தமிழ்த் தேசியசிந்தனையைநெகிழ்வுப்போக்கானது. நாங்கள் விரும்பும் மொழியில் பேசிவிட்டுச்சென்றுபின்னர்படிப்படியாக தமிழ்த் தேசிய சிந்தனை அகற்றல் என்பதுதான் நாங்கள் யதார்த்தத்தில் பார்க்கின்றவிடயம்.

தேர்தலில் ஒன்றைச் சொல்லி அதற்குப் பின்னர் வேறொன்றைச் செய்வதை புத்திசாலித்தனம் என்கின்றார்கள். அதைச் செய்யாத முதலமைச்சர் போன்றோரை முட்டாள்கள், தீவிரவாதிகள் என்கின்றார்கள். தேர்தல் அரசியல் எதனைச் சொன்னார்களோ அதனைச் செய்யாதபோது தான் இளைஞர்கள் ஆயுதம் தூக்கினார்கள். இந்தச் சமூகம் மீளவன்முறைக்குச் செல்லக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கரவெட்டியில்தியாகதீபம்திலீபனின்நினைவுநாளில்பேசும்போது, கூட்டமைப்புக்கு மாற்றுக் கருத்துச் சொல்பவர்கள் எதை முன்வைக்கின்றார்கள். அவர்கள் ஆயுதம் தூக்கிப் போராடுவார்களா? விடுதலைப் புலிகளை விட அவர்களால் சிறப்பாக போராட முடியுமா? இது பொறுப்பான பேச்சா? புதிய அரசமைப்பு வராவிட்டால் வன்முறை வெடிக்கும் என்று கூட்டமைப்பு தமது உத்தியோகபூர்வ கீச்சகத்தில் பதிவிட்டது. இதுபொறுப்பற்றபேச்சு. வன்முறையைத் தூண்டுவது யார்?. இவை எல்லாமே அடுத்த தேர்தலுக்கான ஆயத்தங்கள். நாங்கள் கேட்டோம் அவர்கள் தரவில்லை. நாங்கள் வந்து சொல்கின்றோம். மீளப் போய்க் கேட்கப் போகின்றோம். வாக்குகளைத்தாருங்கள்.

### முதலமைச்சர் நிதியம்

பொதுக்கட்டமைப்புக்கள்தான்இன்றைய தேவை. அவை, சமாந்தர அரசைவடக்கு கிழக்கில் கொண்டு நடத்தவேண்டும். நாங்கள் எங்கள் சமூகநிறுவனங்கள் மீளக்கட்டியமைக்கவேண்டும்.

முதலமைச்சர் நிதியத்தை கடைசிநேரம் வரையில் அனுமதிக்காது 5 ஆண்டுகளாககாலம்தாழ்த்தினார்கள். எதிர்கால முதலமைச்சர், முதலமைச்சர்நிதியத்தை மாகாணசபைக்குவெளியில்உருவாக்க வேண்டும். பொது நிறுவனங்கள் பொருளாதார பார்வையை மக்கள் மத்தியில் முன்வைக்கவேண்டும். பொருளாதாரப் பார்வை அடிப்படையிலே 10 பிரதான மறுமலர்ச்சிதிட்டங்களைக்கண்டுபிடித்து முன்னோடித்திட்டங்களுக்கு, புலம்பெயர் தமிழ்மக்களிடம்பணம்பெற்றுமாகாண சபையில் இருந்து கொண்டு, மாகாண சபைக்கு வெளியே நடத்தவேண்டும்.

அரசு செய்யவேண்டிய விடயங்களை சமூகம்பொறுப்பெடுத்துநடத்தக்கூடியவாறாகஅதற்குஅரசியல்தலைமைத்துவம் வழங்கக்கூடியஒருவிடயமேஇன்றைய தேவை. இதற்கு தேர்தல் அரசியல் தேவையில்லை. ஆனால் அதன் அனுசரணை இருந்தால் இதனை இன்னும் வீச்சாகச்செய்யமுடியும்.

### மாற்று அரசியல்

தமிழ்த் தேசிய அரசியலில் மாற்றுச் சிந்தனை என்பது தமிழ்த் தேசிய அரசியலை சரியான பாதையைக் கொண்டுசெல்லும். முதலாவதுமாற்று அரசியல் செய்தவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம். மாற்று அரசியல் முயற்சியை எடுத்ததால் எட்டு ஆண்டுகள் நாடாளுமன்றம் செல்ல முடியவில்லை. மாற்று அரசியலை மக்கள் காலம் செல்லச் செல்ல ஏற்றுக் கொள்வார்கள்.

முதலமைச்சர் மீதான பொதுவிம்பம், அவருக்கான மரியாதை என்பவை மாற்று அரசியலை தமிழ் மக்களின் பிரதானஅரசியலாகமாற்றுவதற்கான அரிய வாய்ப்பை தந்துள்ளது. இதில் தூற்றுப வர்களும் தாராளமாக இருப்பார்கள். தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுபவர்களும் ஏராளமானவர்கள் இருப்பார்கள். இருவரிடமும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மாற்று அரசியல் என்பது கொள்கை ரீதியிலான அரசியல்என்றால்அதற்குரியஅரசியல்தெரிவுகளைமுதலமைச்சர் கவனமாகச்செய்யவேண்டும். சரியானபாதையைசரியானநபர்களோடு தெரிந்தெடுப்பார் என்று நம்புகின்றோம் என்றார். (5)

---

# தேர்தல் அரசியலை முதன்மைப்படுத்தாத பரந்துபட்ட மக்கள் இயக்கமே தேவை

## பேரவையின் இணைத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 25

தேர்தல் அரசியலை முன்னிலைப்படுத்தாத ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கமே எமது அரசியலை முன்கொண்டுசெல்வற்கு எமக்கு இன்று அவசியமானதாகும். இவ்வாறு தமிழ் மக்கள் பேரவையின்இணைத்தலைவர்களுள்ஒருவரானமருத்துவ நிபுணர்பூ.லக்ஸ்மன்தெரிவித்தார். தமிழ்மக்கள்பேரவையின் கூட்டத்தில்நேற்றுஉரையாற்றுகையிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பதவியை மையப்படுத்தி முடிவுகள் எடுக்கக் கூடாது. எமது முடிவுகள்எதுவும்பதவியைமையப்படுத்திஎடுக்கப்பட்டதும்அல்ல. அப்படிப்பட்டபதவியைமையப்படுத்திஅதன்கணக்கில்எடுக்கப்படும் முடிவுகள் எமது தேசத்தின் நீண்ட நாள் நலனுக்கு உகந்ததல்ல. பொதுவாக அரசாங்கங்கள் மாறுகின்ற போதும் அரசுகளின் நிலைப்பாடுகள் மாறுவதில்லை. அந்த வகையில் இங்கும்அரசாங்கங்கள்மாறியபோதும்சிறிலங்காஅரசானதுஇந்த இலங்கைத்தீவுசிங்களபௌத்தர்களுக்கேசொந்தமானதுஎன்பதிலும்ஏனையவர்களைஇரண்டாம்தரகுடிமக்களாக்குவதிலும் மிகஉறுதியாகவும்தெளிவாகவும் இருந்தது.

எமதுமக்களின்கொள்கைஉறுதியாலும்மற்றும்எம்தேசத்தின் புவிசார் அமைவிடத்தினால் எமக்கென திறந்திருந்த வாய்ப்புக்களைமறைத்துயதார்த்தஅரசியல்என்னும்போலிவார்த்தைக்குள் அமிழ்த்தி ஏதாவது கிடைத்தாலே பெரும் பேறு என்னும் கருத்துருவாக்கத்தைஎம்மக்கள்மத்தியில்விதைக்கத்தொடங்கியது. தமிழ்த் தேசிய இனம் என்னும் அங்கீகாரம் மற்றும் அடையாளம்மற்றும்அதனால்இந்தஇலங்கைத்தீவில்எமக்கு உரித்தாகவேண்டியஉரிமைகள்போன்றவற்றைநிராகரித்து அந்ததேசியஇனஅடையாளத்துக்குஅங்கீகாரமளிக்காதுவழியான அனைவரும் இலங்கையர் எனும்லிபரல்முலாம்பூசிய திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டது.

வன்வலு போர் மூலம் அடக்க முடியாமல் போன மக்களின் அரசியல் விருப்பை இனத்தின் இருப்புக்கு அத்தியவசியான பாதுகாப்பு என்று கருதிய எமது இனத்தின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை எண்ணிலடங்கா அர்ப்பணிப்புகள் மூலம் கட்டிக்காத்து வந்த எமது வேணாவாக்களை மென்வலு மூலம் மெல்ல மெல்ல அழிக்கும் முயற்சியை அரசு முன்னெடுக்கத் தொடங்கியது.

எம் மக்களின் கொள்கைப் பற்றும் மக்கள் மயப்படுத்தப்பட்ட எழுச்சியுமே எமது இனத்தின் விடுதலைப் பயணத்தை முன்நகர்த்தக்கூடிய வழி முறைகள் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. அதேவேளை எந்தவொரு அதிகாரத்தில் உள்ள தரப்பும் அரசியல் ரீதியாக மக்கள் விழிப்புணர்வு அடைவதையோ அல்லது மக்கள் மயப்படுத்தப்பட்ட அசைவியக்கங்களையோ வரவேற்பதில்லை.

கொள்கை வழி நின்று அதற்காக எத்தனையோ அர்ப்பணிப்புகளை செய்த இனம் இன்று வெறுமனே தேர்தல் மைய அரசியலிலும் கதிரை எண்ணிக்கை அரசியலிலும் கட்சி விசுவாச அரசியலிலும் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

தேசியம் என்பது வாக்கு வங்கிக்கான ஒரு விற்பனைச் சுட்டி கூடிய பொருளாகவே இன்று கணிக்கப்படுகின்றது. எம்மைப் பொறுத்த வரையில் தமிழ் தேசியம் என்பது வெறுமனே ஒரு கோசமல்ல. அதுஎமதுஆன்மாவோடுஇணைந்தவாழ்வு. ஒரு வாழ்வுமுறை.

தமிழ்த்தேசியசிந்தனைசிதைவுக்காகஎடுத்துக்கொண்ட இன்னொருகளம்தேர்தல்அரசியல். எம்ஆன்மாவாககலந்துநின்ற இந்ததேசியஉணர்வைவெறுமனேதேர்தல்கோசமாகமாற்றி அதனைத் தேர்தல் சந்தையில் விற்பனைச் சுட்டி கூடிய பொருளாக மட்டும் முன்செல்லவிட்டனர்.

அறிந்தோ அறியாமலோ தேர்தல் வெற்றி தான் இலக்கு எனும் மாயையினுள் வெற்றிப்போதையினுள் வீழுந்த எம் சமூகம் தேசிய உணர்வின் உண்மையான அர்த்தத்தை மெல்ல மெல்லமறந்துவருகிறதோஎன்கின்றகவலைஒருபொறுப்புள்ள சமூக இயக்கமாக பேரவையிடம் உள்ளது. பலம் பொருந்திய ஒருங்கிணைக்கப்பட்ட அரசு ஒன்றின் திட்டங்களை சமூகம் ஒன்றைச் சேர்ந்த மக்கள் எதிர்கொள்வது சுலபமான காரியம் அல்ல. உண்மையில் இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நேரத்தில் எம்மக்களுக்குதேவையானதுமக்கள்மயப்படுத்தப்பட்டதமிழ் தேசியகொள்கைவழியிலானதேசிய இயக்கமொன்றைமக்களின் விழிப்புணர்வினால் உருவாக்கக்கூடிய தேர்தல் அரசியலைமுன்னிலைப்படுத்தாதஒருபரந்துபட்டமக்கள்இயக்கமே எமது அரசியலை முற்கொண்டு செல்வற்கு எமக்கு இன்று அவசியமானதாகும். அர்ப்பணிப்பும் கொள்கைத் தெளிவும் தீர்க்கமான துரநோக்கும் தேர்தல் வெற்றி தோல்விகளாலோ அல்லதுஅகப்புறஅழுத்தங்களாலோஇனநலனைவிட்டுக்கொடுக்காத ஒரு திடமிக்க அரசியல் அசைவியக்கமொன்றும் எம் தாயக மண்ணில் உறுதியாக எழுந்தாலேயன்றி இந்தச் சவாலைநாம்வெற்றிகொள்ளமுடியாது. வெறுமனேஎண்ணிக்கையின்பாற்பட்டஒற்றுமைஎன்பதுநடைமுறையதார்த்தத்தை விளங்கவிட்டது. எம்மைக்கட்டிவைத்திருக்கும்மாயையாகவே நாம்கருதுகின்றோம். உண்மையில்ஒற்றுமைஎன்பதுகொள்கையின் பாற்பட்டதாக அதன் மேல் கொண்ட அர்ப்பணிப்பின் பாற்பட்டதானதாக இருக்க வேண்டும் என்பதைத்தான் தமிழ் மக்கள்பேரவையின் ஆரம்ப நாள் முதல் நாம் வலியுறுத்தி வருகின்றோம். இனத்தின் நலனைக் கருத்தில் கொண்டு எம் இனத்தின் பெயரால் நடந்த அர்ப்பணிப்புக்களை கருத்தில் கொண்டு தமிழ்தேசத்தின்நீண்டகாலநலனைகருத்தில்கொண்டுஇன்று எம்இனம்நிற்கின்றமுக்கியமானசூழலைக்கருத்தில்கொண்டு கொள்கையினால்ஒத்திசைபவர்கள்அனைவரும்ஒன்றாககரம் கோக்கமுன்வருமாறுவேண்டிக்கொள்கின்றோம்என்றார். (5)

## நீர்ப்பாசனத் திணைக்களத்தின்

# அசமந்தப் போக்கினால் கடலில் கலக்கும் மழைநீர்

### முசலிப் பிரதேச சபை தவிசாளர் சுபிகான் குற்றச்சாட்டு

**மன்னார்,ஒக். 25**
**மன்னார் முசலிப் பிரதேசத்தில் குளங்கள் எதுவும் சீரமைக்கப்படவில்லை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அசமந்தப் போக்கினால் மழைநீர் சேமிக்கப்படாமல் கடலில் கலக்கின்றது என முசலிப் பிரதேச சபை தவிசாளர் சுபிகான் குற்றஞ்சாட்டியுள்ளார் .**

மன்னார் மாவட்டம் கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக அதிகூடிய வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் மன்னார் மாவட்டத்தில் மிக முக்கியமான பெரிய குளங்கள் வற்றி மிக ஆழம் கொண்ட கிணறுகளில் கூட தண்ணீர் இல்லாமல் போகவே மக்கள் தண்ணீருக்காக பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தார்கள்.

ஆனால் மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களாக நல்ல மழை வீழ்ச்சி ஏற்பட்டு ,வயல்கள் சிறு குளங்கள் மட்டுமல்லாது பெரிய குளங்களிலும் தண்ணீர் நிறைந்து காணப்படுவதால் .சில விவசாயிகள் வயல்களை விவசாயத் திற்கு தயார் படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் முசலிப் பிரதேசத்தில் உள்ள குளங்கள் எதுவும் சீரமைக்கப்படாமையால், மழை நீர் முற்று முழுதாகக் கடலில் கலந்துவிடுகிறது .இதனால் பெரும்போகநெற்செய்கை முசலிப்பிரதேசத்தில் கேள்விக்குறியாக உள்ளது .இதற்கான பொறுப்பினை முசலி நீர்பாசனத் திணைக்களமே ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்த தவிசாளர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

முசலிப் பிரதேச மக்கள் கடந்த 2009 ஆம் ஆண்டில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்கள். இவர்கள் பிரதானமாக விவசாயம் கடல்த்தொழில் செய்தாலும் .இவர்களது பிரதான தொழில் விவசாயம் மட்டுமே.

உயிலங்குளத்தில் இயங்கும் நீர்பாசனத் திணைக்களத்தின் உப அலுவலகம், முசலி வேப்பங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த அலுவலகம் அமைக்கப்பட்டாலும் முசலி நீர்பாசனத் திணைக்கள உப அலுவலகத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. காரணம் மன்னார் மாவட்டத்தில் உள்ள மூன்று பெரிய குளங்களில் ஒன்று விளாயடிக்குளம் இது முசலி ப் பிரதேசத்தில் உள்ளது.

இதற்கும் கீழ் ஒன்பது குளங்கள் உள்ளது. இவை நீர்பாசனத் திணைக்களத்துக்கு உரித்தானது. இந்த ஒன்பது குளம் சீரமைப்பிற்கு பெருந்தொகையான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் சீரமைப்புப் பணிகள் நல்ல முறையில் நடைபெறாமல், சிறு தொகைகளுக்குள் மேம்போக்காக செய்து பாரிய ஊழல் மோசடி நடைபெற்றுள்ளதாக சந்தேகிக்கின்றேன்.

சீரமைப்புப் பணியை நீர்பாசனத் திணைக்களம் செய்வதாக காட்டிக் கொண்டு, முசலிப் பிரதேச நீர்பாசனத் திணைக்கள அதிகாரி தனிப்பட்ட முறையில் அரச வேலைத்திட்டங்களை செய்கிறார். இதன் காரணமாகவே முசலிப் பிரதேசத்தின் குளங்கள் சீரமைக்கப் பட்டாமல், குளங்களில் நீர் தங்குதல் இன்றி வீணாகக் கடலில் கலக்கிறது.

இதனால் விவசாயத்தை பல வழிகளில் நம்பி வாழும் மக்கள் எதிர்காலத்தில் என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என முசலிப் பிரதேச சபை தவிசாளர் சுபிகான் தெரிவித்தார்

இந்த குற்றச்சாட்டு பற்றி முசலி சிலாவத்துறைப் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுகிதரனிடம் கேட்டபோது:

இந்தக் குற்றாச்சாட்டானது கண்டிக்கத் தகக்கது. முசலிப் பிரதேசத்தில் அவசரமாக சீரமைக்கப்பட வேண்டிய குளங்கள் சீரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. விளாயடிக் குளத்தின் கீழுள்ள ஆறு குளங்களில் கோரமோட்டை குளம் 16 மில்லியன் ரூபா செலவில் பணி நடந்து கொண்டிருக்கிறது பிச்சவாணிபகுளம் வேலை நிறைவு பெற்றுவிட்டது.

பெரிய குளக்கட்டு வேலைகளின் தரம் கருதி தனியாருக்கு கொடுக்காமல், எமது திணைக்களமே அவற்றை செய்கிறது. நீர்பாசனத் திணைக்களத்திற்கு உரிய சிறிய குளங்கள், வீதிகளை அவ்வூர் விவசாய அமைப்புகளே செய்கிறது. முசலித் தவிசாளரின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. என்னுடன் தனிப்பட்ட கோபத்தினால் பழி தீர்ப்பதற்காக அவர் இவ்வாறு குற்றம் சாட்டுவதாக முசலி சிலாவத்துறை நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்

(213)

# நாலக சில்வாவின் மடிக் கனிணியில் இருந்து சந்தேகத்துக்கு இடமான சான்றுகள் அம்பலம்

கொழும்பு ,ஒக் .25
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை கொலை செய்ய சதி செய்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டு விவகாரத்தில் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் மடிக் கனிணியில் இருந்து சந்தேகத்துக்கு இடமான சில சான்றுகள் சி.ஐ.டி. க்கு கிடைத்துள்ளன.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குச் சொந்தமான அலுவலக மடிக் கணினியில் ரசிகா சஞ்ஜீவனி எனும் பெயரில் பயன்படுத்தப் பட்டுள்ள போலி முகப்புத்தக கணக்கை மையப்படுத்தி இந்த சந்தேகம் எழுந்துள்ள நிலையில், அந்தப் போலிக் கணக் கூடாக அவர் யாருடன் உரையாடினார், என்ன உரையாடினார் என்பதை வெளிப்படுத்த மடிக் கனிணியை அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்ப சி.ஐ.டி. நேற்று முன்தினம் கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்னவின் அனுமதியைப் பெற்றுக்கொண்டது.

அரச தலைவர் மைதிரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச ஆகியோரை கொலை செய்ய சதி செய்யும் விதமாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தொலைபேசியில் கலந்துரையாடியதாக கூறப்படும் விடயம் தொடர்பில், சி.ஐ.டி. முன்னெடுக்கும் விசாரணைகளில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப் பட்டுள்ள இந்தியரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி , குறித்த சதி விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கும் விசாரணைகளின் தற்போதைய நிலைமையை விளக்கும் விதமாக 60 பக்க சிறப்பு அறிக்கையை சமர்ப்பித்தே இந்த அனுமதியை சி.ஐ.டி. பெற்றது.

அத்துடன் ஏற்கனவே அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட இந்த விவகாரத்தின் முறைப்பாட்டாளர் பொலிஸ் உளவாளி நாமல் குமாரவின் தொலைபேசியில் பல தகவல்கள் அழிக்கப்பட்டுள்ளதால், அதனை அந்த தொலைபேசி உற்பத்தி செய்யப்பட்ட ஹொங்கொங் நாட்டுக்கே அனுப்பி அந்தத் தகவல்களை மீளப் பெறவும் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு குரல் சோதனைக்காக அனுப்பப் பட்ட 124 குரல் பதிவுகளில் 123 இல் உள்ள குரல்கள் நாலக சில்வா மற்றும் நாமல் குமாரவினுடையது என்பதை அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## சீரற்ற வானிலையால் வீழ்ந்த மரம்

யாழ்ப்பாணம்,ஒக் .25
யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, யாழ்ப்பாணப் பிரதேச செயலகதின் முன்பாக உள்ள பெரும் மரம் நேற்று மதியம் வீதிக்கு குறுக்கே வீழ்ந்தது. இதனால் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.சிறிது நேரம் போக்குவரத்துக்குத் தடையாக இருங்க மரம் பின்னர் அப்புறப்படுத்தப்பட்டது. (7)



## குருமன்காடு விபத்தில் பெண் படுகாயம்

வவுனியா.ஒக் .25
வவுனியா குருமன்காட்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபைபேருந்துடன் உந்துருளி மோதி விபத்துக்குள்ளாகியதில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற பேருந்து வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் சென்ற உந்துருளியுடன் மோதி விபத்துக்குள்ளாகியது .இதில் உந்துருளியில் பயணித்த பெண் காயமடைந்து வவுனியாமருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (110)

## கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ரூபா 600 மில்லியன் நிதி ஒதுக்கீடு

கொழும்பு ,ஒக் .25
இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த ஆண்டில், 600 மில்லியன் ரூபாவை வழங்குவதாக அறிவித்துள்ளது. இதுதொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் நிதியுதவியுடன் 1.8 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவில் மேற்கொள்ளப் பட்ட கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் மூலம், 9ஆயிரத்து 344 கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருள்களும், 8ஆயிரத்து 637 சிறிய ஆயுதங்களின் வெடிபொருள்களும் மீட்கப்பட்டன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆயுதங்களை அகற்றுதல் மற்றும் குறைத்தல் பணியகத்தின் அதிகாரிகள், ஒக்ரோபர் 8 ஆம் நாள் தொடக்கம் 12 ஆம் நாள் வரை இலங்கையில் மேற்கொண்ட பயணத்தின் போது, அமெரிக்காவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற இவர்கள், மீள்குடியேற்ற அமைச்சு, உள்ளிட்ட அரச அதிகாரிகளையும் சந்தித்தனர்.

## வெளிநாடுகளால் கைவிடப்படும் கப்பல்களை கொள்வனவு செய்யும் இலங்கை

கொழும்பு ,ஒக் .25
ஏனைய நாடுகளின் கடற்படைகள் பயன்படுத்திய கப்பல்களை நல்ல நிலையிலேயே இலங்கை கடற்படை பெற்றுக் கொள்கிறது என்று இலங்கைக் கடற்படையின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் பியால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளின் கடற்படைகளின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட கப்பல்களை இலங்கை கடற்படை வாங்கி வருகிறது.

இதுகுறித்து முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயந்த கொலம்பகே, கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில், இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரி, பாவித்து கழிக்கப்பட்ட போர்க்கப்பல்களை தாம் வாங்குவதை நியாயப்படுத்தியுள்ளார்.


“அவை நல்ல நிலையிலேயே வழங்கப்படுகின்றன. அவற்றை இலங்கை கடற்படை நன்றாகவே பயன்படுத்திக் கொள்கிறது.

இவ்வாறான கப்பல்களை அண்மைக்காலத்தில் இலங்கை கடற்படை பல முக்கியமான கடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியிருக்கிறது.

கடந்த ஓகஸ்ட் மாதத்திலும் கூட, பாவித்துக் கழித்த போர்க் கப்பல் ஒன்றை அமெரிக்கா வழங்கியிருந்தது. அடுத்த ஆண்டு இந்தக் கப்பல் இலங்கைக்கு கொண்டு வரப்படும். இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகளில், இந்தக் கப்பல் முக்கியமான பங்கை வகிக்கும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளவாய்க்கால் துப்புரவாக்கப்பட்டது

பண்டத்தரிப்புநகர்ப்பகுதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வெள்ளவாய்க்கால்அண்மையில்துப்புரவுசெய்யப்பட்டது.
வலி.தென்மேற்குப்பிரதேசத்தில் பண்டத்தரிப்புப் பட்டினத்தில் 4ஆம் வட்டாரத்தில்நகர்ப்பகுதியில்அராலி - தெல்லிப்பழை காப்பெற் வீதியோரமாக அமைந்துள்ளவெள்ளவாய்க்கால் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்தது. இந்த நிலை குறித்து வலி. தென்மேற்குப் பிரதேசசபை 4ஆம் வட்டார உறுப்பினர் ஜிப்ரிக்கோ வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தமையைத்தொடர்ந்து, அதிகார சபையின் ஊழியர்கள்இணைந்துகுறித்த வெள்ள வாய்க்காலை அண்மையில் துப்புரவு செய்தனர். (ம-115)



சாவகச்சேரிநகரசபையின்சாவகச்சேரிபொதுநூலகத்தினர் தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு ஆரம்பப்பிரிவுமாணவர்களுக்கிடையில்பல்வேறுபோட்டிகளைநடத்திவருகின்றனர். அந்தவகையில்சாவகச்சேரிநகரசபைஎல்லைக்குட்பட்டபாடசாலைகளில்மூன்றாம்தரத்தில்கற்கும்மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நேற்றுமுன்தினம் நூலக மண்டபத்தில்நடைபெற்றது. (ம-9)

## ஞானச்சுடர்சஞ்சிகைவெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 25
தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மிகச் சஞ்சிகையின் ஐப்பசி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.
ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் தலைமையில் காலை10.30மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-173)

## வடமராட்சிகிழக்குப்பகுதியில்

# 300ஏக். நிலப்பரப்பில் புதிதாக நெற்செய்கை

**யாழ்ப்பாணம், ஒக். 25**
**வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, நித்தியவெட்டை ஆகியபிரதேசங்களில்இம்முறைகாலபோகநெற்செய்கையின் போது முந்நூறு ஏக்கர் வரையிலான வயல் நிலப்பரப்பில் நெற்செய்கையாளர்கள் புதிதாக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.**

அண்மையில்விடுவிக்கப்பட்டஇந்தப்பிரதேசங்களில் உள்ள வயல்கள் செய்கை இன்றியும் பற்றைகளாகச் சூழ்ந்தும் தரிசு நிலங்களாகவும் காணப்பட்டன. வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் இந்த வயல்களைத் துப்புரவு செய்து உரியவர்களிடம் அண்மையில்கையளித்தது. இதையடுத்தே இந்தவருடம்காலபோகநெற்செய்கைஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் அவ்வாறு புதிதாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதேசமயம் குடத்தனை, மருதங்கேணி, வத்திராயன், போக்கறுப்புபோன்றபிரதேசங்களிலும்செய்கையாளர்கள்காலபோகநெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-17)

### தமிழ் மொழி விழா

யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் தமிழ் சங்கம் நடத்தும் தமிழ் மொழி தின விழா கல்லூரியின்குமாரசுவாமிமண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-8)

## காலாவதி உணவுகள் தீக்கிரை


மிருசுவில் உசன் பகுதியில் வர்த்தக நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பிஸ்கட் வகைகள் பொது சுகாதாரப் பரிசோதகரால் மீட்கப்பட்டு வர்த்தகரின் ஒப்புதலுடன் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து எரியூட்டி அழிக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ. குணசாந்தன் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் உசன் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட போது இந்த பிஸ்கட்டுக்கள் அடையாளம் காணப்பட்டன. வர்த்தகர் தனது தவறினை ஏற்றுக் கொண்டதையடுத்து அவரை எச்சரிக்கை செய்த சுகாதாரப் பகுதியினர் அவரின் சம்மதத்துடன் பொதுமக்கள் முன்னிலையில் பிஸ்கட்டுக்களை எரியூட்டி அழித்தனர். (ம-9)

## தொற்றாநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள்

கொடிகாமம் ஒக். 25
நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் இலங்கை நீரழிவுச் சங்கத்தினருடன் இணைந்து இலவச நீரழிவு மற்றும் தொற்றாநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நாளைமறுதினம் நடத்தவுள்ளனர்.
நாச்சிமார் கோவிலடி மீனாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் நாளை மறுதினம் காலை 8 மணிக்கும், கட்டப்பிராய் முத்துமாரி அம்பாள் கோவில் கல்யாண மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கும் இந்த விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 25
உடுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.
பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் பிற்பகல் 2மணிக்குஇடம்பெறும்இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின்பணிப்பாளர்தங்கமுத்துசத்தியமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நடராஜா காண்டீபன், சட்டத்தரணி அருணானந்தன் கிருஷ்ணவேணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)



ஊவா வெல்லச பல்கலைக் கழக தமிழ் மாணவர்களின் ஏற்பாட்டிலும் வழிநடத்தலிலும் உதயனின் ஊடக அனுசரணையிலும் 2018ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நேற்றுநடைபெற்றது. மாணவர்களின் விஞ்ஞான மற்றும் கணித அடைவுமட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (ம-7)

## தென். கிழக்கு ப.நோ.கூ. சங்க புதிய இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 24
தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை கடும் போட்டிகளுக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்டது.
சங்கத்தின் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபைக் கூட்டம் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்க மண்டபத்தில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் விமல்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.
சங்கத்தின் 19 கிளை நிலையங்களைச் சேர்ந்த மொத்தம் 99 பொதுச்சபை உறுப்பினர்களில் 98 உறுப்பினர்கள் கூட்டத்துக்கு சமூகம் கொடுத்தனர்.
கூட்டத்தின் ஆரம்பத்திலேயே சங்கத்துக்கான புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு கடும் போட்டி ஏற்பட்டது. இரண்டு அணிகளுக்கிடையே போட்டி ஏற்பட்டதால் பின்னர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்கள் தெரிவானார்கள்.
சங்கத்தின் புதிய தலைவராக இ. அ. அனந்தராசா, உபதலைவராக ப. கோடிஸ்வரநாதன் ஆகியோர் தெரிவானார்கள். வை. பூபதி, மு.சி. கந்தையா, அ. திருநாவுக்கரசு, த. தேசநேசன், சிரூபா ஆகியோர் இயக்குநர்களாகத் தெரிவானார்கள். (ம-17)

## ஆங்கில மொழித் தின விழா

பளை, ஒக். 25
பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் ஆங்கில மொழித் தின விழா நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.
அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ.எஸ்.சுதர்சன் கலந்து கொண்டார். (ம-9)



## தென்மராட்சிகல்விவலயத்தின் ஆங்கில மொழித் தின விழா

சாவகச்சேரி, ஒக். 25
தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆங்கிலமொழித் தின விழா நிகழ்வுகள் நாளைமறுதினம் காலை 9 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. பாலரதனியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வுபெற்ற ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி திருக்குமரனும் கலந்து கொள்வர்.
விழாவில், தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட மாகாண ஆங்கில விருத்தி கற்கைநெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கும் வலய நிலை ஆங்கில மொழித் தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ம-9,159)

# யாழ். விரைவு தபால் சேவைகள் மேலும் பரவலாக்கப்படத் திட்டம்

## யாழ்ப்பாண முதன்மைத் தபாலகம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 25**

**யாழ்ப்பாண மாவட்டத்துக்கான விரைவு தபாலகச் சேவைகள் மேலும் பரவலாக்கம் செய்யப்படவுள்ளன என்று யாழ்ப்பாண முதன்மைத் தபாலக வட்டாரம் தெரிவித்தது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தபால் சேவைகளை துரிதப்படுத்தும் நோக்கில் தபாலகங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கோப்பாய், வட்டுக்கோட்டை, கொக்குவில் ஆகிய மூன்று தபாலகங்களுக்கு நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விரைவு தபால்ச் சேவைகளில் மக்கள் அதிக நாட்டம் காட்டி வருவதை அடுத்தே, விரைவு தபால்ச் சேவைகளை படிப்படியாக பரவலாக்கம் செய்ய யாழ்ப்பாணம் முதன்மைத் தபாலகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# மக்களுக்கான ஆத்மார்த்தமான சேவைக்கு என்றும் துணையிருப்பவை தபாலகங்களே!

## பிரதி அஞ்சல்மா அதிபர் மதுமதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

"எத்தனையோ நிறுவனங்கள் இன்று இருந்தாலும் மக்களுக்கு ஆத்மார்த்தமான சேவையை தபாலகங்களே வழங்குகின்றன" என்று தெரிவித்தார் பிரதி அஞ்சல்மா அதிபதி நாயகம் திருமதி மதுமதி வசந்தகுமார். அளவெட்டிப் பகுதியில் அமைக்கப்பட்ட தபாலகம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"எத்தனையோ நிறுவனங்கள் இன்று இருந்தாலும் மக்களுக்கு ஆத்மார்த்தமான சேவையை தபாலகங்களே வழங்குகின்றன. மக்கள் தமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை தபாலகங்கள் மூலமாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்தில் தபாலகங்கள் தமது இருப்பை படிப்படியாக இழந்து வருகின்றன என்ற மாஜையை இல்லாமல் செய்யலாம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-63,17)





# மாணவர்களுக்கு உதவிப் பொருள்கள்

தென்மராட்சி, ஒக். 25

வரணி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 'பள்ளி நிழல்கள்' அமைப்பினர், கல்லூரியில் கல்வி கற்கும் பெற்றோரை இழந்த மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 92 மாணவர்களுக்கு உதவிப் பொருள்களை கடந்த வியாழக்கிழமை வழங்கினர். 12 மாணவர்களுக்கு ஈருருளிகளும் 80 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் அவ்வாறு வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியில் கடந்த 2007 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர வகுப்புகளிலும் 2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்புகளிலும் கல்வி கற்ற மாணவர்களால் கடந்த வருடம் 'பள்ளிநிழல்கள்' என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு பிரதேசத்தில் பெற்றோரை இழந்த மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த கற்றலில் ஆர்வமுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் நோக்குடன் செயற்பட்டு வருகிறது. தனது செயற்திட்டத்தின் ஒரு பகுதியாகவே அந்த அமைப்பு இந்த உத்விகளை மேற்கொண்டது. (ம-9,159)

# உழவர் சந்தையை அமைக்க காணி வழங்கக் கோரிக்கை

சாவகச்சேரி, ஒக். 25

தொழில்நுட்பத் திணைக்களத்தினால் சாவகச்சேரி பொதுச் சந்தையை அண்மித்த பகுதியில் உழவர் சந்தை அமைப்பதற்குக் காணி வழங்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரைக் கோரியுள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருள்களை நுகர்ச்சியாளர்களுக்கு வழங்குவதற்கு குளிர்சாதன வசதிகளுடன் கூடிய கட்டடம் அமைத்து தினசரி உழவர்களால் கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப் பொருள்களை நுகர்ச்சியாளர்களுக்கு வழங்குவதற்கு உழவர் சந்தை அமைக்க தொழில்நுட்பத் திணைக்களம் ஏற்பாடுகள் செய்துள்ளது. இதற்காகவே காணியொன்றுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-9,159)

# உந்துருளிகள் விபத்து இருவருக்குக் காயம்

சாவகச்சேரி, ஒக். 25

நுணாவில் பகுதியில் ஏ9 முதன்மைச் சாலையில் நேற்று முன்தினம் இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவருக்குக் கால் முறிந்தது.

ஒழுங்கையிலிருந்து முதன்மைச் சாலைக்கு வந்த உந்துருளியும் முதன்மைச் சாலையில் பயணித்த உந்துருளியுமே அவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கால் முறிந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம-9)

# வளவாளர்கள் விண்ணப்பிக்குக

சாவகச்சேரி, ஒக். 25

உயர்கல்வி மற்றும் கலாசார அலுவலர்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக காரைநகர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2019ஆம் ஆண்டில் சில பாடநெறிகளைக் கற்பிப்பதற்கான வளவாளர்களை (ஆசிரியர்கள்) இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.

கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், கர்நாடக மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக் கலை, நாடகமும் அரங்கியலும், வாத்தியக் கருவிகள், கைவினைக் கலைகள், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கே அவ்வாறு வளவாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை (தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக) எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னதாக 'கலாசார மத்திய நிலையம், காரைநகர்' என்னும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கமால் வீதி வயல் ஒழுங்கையை சீரமைக்கும் பணிகள் ஆரம்பமாகின



யாழ்ப்பாணம், ஒக். 25

வடமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் வேண்டுகோளுக்கு அமைய மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் சுமார் 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கமால் வீதி வயல் ஒழுங்கையைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேற்படி ஆரம்ப நிகழ்வு கடந்த 17ஆம் திகதி வயல் ஒழுங்கை ஆரம்பிக்கும் இடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வானது கமால் வீதி மக்களின் ஏற்பாட்டில் யாழ் மாநகரசபை முதல்வரின் 13ஆம் வட்டார இணைப்பாளர் ஜனாப் ஏ.ஜி.நௌபரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட், யாழ் கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் உப தலைவர் எம்.எல்.லாபிர், செயலாளர் ஏ.சி.எம். மஹானாஸ், உபபொருளாளர் ஏ.சி.நைசர், உப செயலாளர் ஐ.எல். நிராஸ். ஜே86 முதியோர் சங்கத்தலைவர் சிவஞானம் மற்றும் யாழ். பெண்கள் அபிவிருத்தி மைய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம)



வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கண்டாவளை சமூகசேவை உத்தியோகத்தர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ம-159)

# வினைத்திறன் கொண்டோரை உருவாக்குவது எமது கடமை

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவிப்பு

**கிளிநொச்சி ,ஒக் .25**

**எமது சமூகத்தின் எதிர்காலச் சந்ததிகளை மிகவும் வினைத்திறனுள்ளவர்களா உருவாக்க வேண்டியது எமது ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும் எனப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நூலகரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு இடம்பெறுகின்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் ஒரு பகுதி நேற்று முன்தினம் பளை பொது நூலகத்தில் இடம்பெற்றது.

இங்கு கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கருத்து தெரிவித்த அவர் - எமது பிரதேசத்தின் சிறார்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதுடன், அவர்களுக்கு நூல்களைத் தேடிப் படிக்கும் சிந்தனையையும், அத்தோடு சமூகத்துக்கு சேவை செய்யக்கூடிய மனநிலைகளையும் வளர்த்தெடுக்கவேண்டும். இதன் மூலமே எமது இனத்திற்குச் சிறந்த எதிர்கால சந்ததிகளை உருவாக்க முடியும் எனவும் தெரிவித்ததுடன்,

இது பெற்றோர்களிடமும் சமூகத்திடமுமே உள்ளதாகவும், இந்த விடயத்தில் எல்லோரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.



## புனித 'யோசவ் வாஸ்' சிலுவை மன்னாருக்கு கொண்டு வரப்பட்டது

மன்னார் ,ஒக் .25

குருநாகல் மறைமாவட்டத்தின் கல்கமுவ பங்கின் , மகா கல்கமுவ என்னும் இடத்தில் உள்ள 'யோசவ் வாஸ்' இன் அற்புத சிலுவை நேற்று முந்தினம் மன்னார் மறை மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மறை மாவட்டத்தின் அருட்பணி எல்லைப் பகுதியான முழங்காவில் பங்கு மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணி எல்லைப் பகுதியான தேவன்பிட்டிப் பங்கு ஆகியவற்றின் மையப் பகுதியில், மன்னார் சங்குப்பிட்டி பிரதான பாதையில் வைத்து யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. ஜோசவ் ஜெபரெட்ணம் அடிகளார் ,மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையிடம் சிலுவையை கையளித்தார்.

குறித்த நிகழ்வுக்கான பங்கு ஆயத்தங்கள் அனைத்தையும் பங்குத் தந்தை அருட்பணி. எ. டெனி கலிஸ்ரஸ் மேற்கொண்டிருந்தார்.

மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. ச. சத்தியராஜ், மாந்தைப் பங்குத் தந்தை அருட்பணி. ச. மரியதாஸ் லீயோன், பறப்பாங்கண்டல் பங்குத் தந்தை அருட்பணி. றஜனிகாந், விடத்தல்தீவுப் பங்குத் தந்தை அருட்பணி. அருட்குமரன், மறைமாவட்ட தூய யோசவ்வாஸ் பணிக்குழு இயக்குநர் அருட்பணி. க. அருள்பிரகாசம் ஆகியோர் நிகழ்வுக்கு வருகை தந்தனர்.

குறித்த இடத்தில் இருந்து தேவன்பிட்டிப் பங்கின் சிற்றாலயமாகத் திகழும் தூய யோசவ்வாஸ் சிற்றாலயத்திற்கு மோட்டார் பவனியோடும், பாடசாலை மாணவர்களின் மேலை நாட்டு இசைக் கருவிகளின் மகிழ்வொலியோடும் தூய யோசவ் வாஸ்சின் அற்புத சிலுவை அழைத்து வரப்பட்டு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம் பெற்றது. (56)

## பரதநாட்டியத்தில் முதலிடம் பெற்றவருக்கு மதிப்பளிப்பு



முல்லைத்தீவு.ஒக் .25

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடமாகாணம் தழுவிய பரதநாட்டியப் போட்டியில் மேற்பிரிவில் முதல் இடம் பெற்ற முள்ளியவளை வற்றாப்பளை மகாவித்தியாலய மாணவன் செல்வன் ஜெனார்த்தனனையும் பயிற்சி வழங்கிய ஆசிரியை ஜஸ்மினியையும் மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

வற்றாப்பளை மங்களேஸ்வரா சனசமூக நிலையமும் ,மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலக கணக்காளர் றெஜினோல்ட் ,சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவிஆணையாளர் செல்வி இராஜமல்லிகைஆகியோர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடனத்தில் மாணவன் ஒருவன் முதலிடம் பெற்றுள்ளமை மாணவர்களின் திறமையினை வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைந்துள்ளது. அதனை ஊக்கிவிக்கும் நோக்கிலும் மாணவர்கள் மத்தியில் ஆர்வத்தினை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மங்களேஸ்வரா விளையாட்டுக்கழக மூத்த உறுப்பினர் அரசரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதன்போது நடனத்தில் முலிடம் பெற்ற மாணவன் செல்வன் ஜெனார்த்தனனுக்கும் நடனப் பயிற்சி ஆசிரிய்ரு க்கும் பரிசில்களும், நினைவுப் பொருள்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ரி -3)

## பாலியல், இனப்பெருக்க சுகாதாரத் திட்டம் நிறைவு

கிளிநொச்சி, ஒக். 24

போருக்கு பின்னரான வடக்கு மகாணத்தில் பெண்கள் மற்றும் இளையோரை இலக்காகக் கொண்ட பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத் திட்டம் வெற்றிகரமான அடைவுகளுடன்நிறைவடைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர் .


நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நண்பர்கள் விடுதியில் ஏற்பாட்டாளர்களால் குறித்த நிறைவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, ஊடகவியளார்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதில் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடந்த மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள், அவற்றின் அறிக்கைககள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்த நிகழ்வில் மருத்துவர்கள் ,நிறுவன பிரதிநிதிகள் இளையோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (6)



## ஈருருளிகள் வழங்கல்

வவுனியா ,ஒக் .25

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலய மாணர்களில் .பாடசாலை மட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவி ஜனுஸா , மாணவன் அபிநயன் ஆகியோருக்கு பிரான்ஸ் நாட்டில் வதியும் பரராஜசிங்கம் ரகுவரன் .சுவிஸ் பாலேஸ்வரன் சுதர்சினி ஆகியோரின் அனுசரணையில் ஈருருளிகள் பாடசாலை அதிபரால் வழங்கி வைக்கப்பட்டது. (222)



## கைகலப்பில் நால்வர் காயம்

முல்லைத்தீவு ,ஒக் .25

முல்லைத்தீவு உடுப்புக்குளம் உப்புமாவெளிப் பகுதியில் 22 ஆம் திகதி இரவு .இரு குடும்பங்களுக்கு இடையில் இடம்பெற்ற அடி தடியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது 54 அகவையுடைய இந்திரன், அவரது மனைவியான 52 அகவையுடைய இ.கமலாம்பிகை .இவர்களின் மகனான 21அகவை பார்த்தீபன் ,மற்றும் இவர்களுடன் 21 அகவையுடை பொ.சுயீவன் ஆகியோர் காயங்களுக்கு உள்ளான நிலையில் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள்னர் .


சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ரி -3)

## ஒட்டுசுட்டான் வீதியில் விபத்து: ஒருவர் ஆபத்தான நிலையில்

முல்லைத்தீவு ,ஒக் .25

முள்ளியவளை ஒட்டுசுட்டான் வீதியின் தேக்கங்காட்டுப்பகுதியில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் பொல்கொல்லையினைச் சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ,ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் பொதுமருத்துவமனை கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்த விபத்தில் பொல்கொல்ல பகுதியினைச் சேர்ந்த 28 அகவையுடைய உசைன் என்பவர் கால் முறிந்த நிலையில் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அதே பகுதியினைச் சேர்ந்த 62 அகவையுடைய முகம்மது அனிபா சோக்கார்தீக் என்பவர் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாபாரத்திற்காக தெற்கில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த இவர்களின் ஊர்தி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. (ரி -3)



# நீர்த்தாங்கியை எடுத்துச் சென்ற கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை

முல்லைத்தீவு ,ஒக் .25

**முள்ளியவளை ஐயனார் குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு பகுதிகளில் மக்கள் குடிதண்ணீருக்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், பிரதேச சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ஐயனார் குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு பகுதிகளில் நீர்தாங்கி வைத்து மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்று வந்தது.**

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஐயனார் குடியிருப்பு பகுதியில் வைக்கப்பட்ட இரண்டு நீர்த்தாங்கிகளும் மற்றும் கேப்பாபிலவு பகுதியில் வைக்கப்பட்ட இரண்டு நீர்தாங்கிகளும் பிரதேச சபையினரால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரதேச சபை உறுப்பினர் செல்வாவைக் கேட்டபோது பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு எதுவித அறிவிப்பும் இன்றி குறித்த இரண்டு பகுதிகளிலும் இருந்து தண்ணீர்த் தாங்கிகளை எடுத்து சென்றுள்ளார்கள். உரிய முறைப்படி அனுமதி பெறாது தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளது .பொதுவான ஒரு இடத்தை தெரிவு செய்து மக்களுக்கு பயன்படும்வகையில் தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்படாமையாலேயே அவை அகற்றப்பட்டுள்ளதாகா கருத முடிகிறது . தற்போது மழை பெய்துள்ள நிலையிலும் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை. இதுதொடர்பாக கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தலைவரிடம் கேட்ட போது - இவ்வாறான நடவடிக்கையினால் மக்கள் குடிநீரினை பெற்றுக் கொள்ள சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தன்னிடம் முறையிட்டுள்ளதாகவும், சில நடைமுறை சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் உடனடியாகச் சீர் செய்து மக்களுக்கு குடிதண்ணீரை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

(ரி3)



## தொழில்நுட்பக் கல்லூரியில் நவராத்திரி வழிபாடுகள்

வவுனியா.ஒக் .24

வவுனியா தொழில்நுட்ப கல்லூரியில் நவராத்திரி வழிபாடுகள் கல்லூரியின் அதிபர் நற்குணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவை சிவ.கஜேந்திரகுமார் நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் பட்டி மண்டபமும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (110)



## சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம்

கிளிநொச்சி,ஒக் .25

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 8 பேர் நேற்று முன்தினம் மாவட்ட நீதிபதியின் முன்பாக சமாதான நீதிவான்களாகச் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மு.சிவமோகன் , பிறேம்குமார், ஆர். இராஜரட்ணம், ந.அர சரத்தினம்,ஆகியோருடன் ச.பூலோகராசா, சிவதாசன்,சி. சிவேந்திரன்,வீ.இராசகுலசிங்கம் ஆகியோர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். (105)

## ஆபத்தான நிலையில் கிளிநொச்சி சிறுவர் பூங்கா

கிளிநொச்சி,ஒக் .25

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருக்கில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா ஆபத்தான நிலையில் காணப்படுகிறது எனப் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சிறுவர்களுக்குரிய விளையாட்டுப் பொருள்களில் பல உடைந்தும், உடைந்து விழும் நிலையிலும் காணப்படுகிறது. இது தொடர்பில் பூங்காவை ஆளுகை செய்யும் கரைச்சி பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும், அவர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்வில்லைஎன்றும், அங்குசெல்லும்சிறுவர்களுக்கும் அவர்களை அழைத்துச்செல்லும் பெற்றோர்களுக்கும் கட்டணத்தை அறவிட்டு வருகின்றனர் எனவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துப் பெறுவதற்குக் கரைச்சிப் பிரதேச சபையின் செயலரைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முற்பட்டபோது பயனளிக்கவில்லை. (214, 35)

## மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

கிளிநொச்சி ,ஒக் .25

கிளிநொச்சி பூநகரி சிறி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று பகல் 11.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.லெலின்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தேசிய சகவாழ்வு நல்லிணக்க அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.


## மரம் நடுகை செய்த சிறுவர்கள்

வவுனியா .ஒக் .25

அரச தலைவரின் தேசிய மரம்நடுகை செயற்திட்டத்தை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடும் செயற்பாடு வவுனியா மாளிகை கிராம அலுவலர் பிரிவில் நேற்று நடைபெற்றது.

மாளிகை கிராம அலுவலர் நா.சிறிதரனின் தலைமையில் நொச்சி அரும்புகள் சிறுவர் கழக சிறார்களால் மாளிகை கிராம வீதியோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (110)





## பொது மயானத்துக்கு குழாய்க்கிணறு அமைப்பு

வவுனியா,ஒக் .25

வவுனியா இறம்பைக்குளம் பொது மயானத்திற்கு நேற்றுக் காலை குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை உப தவிசாளர் சு. குமாரசாமியின் வேண்டுகோளின் அடிப்படையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மீள்குடியேற்றப்பிரதி அமைச்சருமான கே. காதர் மஸ்தானின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. இதில் சுகாதாரப்பரிசோதகர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள் உழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## உண்மையுடனும் நேர்மையுடனும் மாணவர்கள் இருக்கவேண்டும்

### மருத்துவ கலாநிதி எஸ்.லோகநாதன் தெரிவிப்பு

மன்னார்,ஒக் .25



ஒவ்வொரு மாணவரும் எப்போதும் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், அதே போன்று இந்த வயதில் தான் முறையாக கற்றுத்தேற வேண்டும் என ஆயுள்வேத மருத்துவ கலாநிதி எஸ் .லோகநாதன் தெரிவித்தார்.

மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியில், கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எவ். விஜயதாசன் தலைமையில் நடைபெற்ற வாணிவிழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலக இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஆனந்தராசா ஜீவிதா விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டு உரையாற்றினார். (60)



## "தமிழினி" சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு

கொடிகாமம் ,ஒக். 25

சமரபாகு சீனா உதயகுமாரின் "தமிழினி" சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் 12.5 மணியளவில் அக்கராயன் மகா வித்தியாலயத்தின் மண்டபத்தில் அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர் தி.நீதிராஜாவும், வெளியீட்டுரையினை ஆசிரியை திருமதி சி.நந்நினியும் நிகழ்த்தினர்.

அம்பலப்பெருமாள்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் செ.நிசாந்தன் முத்ற்பிரதியைப் பெற்றார். நூல் ஏற்புரையைக் கிளி அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர் கிருஷ்ணானந்தன் நிகழ்த்தினார். (159)

# திருப்தியளிக்காது முடிவடைந்த காணி தொடர்பான கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.25

படையினர் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள தனியார் காணிகளையும், அரச காணிகளையும் மக்கள் பாவனைக்கு வழங்குவதற்காக அரச தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கூட்டங்கள் திருப்தியளிக்கும் வகையில் நடைபெறவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், இராணுவத்தினர், கடற்படையினர், வான்படையினரிடம் உள்ள காணி விடயங்கள் பேசப்பட்டன. இறுதி முடிவுகள் எவையும் எடுக்கப்படாதபோதும் ஆரோக்கியமான விடயங்கள் பேசப்பட்டன. அவற்றை அரச தலைவருக்குத் தெரியப்படுத்துவேன் என்று கூறியுள்ளார் என்றார்.

பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவில்லை என்ற ஆதங்கம் எமக்கு ஏற்பட்டது. கூட்டத்தில் கடற்படையினர் கோபத்துடன் காணப்பட்டார்கள். தமது சொந்தை நாம் கேட்கின்றோம் என்பது போன்ற உணர்வுடன் அவர்கள் காணப்பட்டார்கள் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்த ராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் எந்த முடிவும் அற்று முடிவடைந்தது என்றும், நிலங்களை விடுவிப்பதற்கு படையினர் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள தனியார் நிலங்களையும் குடியிருப்பு வீடுகளையும் அபகரித்து வைத்துள்ள படையினர் அவற்றை விடுவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கோரிக்கை விடுத்தார். எனினும் அதற்கு படையினர் தரப்பில் திருப்தியான பதில் தெரிவிக்கவில்லை.

படையினர் மற்றும் வனவளத் திணைக்களத்தின் பிடியில் நிலங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டபோதும், தொல்பொருள் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் பிடியில் உள்ள நிலங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படாது அவசரமாக மதியம் 12.15 மணியளவில் கூட்டம் முடிவுறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்டக் கலந்துரையாடல் பி.ப. 3 மணிக்கே ஆரம்மானது. கூட்டம் 5.30 மணிக்கு முடிவுற்றது. இரு மாவட்டங்களுக்கான கலந்துரையாடலிம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்துகொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது என்று படையினர் கூறும் கூற்றானது முழுப்பொய்யான கூற்று. அவ்வாறானால் விடுவித்த நிலத்தில் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தையாவது காண்பிக்க முடியுமா என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கூட்டத்தில் கேள்வி எழுப்பினார்.

மாவட்ட அதிகாரிகள் முழுமையான தரவுகளை திரட்ட வேண்டும். அவ்வாறு தரவுகள் இல்லையெனில் அதைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்றும் தர்க்கத்தில் ஈடுபட்டார். அதனால் அங்கு அமளி ஏற்பட்டது.

இறுதியில் படையினர் வசம் உள்ள நிலங்கள் தொடர்பில் மட்டுமே கலந்துரையாடப்பட்டது. ஏனைய திணைக்களங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படாது கூட்டம் முடிவடைந்தது. வவுனியா மாவட்டத்துக்கான கூட்டமும் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் நேரமின்மையால் அந்தக் கூட்டம் பிற்போடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-105,ரி3)



# மரபுரிமை மையத்தை அகற்றக்கோரி கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.25

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரால் எமது பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள மரபுரிமை மையத்தை அகற்றி மாணவர் கல்விக்கு அவசியமான மண்டபத்தை மீள ஒப்படைக்க வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நல்லூர் ஸ்தான சி.சித.க. பாடசாலையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் ஏற்பாட்டில் மரபுரிமை மையம் திறந்துவைக்கப்பட்டது. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மரபுரிமை மையத்தைத் திறந்திருந்தார். இந்தநிலையில் மரபுரிமை மையத்தை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று பாடசாலை அதிபர் வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விண்ணம் செய்துள்ளார்.

எம்முடன் கலந்துரையாடியமைக்கு மாறாக மரபுரிமை மையம் ஒன்றை இயங்குவதற்காகப் பெயர்பலகை நடப்பட்டு திறப்பு விழா ஒன்று நடத்தப்பட்டது. பாடசாலையில் கலாசார அடையாளமான யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை எனும் பெயரை வர்ணம் பூசி அழித்தமை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் மத்தியில் மிக ஆழ்ந்த மனவேதனையை உண்டாக்கியுள்ளது. விமர்சனங்களையும் எழுப்பி வருகின்றது. மரபுரிமைப் பொருள்களைப் பாதுகாப்பதற்கான பெட்டிகள் ஆசிரியர் வாகனத் தரிப்பிடத்தில் அடுக்கப்பட்டுள்ளன. மழை காலத்தில் வாகனத் தரிப்பிடம் இல்லாது ஆசிரியர்கள் பெரும் விசனமடைகின்றனர்.

கட்டடத்தின் கூரைப்பகுதியில் இருந்து கழற்றப்பட்ட உடைந்த ஓடுகள். உக்கிய தடிகள் மாணவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், நுளம்பு பெருக ஏதுவாகவும் உள்ளன.

இவற்றுக்கான தீர்வை உடன் பெற்றுத் தர வேண்டும் என்று கோருவதுடன், மாணவர்களின் கல்விக்கு அத்தியாவசியமாகவுள்ள மண்டபத்தை எக்காரணம் கொண்டும் மரபுரிமை மையத்துக்கு வழங்க முடியாது என்பதைத் தயவாக அறியத் தருவதுடன், இந்த மையத்தை விரைந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூகம் சார்பாகக் கோருகின்றேன் என்று பாடசாலை அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டபோது, “இது தொடர்பாக எமக்கு முறையிடப்பட்டுள்ளது. மரபுரிமை மையம் அமைப்பதற்கு எம்மால் முத்துத்தம்பி வித்தியாலயத்தில் உள்ள கட்டடம் ஒன்றே பரிந்துரைக்கப்பட்டது. இறுதி நேரத்தில் மாகாணக் கல்வி அமைச்சரால் இந்தப் படசாலை தெரிவு செய்யப்பட்டது. இந்தப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்க முயற்சிக்கின்றோம்” என்றார். (ற-105)




வடக்கு மாகாணசபை ஆட்சியில் பதவிச் சண்டைகளும், லஞ்சஊழல்களுமே மிச்சம் என்று குறிப்பிட்டு வவுனியாவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா நகரின் முக்கிய பகுதிகள் மற்றும் கிராமப் புறங்களிலும் வடக்கு மாகாண சபைக்கெதிரான குறித்த சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி என்ற பெயரில் உரிமை கோரப்பட்டுள்ளதாகச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. (110)

# காணாமல் போவதற்குக் காரணமானவர்களே தற்போது கண்டுபிடிக்கவேண்டும் என்கின்றனர்

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சத்தியலிங்கம் உரை

வவுனியா, ஒக். 25

முப்பது வருடகால போரால் காணாமல்போவதற்கு காரணமாக இருந்தவர்களே இன்று காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் எனக் கோருகின்றனர் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். வவுனியா பூந்தோட்டம் முதியோர் சங்கத்தால் முதியோர் தினமும் முதியோர் மதிப்பளிப்பும் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



முப்பது வருடகால போரால் எங்களுடைய சமுதாயத்துக்கு ஒவ்வாத பல விடயங்கள் நடந்து முடிந்திருக்கிறன. ஆனால் அந்தச் சமுதாயத்துக்கு ஒவ்வாத விடயங்களைச் செய்தவர்களே அந்த விடயங்களுக்கு எதிர்ப்பாக இப்போது போராட்டங்களை செய்கிறார்கள், அதைப் பற்றிப் பேசுகின்றனர்.

காணாமற் போகக் காரணமாக இருந்தவர்களே காணாமல்போனவர்களை கண்டுபிடிக்க வேண்டும் என்றுசொல்கிறார்கள். காணாமல்போனவர்கள் ஏன் காணாமல் போனார்கள் எவ்வாறு காணாமல் போனார்கள் போன்ற பலரின் விடயங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்குத் தெரியும். ஏனெனில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள்தான் காணாமல்போகச் செய்தவர்கள் என்று தெரிவித்தார்.

**மஸ்தான் உரை**

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் மஸ்தான் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

வன்னியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் 7 பேருக்கு அரசு 100 மில்லியன் நிதி ஒதுக்கியமை அவர்களை அரசு சார்ந்த நாடாமன்ற உறுப்பினர்களாகக் கணித்தே. நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் முதியோர்களுக்கான வேலைத்திட்டங்களை செய்கின்றோம்.

நவம்பர் மாதம் வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. வடக்கில் அந்தந்த மாவட்டங்களுக்கான நிதிஒதுக்கீடுகள் ஒதுக்கப்படுகின்ற காலகட்டத்தில் சரியாக ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று இங்குள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் குறை கூறுகின்றனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற பிரதிநிதிகள் அரசின் சகல விடயங்களுக்கும் செயற்றிட்டங்களுக்கும் பெரும் ஆதரவைத் தருகின்றனர்.

வடக்கு மாகாணத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் குறைவுகள் காணப்படுமாயின் உயர் மட்ட சந்திப்பில் எவ்வாறான குறைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதைத் தெரிவிப்பதன் மூலமாக அதை நிவர்த்தி செய்யலாம்.

கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஏனைய மாவட்டங்களில் கட்சியின் இரண்டு உறுப்பினர்களிற்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனால் இங்கு அவ்வாறில்லை 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 100 மில்லியன் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களையும் அரசுசாரந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே கூட்டரசு கணிக்கின்றது - என்றார். (4,110)

# முல்லையில் அபிவிருத்தித் தடைகளுக்கு படையினர், திணைக்களங்களே காரணம்

## கூட்டமைப்பின் சாந்தி எம்.பி. குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஒக். 25**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் 71 வீதமான நிலப்பரப்புகள் படையினர் மற்றும் திணைக்களங்களின் பிடியிலேயே உள்ளன. அதனாலேயே மாவட்டத்தின் எந்த அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியவில்லை. என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.**

மாவட்டத்தில் படையினர், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களங்களின் பிடியில் உள்ள அரச மற்றும் தனியார் நிலங்களை விடுவிப்பது தொடர்பில் அரச தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. வடக்கு ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவில் அரசகாணியில் 3ஆயிரத்து 984.2 ஏக்கர் இராணுவத்திடமும் 309 ஏக்கர் கடற்படையினர் வசமும் உள்ளன. 1.5 ஏக்கர் நிலம் விமானப்படை வசம் உள்ளது. தனியார் நிலத்தில் 155 ஏக்கர் நிலம் இராணுவத்திடமும் 408 ஏக்கர் கடற்படையினர் வசமும் உள்ளன என்று மாவட்டச் செயலகத் தரவு சொல்கின்றது.

ஆனால் வட்டுவாகல் கடற்படைத்தளம், அம்பகாமம் விமானப்படைத்தளம், புலுமச்சிநாதகுளம் இராணுவ முகாம், முருகண்டி இராணுவமுகாம், ஒட்டுசுட்டான் இராணுவமுகாம், புதுக்குடியிருப்பு இராணுவ முகாம் நிலங்கள் தொடர்பில் இங்கே தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மிக மோசமாக மக்களின் வாழ்வாதாரத்துக்கான நீர்ப்பாசனக் குளங்களில் 8 குளங்களும், சுடலையும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இதிலே அம்பகாமத்தில் எமது மக்களின் வயல்நிலங்கள் 3ஆயிரம் ஏக்கர்கள் உள்ளன. அதேபோல் புலுமச்சிநாதகுளம் பகுதியில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் வயல்நிலங்கள் உள்ளன. இதில் சில வாழ்விடமும் உள்ளன. அதேபோன்று முருகண்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்விடங்கள் வீடுகளுடன் பிடிக்கப்பட்டுள்ளன. வாழ்வாதாரக் குளம் இரண்டையும் படையினர் அபகரித்துள்ளனர்.

இவ்வாறு மக்களின் வாழ்வாதார நிலத்தை படையினர் வகைதொகையின்றிக் கையப்படுத்தியுள்ளனர்.

படையினர் இவ்வாறு என்றால் வனவளத் திணைக்களத்தினரும், வனஜீவராசிகள் திணைக்களத்தினரும், தொல்லியல் திணைக்களத்தினரும் மட்டுமன்றி மகாவலி அதிகார சபையும் இன்னுமோர் புறமாக அபகரிப்பில் உள்ளன.

நாயாறு, வட்டுவாகல் போன்ற கடல் வளம் உள்ள பிரதேசங்களில் 6ஆயிரம் ஏக்கருக்குச் சொந்தமான நிலத்தை வனஜீவராசிகள் திணைக்களம் அரசிதழ் மூலமாக அபகரித்துள்ளது.

1990முதல் இடம்பெயர்ந்த மக்கள் 2010க்கும் பின்பும், தற்போது இந்தியாவில் இருந்தும் திரும்பும்போது அவர்களிடம் அனுமதிப்பத்திரம் உள்ள நிலத்தில் காடு வளர்ந்து விட்டதாம் என்றுகூறி வனவளத் திணைக்களம் பிடித்துவிட்டது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு என நீண்ட பட்டியல் தற்போது இந்த மாவட்டச் செயலகம் உள்ள பிரதேசம்கூட தங்களுக்குச் சொந்தமானவை என்று அரசிதழ் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் இவை இந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கோ அல்லது மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை. எமது ஒப்புதலின்றி அரசிதழைப் பிரசுரித்தமைக்கு என்ன நடவடிக்கை? இவற்றை நாம் நீண்டகாலமாக கோரிவருகின்றோம்.

இவற்றைவிட தேராவில் பண்ணை, விசுவமடுப் பண்ணை, இரண்டும்சிவில் பாதுகாப்புப்படைகளின் வசமுள்ளன. இந்த நிலையில் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 76 வீதமான நிலம் இவர்களின் பிடியிலேயே உள்ளன. இந்த மாவட்டம் எவ்வாறு முன்னேறுவது, விவசாயக் குளங்கள் இன்றும் வனவளத் திணைக்களத்தின் பிடியிலேயே உள்ளன. இவற்றினையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (4,105)

# யாழ்ப்பாணத்தில் 3 இடங்களில் 72 வீடுகள் அமையும்

## இந்திய உதவியில் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடப்பு வருடத்தில் வழங்கப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டத்துக்கு மேலதிகமாக மூன்று வீட்டுதிட்டங்கள் அமைவதற்குக் கைகூடியுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபை நடப்பு வருடத்தில் ஆயிரத்து 506 வீடுகளை அமைக்கின்றது.

இதற்கு மேலதிகமாக இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் 24 வீடுகளை கொண்ட தொகுதி அராலி மத்தியில் அமைக்கப்படுகிறது.

இந்த இரண்டுக்கும் மேலதிகமாக மூன்று கிராமங்களை அமைப்பதற்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. அவையும் இந்திய உதவியில் அமையவுள்ளன. அதன்படி தலா 24 கல்வீடுகளைக் கொண்டதாக மானிப்பாய், மிருசுவில் மற்றும் மூளாய் பகுதிகளில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

நடப்பு வருடத்தில் 4 வீட்டுத் தொகுதிகள் அமைக்கும் பணிகள் இந்தியன் வீட்டுத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன. இவை தலா 5 லட்சம் பெறுமதியான வீடுகளாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

### உள்ளூராட்சி சபைகள்

# கழிவு அகற்றும் நேரத்தை சீர்செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் உணவு கையாளும் இடங்களில் இருந்து உறுஞ்சப்படும் கழிவுநீர் சேகரிப்புக்கான நேர காலத்தை சீராக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

உணவகங்கள், விடுதிகள், மண்டபங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், உள்ளூராட்சி சபைகளின் பவுசர் மூலம் உறுஞ்சப்படுகிறது. இந்த விடயம் பாராட்டப்பட வேண்டியது. ஆனால் இவை எந்த நேரத்தில் உறுஞ்சுவது என்பது சபைகளில் நிலையான நேரங்கள் வரையறுக்கப்படவில்லை. சில சபைகள் காலை, மாலை என்று சீராகச் செயற்படுகிறன. இன்னும் சில சபைகளில் நேரங்கள் வரையறுக்கப்படாமல் கழிவுநீர் உறுஞ்சப்படுகிறது. பவுசரால் இந்த நீர் உறிஞ்சப்படும் போது வாந்தி வரும் அளவுக்கு மணம் வெளிப்படும். இதனால் வீதியில் செல்லப்பவர்கள் மற்றும் உணவு சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சில சபைகள் இதற்கு நேரம் வகுத்து அதன்படி செயற்படுகிறது. சில நேரத்தில் கழிவு நீர் தொட்டி நிரம்பினாலும் அதனை அகற்றுவதற்கு சபை ஊழியர்கள் வருவதற்குக் காலதாமதமாகும். குப்பைகளைச் சேகரிப்பதற்கு எவ்வாறு அட்டவனை தாயாரிக்கப்பட்டு அதன்படி செயற்படுகிறதோ அதேபோல இதற்கும் ஒரு சீரான நிலை உருவாக வேண்டும் - என்றனர்.

இது தொடர்பில் உள்ளூராட்சிசபைகளின் தலைவர்களிட்ம் கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது:

அநேகமான இடங்களில் காலை மாலை என்று கழிவு நீர் உறுஞ்சப்படுகிறது. ஆனால் சில நிலையங்களில் கழிவு நீர் சேகரிப்பதற்கு வைத்திருக்கும் தொட்டிகள் விரைவாக நிறைந்துவிடும். இதனால் உனடியாக அந்த நிலையங்களுக்குச் சென்று அவற்றை உறிஞ்ச வேண்டிய தேவை உள்ளது. சபைகளில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால் கழிவு நீரை உறுஞ்சுவதற்கு நேரகாலம் ஒன்று வகுக்ககூடியதாக இருக்கும் இன்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

# மாகாணங்களுக்கான நிதியில் 70 வீதமே இவ்வருடம் கிடைக்கும்

## மத்திய திறைசேரி அறிவித்தது

யாழ்ப்பாணம், ஒக். 25

மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 70 வீதம் மட்டுமே இந்த ஆண்டு வழங்கப்படும் என்று மத்திய திறைசேரி மாகாண திறைசேரிகளின் பணிப்பாளர்களிடம் தெரிவித்துள்ளது.

மத்திய திறைசேரியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்துக்கு நடப்பாண்டில் 4 ஆயிரத்து 314 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட நிதியில் இன்றுவரை 2 ஆயிரத்து 35 மில்லியன் ரூபா நிதி மட்டுமே மாகாணத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 2 ஆயிரத்து 279 மில்லியன் ரூபா பணம் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்துக்கு அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் இதுவரை நிறைவுற்ற திட்டங்களின் 845 மில்லியன் ரூபாவுக்கான சிட்டைகள் மாகாணத்தில் தயார் நிலையில் உள்ளன. எதிர்வரும் மாதம் எஞ்சிய திட்டங்களும் முடிவுறுத்தப்படும் நிலமையை எட்டியுள்ளன. இவ்வாறு 70 வீதமான பணம் இந்த ஆண்டு நிறைவிலும் எஞ்சிய தொகையான 30 வீதப் பணம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,105)

# அச்சுவேலிச் சந்தையை சீரமைக்க மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஒக். 25

அச்சுவேலிச் சந்தையைப் புதுப்பொலிவுடன் சீரமைப்பதற்கு மதிப்பீடுகள் நிறைவடைத்துள்ளன என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான அச்சுவேலி பொதுச் சந்தை சுமார் 40 வருட காலங்கள் பழமையானது. அதனைப் புதுப் பொலிவுடன் சீரமைக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கான மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. 10.4 மில்லியன் ரூபா செலவில் இதற்கான வேலைகள் நடைபெறவுள்ளன.

இதற்காக உள்ளூராட்சி வங்கி கடன் பெறவுள்ளது. ஆகவே இந்த மதீப்பீடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சபையின் அனுமதியின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கோப்பாய் மரக்கறிச் சந்தை சீரமைப்பு வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,7)

# மிகுதிப்பணம் கிடைத்ததும் சந்தை வேலை நிறைவுறும்

சங்கானை மரக்கறி சந்தைக்கு மிகுதி நிதி கிடைத்தால் வேலைகள் விரைவில் பூர்த்தியாகும் என்று சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு சொந்தமான சங்கானை மரக்கறிச் சந்தைத் தொகுதி தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. மீள் குடியேற்றம் மறுவாழ்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வேலைகள் நடைபெற்று வருகிறன. 40 மில்லியன் செலவில் 24 கடைத் தொகுதிகளைக் கொண்டதாக சந்தை அமைக்கப்பட்டு வருகிறது. வேலைக்ள் நடைபெற்று வருகிறன. இன்னமும் 7 மில்லியன் கிடைக்கவேண்டும். அதுவும் விரைவில் கிடைக்கும் பட்சத்தில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு பாவனைக்காக கையளிக்கப்படும் என்று சபை தெரிவித்தது. (4,7)

# மாகாணத்திலுள்ள சபைகளை தேவையேற்படின் கலைக்கவும்

## ஆளுநர்களுக்கு அரசதலைவர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

ஆயுள்காலம் முடிவடையும் மாகாண சபைகளில் செயல்படும் அதிகார சபைகளைக் கலைத்து புதிய சபைகளை நியமிக்குமாறு ஆளுநர்களுக்கு அரசதலைவர் பணித்துள்ளார்.

இலங்கையில் உள்ள 9 மாகாண சபைகளின் ஆளுநர்கள் மற்றும் தலைமைச் செயலாளர்களுடன் தற்போதுவரை ஆயுள்காலம் உள்ள மாகாண சபைகளின் முதலமைச்சர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் அரச தலைவர் மாளிகையில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போதே குறித்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். அதாவது ஏற்கனவே ஆயுள்காலம் முடிவடைந்த சபைகள் மற்றும் ஆயுள்காலம் முடியும் சபைகளில் செயற்படும் அதிகார சபைகளை அந்தத் திகதிகளில் இருந்து கலைத்து புதிய அதிகார சபைகளை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு. எனவே அதனை நடைமுறைப் படுத்த முடியும்.

வடக்கு மாகாண சபையிலேயே மிகக் குறைந்த அதிகார சபைகளான இரண்டு அதிகார சபைகள் செயற்படுகின்றன. இதில் ஒரு அதிகார சபையான போக்குவரத்து அதிகாரசபைக்கு வடக்குமாகாண முதலமைச்சர் கடந்த முதலாம் திகதியிட்ட கடிதம் மூலமாக முன்னாள் தலைவரை பதவி நீக்கி புதியவரை நியமித்து ஓர் அரசியல் பழிவாங்கலை மேற்கொண்டதான சர்ச்சை ஏற்பட்டிருந்தது. (4,105)

### இராணுவ அதிகாரி விவகாரம்

## ஐ.நா அறிக்கை தொடர்பில் மைத்திரிபால அதிருப்தி



கொழும்பு.ஒக்.25
இலங்கை இராணுவ அதிகாரியை மாலியிலிருந்து திருப்பியழைக்குமாறு ஐ.நா. விடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் அதிருப்தி வெளியிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.
இராணுவ அதிகாரி தொடர்புபட்ட விவகாரத்தில் இலங்கை மனித உரிமை ஆணையகத்திற்குள்ள தொடர்பு குறித்தும் சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.
இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக முன்னாள் ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்திருந்த நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த யஸ்மின்சூக்கா முன்வைத்த குற்றச்சாட்டுகளே இராணுவ அதிகாரியை திருப்பி அழைக்குமாறு ஐ.நா. வேண்டுகோள் விடுப்பதற்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எங்கள் இராணுவ அதிகாரியை விலக்கிக்கொள்ளுமாறு எங்கள் மனித உரிமை ஆணையகமே வேண்டுகோள் விடுத்திருந்தால் அது துரதிஸ்டவசமானது எனச் சிறிசேன தெரிவித்துள்ளார். இதே வேளை இலங்கை மனித உரிமை ஆணையகம் முன்வைத்த குற்றச்சாட்டுகளே இராணுவ அதிகாரி தொடர்பில் சர்ச்சைக்கு காரணம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## மக்கள் பலம் என்று போதையேற்றி மீளவும் குடும்ப ஆட்சிக்கே முயற்சி

### அவர்களிடம் நாட்டை ஒப்படைத்தால் விபரீதம் என்கிறார் ஹந்துன்நெத்தி எம்.பி.



**கொழும்பு,ஒக்.25**
**மக்கள் பலம் என்ற பெயரில் போதையினை வழங்கி மீண்டும் குடும்ப ஆட்சியை நிலைநாட்டப் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாகப் போராடுபவர்களிடம் மீண்டும் நாட்டை ஒப்படைப்பது பெரியளவில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**

தேசிய அரசு மக்களுக்காகச் செயற்படும் என்ற நோக்கத்தில் பெரிய போராட்டத்தின் மத்தியில் உருவாக்கப்பட்டது. கடந்த அரசின் நிர்வாகத்தையே தற்போதைய அரசும் முன்னெடுத்துச் செல்கின்றது. இரு தரப்பனருக்கும் இடையில் குடும்ப ஆட்சியிலேயே வித்தியாசம் காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய அரசில் இடம்பெறுகின்ற குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக் காட்டும் மகிந்த தரப்பினர் அவர்கள் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் பெரியளவிலான சமூக விரோத செயல்களில் ஈடுப்பட்டதை மறந்து விட்டனர். இவ்வாறு தேவையற்ற தொடர்பற்ற விடயங்களைப் பேசிக்கொண்டிருப்பவர்கள் ரூபாவின் வீழ்ச்சியை எப்படி சரி செய்வது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கின்றார்களில்லை.
இன்னும் சில நாள்களில் டொலரின் பெறுமதி 200 ரூபாவை அண்மித்து விடும். அப்போதும் இவர்கள் இவ்வாறு வீண் கதை பேசியே காலத்தை வீணடித்துக் கொண்டிருப்பார்கள்- என்றார்.

## துடுப்பாட்டக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை அதிகாரிக்கு விளக்கமறியல்

கொழும்பு.ஒக்.25
இலங்கைத் துடுப்பாட்ட கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை நிதி அதிகாரி விமல் நந்திக திஸாநாயக்கவை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இலங்கை துடுப்பாட்ட நிறுவனம் செய்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட விசாரணைகளின் படி இலங்கைத் துடுப்பாட்ட நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி பியல் நந்தன நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.
இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் முன்னிலப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இங்கிலாந்து அணியுடனான போட்டித் தொடருக்கான ஒளிபரப்பு உரிமத்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் சுமார் 5.5 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி செய்ய முற்பட்டமை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்குப் புதிய தீர்வு

### அமைச்சர் மங்கள யோசனை



கொழும்பு.ஒக்.25
ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை எதிர்கொள்வதற்கு, ஏனைய நாடுகளையும் ஒன்றிணைத்து மாநாடு ஒன்றை நடத்துவதற்கான ஆலோசனையை நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்துள்ளார்.
இது தொடர்பில் ஜீ24 நாடுகளின் தலைமையிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டிருப்பது தொடர்பில் வினவியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.
அமெரிக்க டொலருக்கு நிகரான நாணயப் பெறுமதி வீழ்ச்சி கண்டிருப்பது பொருளாதாரத்துக்குப் பேரழிவை ஏற்படுத்தும் நிகழ்வல்ல.
நாணயப் பெறுமதி இறக்கம் என்பது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிகழ்வு. கடந்த சில நாள்களுக்கு முன்னர் டொலருக்குநிகரான இலங்கை ரூபா சற்றுப் பலமடைந்து மீண்டும் வீழ்ச்சி கண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



## மின்னல் தாக்கி 5 பெண்கள் மருத்துவமனையில்

கொழும்பு.ஒக்.25
மின்னல் தாக்கியதில் 5 பெண் தொழிலாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் பொகவந்தலாவ மோரா தோட்டபகுதியில் உள்ள தேயிலை மலையில் நேற்று மதியம் 1.30 மணியளவில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கபடுகின்றது தேயிலைக் கொழுந்து பறித்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்களே மின்னல் தாக்கத்துக்குள்ளாகி பொகவந்தலாவப் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவ அதிகாரி ஏ. எஸ்.கே.ஜயசூரிய தெரிவித்தார்.

## கடற்படை நடத்தும் கலந்துரையாடலில் அதிக நாடுகள் ஆர்வம் காட்டவில்லை

கொழும்பு.ஒக்.25
கொழும்பில் இலங்கை கடற்படை நடத்தும், காலிக் கலந்துரையாடலில் இம்முறை அதிகளவு நாடுகள் ஆர்வம் காட்டவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய, 'காலி கலந்துரையாடல்2018' கடல்சார் பாதுகாப்பு மாநாடு நேற்று இரண்டாவது நாளாக தொடந்தது.
இந்த மாநாட்டில், அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா உள்ளிட்ட முக்கியமான நாடுகளின் கடற்படை அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு இலங்கை அரசினால், 73 நாடுகளுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன.
எனினும், 38 நாடுகள் மாத்திரமே தமது பிரதிநிதிகளை அனுப்பியுள்ளன.
35 நாடுகள் இந்த அழைப்பை ஏற்கவில்லை. இலங்கையின் அழைப்பை நிராகரித்த நாடுகளில், தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து, நோர்வே, பெல்ஜியம், டென்மார்க், ஈரான், தென்கொரியா, மொறிசியஸ் போன்ற நாடுகளும் அடங்கியுள்ளன

## சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி இன்று இல்லை

கொழும்பு.ஒக்.25
எமது நாட்டில் பண்டாரநாயக்கவின் இலங்கை சுகந்திரக் கட்சியும், டி.எஸ் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போது இல்லை என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.
'கமே பன்சல கமட சவிய' என்ற தொனிப்பொருளில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கட்சி அரசியலினாலேயே எமது தேசம் கீழ்நிலைக்குச் சென்றுள்ளது. தற்போது எமது அரசு முதன்மையான இரு கட்சிகளின் இணக்கப்பாட்டிலேயே சென்றுகொண்டிருக்கிறது. இந்த நிலையில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றுவது சாதாரண விடயமாகும்.
எனினும் இவற்றை நிவர்த்தி செய்யும் பொறுப்பு அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் சாரும்.
இரு கட்சியையும் ஒன்று சேர்த்து அரசை நடத்தவே மக்கள் தமது ஆணையை வழங்கியிருந்தனர். இந்த மக்கள் ஆணைக்கு எதிராக சிலர் செயற்படுவாராயின் அது நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் செயலாகும்.
வருகின்ற காலப்பகுதியிலும் இந்த இரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் எமது நாட்டை எம்மால் அபிவிருத்திசெய்யமுடியும். ஆனால் பல அரசியல்வாதிகள் எம்மை பிரிக்கவே முயல்கின்றனர்.
பண்டாரநாயக்கவின் இலங்கை சுதந்திரக் கட்சியும், டி.எஸ் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று எம் மத்தியில் இல்லை. காலத்துக்குக் காலம் கட்சிகளும் மாறுகின்றன. மக்கள் நலன்சார்ந்த கொள்கையைக் கொண்டதாக அரசியல் கட்சிகள் காணப்படவேண்டும்.
தேசத் தலைவர்களை முன்னோடிகளாகக் கொண்டு கட்சிகள் செயற்படவேண்டும். ஆனால் கட்சி அரசியலினால் இன்று எமது நாடு கீழ் நோக்கிச் செல்கின்றது. மக்கள் ஆணை கிடைக்காத கில அரசியல் தலைவர்கள் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்று கட்சிகளைப் பிளவு படுத்துகின்றனர்.
ஒவ்வொருவரும் அதிகாரத்துக்காகச் சண்டைபோடுகின்றனர். நாம் கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று நாட்டை நிர்வகிக்க முடியுமோ அப்போது தான் எமது தேசம் முழுமையாக அபிவிருத்தியடையும் - என்றார்

# அரச தலைவர் கொலைச் சதி விவகாரம்: சட்டத்துறையின் செயற்பாட்டில் சந்தேகம்

பொதுபலசேனா அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.25
அரச தலைவரைக் கொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. எனினும் இந்த விடயம் தொடர்பில் சட்டத்துறை செயற்படும் முறை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகப் பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போதே பொதுபலசேனா அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பஸ்ஸரமுல்லே பஞ்சானந்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"தேசிய அரசுக்கு 2020 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே அரச தலைவரைக் கொலை செய்வதற்கு முற்படுவதாக மக்கள் மத்தியில் அனுதாபத்தைத் தோற்றுவித்து, வாக்குகளைப் பெற்றுக்கொள்வதே அவர்களின் நோக்கமாக உள்ளது என்றே எண்ண வேண்டியுள்ளது.
சிங்களவர்களே நாட்டில் பெரும்பான்மையானோர். தற்போது நடைபெற்றுவரும் அனைத்து செயற்பாடுகளும் அவர்களுக்கு எதிரானதாகவே உள்ளன.
இந்த அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக அனைத்து சிங்கள பௌத்தர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு வீதியில் இறங்கினால் இந்த அரசு வீட்டிற்குள் முடங்க வேண்டிய நிலை ஏற்படும்"- என்றார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இழப்பீடு வழங்கவே கூடாது

அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு,ஒக்.25**
**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இழப்பீடு வழங்கும் செயற்பாட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தமிழீழ விடுதலைப் புலிகள் எனப்படுபவர்கள் நாட்டில் பெரியளவு குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட ஓர் அமைப்பாகும். ஆயுதமேந்தி, நாட்டைப் பிளவுபடுத்த போராடிய ஒரு குழுவே அவர்கள்.
இப்படியானவர்களுக்கு இழப்பீடுகள் வழங்குவதென்பது அரசமைப்புக்கு முரணான ஒன்றாகும். இதனை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு வழங்குவதை நாம் பிழை என்றும் கூறமாட்டோம்.
கடமையில் இருக்கும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கோ, ஏனைய விடயங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கோ இழப்பீடு வழங்குவதில் தவறில்லை.
அதைவிடுத்து, நாட்டின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்பட்டு, நாட்டையே இரண்டாக்க வேண்டும் என்று துடித்த சக்திகளுக்கு இழப்பீட்டை வழங்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இது சட்டத்துக்கு எதிரான ஒன்று"-என்றார்.

## வாகன விபத்தில் இருவர் சாவு

கொழும்பு.ஒக்.25
சிறைச்சாலை பேருந்து ஒன்று மூடுந்துடன் நேருக்கு நேர் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.
இந்த விபத்து மஹவ, பலகொல்லகம பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது.
அநுராதபுரத்தில் இருந்து வாரியபொல நோக்கிப் பயணித்த சிறைச்சாலை பேருந்தும் எதிர்திசையில் பயணித்த மூடுந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பத் தலைவர் சாவு

கொழும்பு.ஒக்.25
துப்பாக்கிச் சூட்டில் இரு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.
இந்தச் சம்பவம் வீரகெட்டிய, மக்குனதெனிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.
ஹக்குறுவெல பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக திருகோணமலையில் அறவழிப் போராட்டம்

கொழும்பு,ஒக்.25
மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு ஆதரவாகத் திருகோணமலை மாவட்ட அகரம் மக்கள் மையம் மற்றும் திருகோணமலை மாவட்ட சமூக ஆர்வலர்கள் இணைந்து அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
திருகோணமலை அநுராதபுரம் சந்தைக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் போராட்டம் இடம்பெற்றது. ஏழை மக்களை ஒடுக்காதே, கூட்டு ஒப்பந்தம் இல்லாமல் செய்யப்பட்டு சம்பள வரம்பு சபை ஒன்றை உருவாக்கிச் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க அரசு ஆவண செய்ய வேண்டும், போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.
இந்தப் போராட்டத்தில் திருகோணமலை தமிழ் அரசியல் வாதிகள் சிலர் பங்கேற்றிருந்தனர். (40)

## இனங்களுக்கிடையில் குருதி சிந்தாத நாடாக எதிர்காலம் இருக்கவேண்டும்

சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிப்பு



கொழும்பு.ஒக்.25
போர் மற்றும் இனமோதல்கள் காரணமாக நாடு முன்னேற்ற நிலையில் இருந்து பின்தள்ளப்பட்டிருக்கின்றது.
எதிர்கரலத்தில் இனங்களுக்கிடையில் குருதி சிந்தாத நாடாக இருப்பதற்குப் பிரார்த்திப்போம் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.
அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்டத்தில் நடத்திய சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இதில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒரு சிலரின் நடவடிக்கையால் அம்பாறையிலும் கண்டி திகன பிரதேசத்திலும் இடம்பெற்ற வன்முறையால் இலங்கையின் பெயருக்குக் கறுப்புப் புள்ளி ஏற்பட்டுள்ளது. உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. எதிர்காலத்தில் இவ்வாறு இனங்களுக்கிடையில் குருதி சிந்தாத நாடாக மாற்றியமைப்பதே எமது பிரார்த்தனையாகும். அதற்காக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாடாளுமன்றம் ஊடாக எங்களால் முடியுமான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.
அத்துடன் நாடாளுமன்றத்தினூடாக ஜனநாயகத்தை நிலைநாட்ட எங்களால் மேற்கொள்ளவேண்டிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று வேறுபாடு இன்றி அனைவருக்கும் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்குப் போதுமானளவு நேரத்தை வழங்கியுள்ளோம் - என்றார்.

# ஊழல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள சிறப்பு விசாரணை ஆணைக்குழு வேண்டும்

பந்துல குணவர்தன எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு,ஒக்.25
அரச வங்கிகளில் இடம் பெறுகின்ற ஊழல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறப்பு விசாரணை ஆணைக்குழுவை அமைக்க வேண்டும்.
அத்தோடு நிதியமைச்சரின் வருமான வரி தொடர்பிலான விடயங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தனது வருமான வரி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.
வருமான வரி தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டால் அதனை எதிர்கொள்ளத் தயார். ஆனால் அதற்கு முன்னர் நிதியமைச்சரின் வருமான வரி தொடர்பிலான விடயங்களை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும்" - என்றார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நெருப்பாற்றை நீந்தி கடக்கும் முயற்சி

கடைசியில் பூனை சாக்கில் இருந்து வெளியே குதித்து விட்டது. புதிய கட்சி ஒன்றைத் தொடங்கப் போகிறார் என்கிற அறிவிப்பை நேற்று வெளியிட்டிருக்கிறார் வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். தமிழ் மக்கள் கூட்டணி என்று அதற்குப் பெயரும் சூட்டியிருக்கிறார். அந்தக் கட்சியில் அவரைத் தவிர வேறு எவரும் நேற்றைய தினம் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றாலும் தமிழ் மக்கள் பேரவை என்கிற தனது அரசியல் அமைப்பின்ஆதரவுடன்இந்தக்கட்சியைத்தான்தொடங்கப் போகிறார் என்று அறிவித்துள்ளார் விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அரசியலுக்குக் காவி வரப்பட்ட விக்னேஸ்வரன், வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் என்கிற பதவியையும், சுகங்களையும்கடைசிநாள்வரைக்கும் முழுமையாக அனுபவித்துவிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையைக் காரசாரமாக விமர்சித்துவிட்டு அதிலிருந்து வெளியேறியிருக்கிறார்.


முதலமைச்சர் பதவிக் காலம் முடிந்ததும் தனக்கு முன்னாள் 4அரசியல்தெரிவுகள்இருக்கின்றனஎன்றுஅவர்கூறியிருந்தார். அரசியலைவிட்டு ஒதுங்குவது, ஏதாவது ஓர் அரசியல் கட்சியுடன்இணைவது, மக்கள்இயக்கம்ஒன்றைத்தொடங்குவது, தனிக் கட்சி தொடங்குவது ஆகியனவே தன் முன்னுள்ள தெரிவுகள் என்று கூறியிருந்தார். அரசியலைவிட்டு ஒதுங்குவதால் தனக்கும் தன் குடும்பத்துக்கும் மட்டுமே நன்மை, அப்படிச் செய்வதாக இருந்தால் அரசியலுக்கே வந்திருக்கக் கூடாது என்றும், ஏதாவது ஓர் அரசியல் கட்சியுடன் இணைவது மற்றைய கட்சிகளுக்குக் கோபத்தை ஏற்படுத்திவிடும் என்றும், அரசியல் அதிகாரமற்ற மக்கள் இயக்கத்தால் பயனில்லை என்றும் காரணங்களைக்கூறிய விக்னேஸ்வரன் அதனாலேயே தனிக் கட்சி தொடங்கும் முடிவைத் தான் எடுத்தார் என்று தெரிவித்தார். பேரவையின் அனுசரணையுடன்கட்சிப்பணிகளைத்தான்ஏற்கனவேதொடங்கிவிட்டார் என்றும் அவர் கூறினார்.

இப்படியெல்லாம் காரணங்களை அவர் அடுக்கினாலும் தன்னை ஒரு பொம்மையாக நடத்த முற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தான் ஒரு தலைவனாகிப் பாடம் படிப்பிக்கும் உணர்வே இந்தக் கட்சி முயற்சி என்பதை அவரது உரையின் ஊடாகப் புரிந்துகொள்வது ஒன்றும் கடினமான காரியமல்ல.

எப்படியிருந்தாலும் கூட்டமைப்புக்குள்ளேயே இருந்து கருத்து முரண்பட்டுக்கொண்டு மாகாண சபை ஆட்சியைச் சீர்குலைத்தது போன்றல்லாமல் அதை விட்டு அவர் வெளியேறி வந்தது மிகப் பொருத்தமான முடிவே. இதுவரை போன்று இல்லாமல் இனிவரும்காலலத்தில் தான் உண்மையான அரசியலின்முகத்தையும்அதன்கோரத்தன்மையையும் அவர் முழுமையாக அனுபவிப்பார் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

ஒரு மக்கள் இயக்கத்தையோ, கட்சியையோ, கட்டியெழுப்பிய அனுபவம் கொண்டவரல்லர் விக்னேஸ்வரன். அவரது தலைமையில் தொங்கிக்கொண்டு குளிர்காய விரும்பும் அவருடன் கூடவேயிருக்கும் அரசியல் கட்சியினர்கூட இனிவரும் காலங்களில் அவருக்கு முழுமையான உதவிகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. எனவே ஒவ்வோரு அடியையும் முழுச் சுமையோடு எடுத்து வைத்து நகரவேண்டியது விக்னேஸ்வரன் முன் உள்ள சவால்.

இனிமேல் அவர் செய்யப்போவதுதான் அவரது உண்மையான அரசியல் நிலைப்பாடாகவும் இருக்கப் போகிறது. அதை எவ்வளவு வெற்றிகரமாகவும், திட்மாகவும் மக்கள் செல்வாக்கோடும் அவரால் செய்ய முடிகின்றதோ அதற்கேற்ற அளவிலேயே அவரது அரசியல் வெற்றியும் தங்கியிருக்கும். தேர்தல்கால வாக்குகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளாக இல்லாமல் தமிழ் மக்களுக்கான சரியான அரசியல் தலைமைத்துவத்தைக் கொடுப்பதாக அவர் தனது அரசியல்கட்சியைவளர்த்தெடுப்பாராகஇருந்தால்அதுவரவேற்கத்தக்கதுதான். ஆனால், அந்தச் சுமை பல்லக்கில் இருந்து வருவதைப் போன்று சுகமானதல்ல என்பதைப் புரிந்துகொண்டுஅதற்கேற்றார்போலசெயற்படவேண்டியது விக்னேஸ்வரன்முன்னுள்ளபெரும்சவால். நெருப்பாற்றை நீந்திக் கடக்க வேண்டியிருக்கும் இந்தப் பயணத்தில் துணிச்சலோடும் வழுவாத கொள்கைப் பிடிப்போடும் விக்னேஸ்வரன்நகர்வாராஎன்பதற்குக்காலம்மிகவிரைவில் பதில் சொல்லிவிடும்.



# எனது அரசியல் பயணம் தொடரும்!

"தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்திச் சிந்திக்கும்போது, ஒரு மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கிச் செயற்படுவது அதிகாரமற்ற ஓர் இயக்கத்தின் வெறும் ஆதங்க வெளிப்பாடாகவே இருக்கும் என்று எனக்குப் புரிந்துள்ளது. அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவர் மக்கள் இயக்கமொன்றை நான் முன்னெடுத்துச் செல்வதைத் தாம் வரவேற்பதாகக் கூறியுள்ளார். எனவேதான் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்துத் தமிழ்த் தேசியக் கோட்பாடுகளின்பால் பற்றுறுதியுடன் இருக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்கும் மூன்றாவது தெரிவே சிறந்ததும் அவசியமானதும் என்று உணர்கின்றேன்" என்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் தமிழ் மக்கள் பேரவையால் நேற்றையதினம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கூட்டத்தில் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார். அவர் அங்கு ஆற்றிய முழு உரையும் இங்கே தரப்படுகின்றது.

எல்லோருக்கும் வணக்கம்!
உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக!
வட மாகாண முதலமைச்சராக எனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த நான் எனது முதலமைச்சர் பதவிக்காலம் பூர்த்தியாகிவரும் நிலையில் எனது எதிர்காலச் செயற்பாடுகள் எப்படி இருக்கப் போகின்றன என்பது தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நோக்கத்தில் தமிழ் மக்கள் பேரவையினூடாக உங்கள் அனைவரையும் இன்று சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கடும் சவால்கள் நிறைந்திருந்த கடந்த 5வருட காலத்தில் என்னுடன் பணியாற்றிய சக மாகாணசபை உறுப்பினர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், எனக்கு ஆதரவு நல்கிய நண்பர்கள், தோளோடு தோள் நின்று சேவையாற்றிய தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவ மாணவியர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் பெரும் ஆதரவும் அரவணைப்பும் அளித்த தாயக மற்றும் புலம்பெயர் மக்கள் ஆகிய சகலருக்கும் எனது நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### நீச்சலடிப்பதற்கு ஆவலாக இருக்கிறேன்

ஆழமான நீச்சல் தடாகத்தினுள் பாய்ந்து முழுக இருக்கும் நீச்சல் வீரனின் மனோநிலையில் நான் தற்போது இருக்கின்றேன். ஐந்து வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறான ஒரு நிலை இருந்தது. குதித்து எழும்பி மீண்டும் ஆழ நீரை நோட்டம் விட்டுக் கொண்டிருப்பதுபோல் உங்கள் முன் நிற்கின்றேன். இலங்கையின் சுதந்திரத்துக்காகச் சிங்களச் சகோதர்களுடன் தோளோடு தோள் நின்று போராடியவர்கள் தமிழர்கள். ஆனால், 1920ஆம் ஆண்டளவில் நாட்டை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளில் சிங்கள அரசியல் தலைவர்கள் ஈடுபட்டமை கவலைக்குரியது. சிங்களத் தலைவர்கள் நாடுமுழுவதிலும் சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏற்றவாறு 'ஒரு நபருக்கு ஒரு வாக்கு' என்ற வழிமுறையைப் பிராந்தியப் பிரதி நிதித்துவம் வேண்டும் என்ற முறையில் ஆங்கிலேயரிடம் கோரினர். அது எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற விதத்தில் அதை எதிர்த்த மதிப்புக்குரிய சபாபதி தலைமையிலான வடமாகாணத் தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களில் அவர்களது வரலாற்று ரீதியான சுயநிர்ணய ஆட்சிமுறை, அடையாளம் மற்றும் இருப்பு என்பவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்தில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினர்.

### தமிழர்களின் போராட்டம் எனது கையை வந்தடைந்திருக்கிறது

மகாவம்ச மனநிலையில் இருந்துகொண்டு தமது அடையாளத்தை நாடு முழுவதிலும் ஏற்படுத்திச் சிங்கள இனத்தை வியாபிக்கச் செய்யும் சிங்கள அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளுக்கும் பூர்வீகக் குடிகள் என்ற அடிப்படையில் 'தமிழர்' என்ற அடையாளத்தைப் பாதுகாக்கும் பொருட்டான தமிழ் அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளுக்கும் இடையில் அன்று முதல் உருவான சிங்கள தமிழ் இன முரண்பாட்டு நிலை அடுத்து வரும் 2019ஆம் ஆண்டில் 100வருடங்களை எட்டப்போகின்றது. இந்த இன முரண்பாடானது அது தோன்றுவதற்குக் காரணமான நோக்கங்கள் மற்றும் காரணிகளில் எந்தவித மாற்றமும் இன்றித் தொடர்ந்துகொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் இந்த பாதுகாப்புப் போராட்டமானது ஓர் அஞ்சல் ஓட்டமாக, பின்னர் தந்தை செல்வா வழியாக முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஏற்படுத்தப்பட்ட பல உடன்படிக்கைகள் பௌத்த பேரினவாத சக்திகள் காரணமாகக் கிழித்தெறியப்பட்டு தொடர்ந்து ஏமாற்றப்பட்டோம்.
பின்னர் 1970களின் ஆரம்பத்தில் ஆயுத வழிமுறைகளினூடாக நகர்த்தப்பட்ட இந்தப் போராட்டம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஓர் அரசியல் ராஜதந்திரப் போராட்டமாகப் பரிணாமம் பெற்று இன்று எமது கைகளை வந்தடைந்திருக்கின்றது. ஆரம்பித்த நோக்கம் வெற்றி பெறும் வரையில் இந்த அஞ்சல் ஓட்டம் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். இதை வெற்றியுடன் முடிவுக்கு கொண்டுவர வேண்டிய ஒரு கடமை எமக்குண்டு. இல்லையேல் சாணக்கியமும் பொறுப்பும் ஆற்றலும் உள்ள அடுத்த தலைமுறையினரிடம் அதைக் கையளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

**சுய பாதுகாப்புப் போராட்டம்**

இது ஒரு சுய பாதுகாப்புப் போராட்டம். இதன் அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்புச் செய்வதற்கு இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டிருக்கும் எவருக்கும் உரிமை இல்லை. அதேசமயம் இந்த 99 வருட கால சுய பாதுகாப்புப் போராட்டத்தில் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட எண்ணற்ற வன்முறைகள், அரசியல் பாகுபாடுகள் மற்றும் இறுதியாக 2009ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புப் போர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு 2 இலட்சத்துக்கும் அதிகமான எமது மக்களை நாம் இழந்துள்ளோம். பல ஆயிரம் உயிர்களைத் தியாகம் செய்துள்ளோம். பலர் ஊனமாகியுள்ளனர். சுமார் 15இலட்சம் மக்கள் சொந்த இடங்களை விட்டு வெளிநாடுகளுக்கு வெளியேறியுள்ளனர். அதைவிடப் பெருமளவிலான எமது பூர்வீக நிலங்களை இழந்து, கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து நெருக்கடியான ஒரு நிலைமையில் இன்று நாம் நிற்கின்றோம். ஆனாலும் நாங்கள் சோர்வடையவில்லை. நம்பிக்கையைத் தளர விடாமல் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றோம். ஒன்றைமட்டும் நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். அதாவது, நாம் எமது தனித்துவத்தை வலியுறுத்திப் போராடாமல் இருந்திருந்தால் எப்போதோ எமது இனம் இலங்கையில் படிப்படியாக அழிவடைந்துபோயிருக்கும். இவ்வாறு இலங்கை பூராகவும் அழிந்துபோன தமிழ்க் குடும்பங்கள் பற்றி வரலாற்றாசிரியர்கள் பலர் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ் மக்களுடன் உரிய அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் தாங்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ளாமல் தொடர்ந்தும் தீர்க்க தரிசனம் அற்ற வகையில் சிங்கள பௌத்தத்தை முதன்மைப்படுத்தும் அதே மகாவம்ச மனநிலையுடன் தான் இன்றைய சிங்களத் தலைவர்களும் செயற்படுகின்றார்கள். தொடரும் இந்த இன முரண்பாடு சிங்கள மக்களையும் பாதித்துள்ளது.

**பொருளாதாரத்தில் பின்னடைந்திருக்கிறோம்**

நாட்டின் பொருளாதாரம் இன்று அதல பாதாளத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. அன்று பொருளாதாரத்தில் எம்மைவிடப் பின்தங்கி இருந்த சிங்கப்பூர் இன்று நாம் நினைத்தாலும் எட்டமுடியாத உயரத்தில் இருக்கிறது. எல்லா இன மக்களும் அங்கு சமமாக மதிக்கப்படுவதுடன் சம வாய்ப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மிகச் சிறிய எண்ணிக்கையில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் சுதந்திரத்துக்காகத் தோளோடு தோள் நின்று போராடியமைக்கு அங்கீகாரமாகத் தமிழை ஆட்சிமொழி ஆக்கிச் சிறப்பித்துள்ளார்கள். இதுதான் இன ஐக்கியம். இங்கிருந்துதான் நல்லிணக்கம் ஏற்படும். ஓர் இனத்துக்கும் ஒரு மதத்துக்கும் முதன்மை என்ற நிலை இருக்கும் வரை பெரிய முரண்பாடுகள் இந்த நாட்டில் இருந்து கொண்டேயிருக்கும். கற்பனைக் கதைகளுடன் எழுதப்பட்ட மகாவம்சத்தைத் தொடர்ந்தும்
வரலாறாகச் சிங்களச் சிறார்களுக்குப் பாடசாலைகளின் ஊடாகப் போதிக்கும் வரையிலும், தமிழ் மக்கள் பூர்வீகக் குடிகள் என்பதை மறுத்து அவர்கள் வந்தேறுகுடிகள் என்று பொய்யான வரலாற்றைப் போதிக்கும் வரையிலும் இனப்பிரச்சினை இலங்கையில் இருந்துகொண்டேயிருக்கும்.

**தமிழர்களின் தொன்மையை அறிந்து அதிர்ச்சியடைகிறார்கள்**

இதுவரை காலமும் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் தொன்மை பற்றி எம்மவர் உரையாதிருந்ததால் சிங்கள மக்கள் அதை அறியாதவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள். இப்பொழுது தான் அவர்கள் அதிர்ச்சி அடையத் தொடங்கியுள்ளார்கள். சிங்களமொழி கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளிலேயே ஜனித்தது என்று நாம் கூறும்போது அதற்கு முன் வாழ்ந்த துட்டகைமுனு என்ற சிங்கள மன்னன் சம்பந்தமான கதைகள் எல்லாம் கேள்விக்குரியதாக ஆக்கப்படுகின்றன.
பாகுபாடுகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான எமது சுய பாதுகாப்புப் போராட்டம், வன்முறை வழிகளில் அடக்கப்பட்டமையும் தொடர்ந்து அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு நாம் ஏமாற்றப்பட்டமையுமே இளைஞர்கள் மத்தியில் விரக்தி நிலையை ஏற்படுத்தி அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்குக் காரணங்கள் ஆகின என்பது வரலாறு. பல சிங்களத் தலைவர்களே இதை வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள். 2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் ஜூலை 2009இல் ஒரு கருத்தைக் கூறியிருந்தார் தற்போதைய கௌரவ நிதி அமைச்சர் மங்கள சமரவீர. 'தமிழீழ விடுதலைப் புலிகளைப் போர் ரீதியாகத் தோற்கடித்ததன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு விட்டதாக எவரேனும் கருதினால் அது முட்டாள்தனமான கருத்தாகவே நோக்கப்பட வேண்டும். 30 வருட காலமாக நீடித்த தேசிய இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வுத் திட்டமே தற்போது விஞ்சி நிற்கும் தேவை. விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் கடுமையான நோயின் நோய்க்குறிகள் மட்டுமே. இன்னமும் நோய்க்கான மருந்து வழங்கப்படவில்லை' என்று கூறியிருந்தார்.

**மகிந்தவுக்குக் கிடைத்த வாய்ப்பை அவர் தவறவிட்டிருந்தார் நல்லாட்சியும் இதயசுத்தியுடன் செயற்படவில்லை**

2009ஆம் ஆண்டில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த போது, தமிழ்த் தலைவர்கள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்ட போது, அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கான பொன்னான சந்தர்ப்பம் கிடைத்திருந்தும் அதை அவர் பயன்படுத்த விரும்பவில்லை. அவருக்குப்பின்னர் வரலாற்றில் என்றும் இல்லாதவகையில் இரண்டு முதன்மைக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து 'நல்லாட்சி' அரசை அமைத்த போதும் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் அப்போதைய சிங்களத் தலைவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களும் அதைச் செய்யவிரும்பவில்லை. மாறாக, முன்னைய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் மீதான இன அழிப்புப் போர் காரணமாகப் பன்னாட்டு ரீதியில் ஏற்பட்டிருந்த போர்க்குற்ற விசாரணை மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கு ஏற்ற வழிவகையாக 'நல்லாட்சி' எனும் பெயரைப் பயன்படுத்தினார்களே தவிர இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பமாக இதயசுத்தியுடன் செயற்படவில்லை. ஆகக்குறைந்தது போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வினைத்திறனான ஒரு பொறிமுறையைக் கூட ஏற்படுத்த அவர்கள் முயலவில்லை.
அதிகாரமற்ற வடமாகாண சபை ஊடாக எமக்கு ஒதுக்கப்பட்ட சிறிய அளவிலான நிதியைப் பயன்படுத்தி எம்மால் முடிந்தளவுக்கு எமது மக்களின் துயர் துடைக்கும் பணியைச் செய்துள்ளோம். இது யானைப் பசிக்கு சோளப் பொரி போட்டது போன்றது. இது எமது மக்களைப் பொறுத்தவரை நாம் எதுவும் செய்யவில்லை என்ற தோற்றப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளது. எமது செயற்பாடுகள் மற்றும் திட்டங்களுக்குப் பல்வேறு முட்டுக்கட்டைகளும் சிக்கல்களும் கடந்த 5 வருட காலங்களில் ஏற்படுத்தப்பட்டன. வட மாகாண சபையில் நேற்று ஆற்றிய இறுதி உரையில் இது தொடர்பில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன்.

**திணிக்கப்பட்ட தீர்வு முறைமையே மாகாணக் கட்டமைப்பு**

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் இடைக்காலத்தில் இருந்தபோது 1987ஆம் ஆண்டு எம் மீது திணிக்கப்பட்ட ஒரு தீர்வு முறைமையே இந்த மாகாண சபைக் கட்டமைப்பு. பலவீனமான, அதிகாரம் அற்ற இந்தக் கட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்க முடியாது என்று தமிழ்த் தலைவர்கள் அன்றே நிராகரித்துவிட்டார்கள். அதன் பின்னர் இனப்பிரச்சினை மேலும் சிக்கலடைந்து ஓர் இன அழிப்புப் போரில் முடிவடைந்தது. எந்த வகையிலும் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத ஒரு கட்டமைப்பே மாகாணசபைக் கட்டமைப்பு என்ற யதார்த்தம் தெரிந்திருந்தபோதிலும் பிழையானவர்களின் கைகளில் அதிகாரம் சென்று எமது மக்களுக்கு மேலும் ஆபத்தாக முடியக்கூடாது என்ற காரணத்தினாலேயே தேர்தலில் போட்டியிட்டு வட மாகாண சபையைக் கைப்பற்றினோம். கைப்பற்றி வந்தபின் நாம் எதுவும் செய்யவில்லை என்று கொக்கரிப்போர் யார் என்று பார்த்தால் 'பிழையானவர்கள் கைகளுக்குச் செல்லக்கூடாது' என்று யாரை அன்று அடையாளப்படுத்தினோமோ அவர்களே அவர்கள். அரசுக்கு மண்டியிட்டு அல்லது பிச்சை கேட்டு ஏன் உங்கள் காரியங்களை நீங்கள் இயற்றவில்லை என்றே கேட்கின்றார்கள். பணிந்துபோய், பகடைக் காயாகிப் பல நூறு வேலைத்திட்டங்களை ஏன் இயற்றவில்லை என்றே அவர்கள் கேட்கின்றார்கள். அவர்களுக்குப் பதில் சொல்வதானால், எமக்கு எமது உரிமைகள் முக்கியம். சலுகைகள் அன்று என்ற படியால்த்தான் எமக்கு எமது வருங்கால நிரந்தரத் தீர்வு அவசியம். இன்றைய ஓர் அடிமைப்பட்ட சொகுசு வாழ்க்கையல்ல. தீர்வு முயற்சியில் உண்மையான அக்கறை கொண்டு போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் உண்மையான கரிசனை கொண்டிருந்தால் அதிகாரங்கள் கொண்ட 'இடைக்கால நிர்வாகத்தை' போர் முடிந்தகையோடு அரசு ஏற்படுத்தியிருந்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

**ஆளுநருக்கும், அரசுக்கும், ஆவாக்குழுவுக்கும் தொடர்பு?**

வட மாகாண சபைக்குக் கொழும்பு அரசு போதிய நிதியை ஒதுக்காத நிலையில் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பை பெற்று எமது வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக முதலமைச்சர் நிதியத்தை அமைப்பதற்கு முயற்சித்தபோதிலும் அரசு அதற்கு அனுமதிக்கவில்லை. ஏன் வேறு நிதியங்களைப் பாவிக்கவில்லை என்று கேட்கின்றார்கள் சிலர். எமது உரித்தைக் கைவிட்டு விட்டு கரவாக ஏன் பணத்தை வெளிநாடுகளில் இருந்து வருவிக்கவில்லை என்பதே அவர்கள் கேள்வி. கரவான எமது செயல்கள் கொழும்பு அரசால் எவ்வாறு எமக்கெதிராகத் திசை திருப்பப்படும் என்பது எமக்குத் தெரியும். தமிழர் மறுவாழ்வு அமைப்பு என்ற அமைப்பின் நிதிகள் இன்னமும் முடக்கி விடப்பட்டே இருக்கின்றன. முதலமைச்சர் நிதியத்தை வழங்குங்கள் என்று அரசுக்குக் கூறவக்கில்லாதவர்களே கரவு முயற்சிகளில் எம்மை ஈடுபடச் சொல்கின்றார்கள். நாங்கள் வேறு நிதியங்களைப் பாவித்து பணத்தை வருவிக்கின்றோம் என்று கண்டால் அவற்றை மூடி விடுவதற்கு உடனே நடவடிக்கை எடுக்கும் அரசு. அண்மையில் பிரித்தானியாவுக்குச் சென்ற வட மாகாண ஆளுநர் உதவிகளைச் செய்யுமாறும் முதலீடுகளைச் செய்யுமாறும் புலம்பெயர் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்தமை வேடிக்கையாக இருக்கிறது. அதே ஆளுநர் தான் எமது நிதியத்தை எமக்குக் கிடைக்கவிடாமல் நாடகமாடி வந்தவர். ஆவா குழு போன்ற வன்முறைக் குழுக்களை 3 மாதங்களுக்குள் தன்னால் இல்லாமல் ஒழிக்க முடியும் என்று ஆளுநர் அங்கு தெரிவித்திருப்பது பல சந்தேகங்களை எமக்கு ஏற்படுத்துகிறது. ஆளுநரால் 3 மாதங்களுக்குள் ஆவாக் குழுவை இல்லாமல் செய்ய முடியும் என்றால் ஏன் அதை அரசு, அவருக்கு ஊடாகக் கடந்த 5 வருடங்களில் செய்யவில்லை? அல்லது ஆளுநருக்கும் அரசுக்கும் ஆவா குழுவுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா? என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

**அரசின் செயற்பாடுகளுக்கு நற்சான்றிதழ் கொடுத்து வருகிறது கூட்டமைப்பு**

ஒரு புறம் வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து வந்த அதேவேளை, மறுபுறம் சிங்களக் குடியேற்றத் திட்டங்களையும் பௌத்த மயமாக்கலையும் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலும் நல்லாட்சி அரசு முன்னெடுத்து வந்துள்ளது. இதற்கு ஆளுநர் உடந்தையாக இருந்துள்ளார். இராணுவத்தை வடக்கில் இருந்து அகற்ற மறுத்து வருவதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் வன்முறைக் கும்பல்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் அசட்டையீனமாக இருந்துவருகிறனர் அரசும் ஆளுநரும். அரசின் செயற்பாடுகள் இப்படி இருக்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ இந்த அரசை 'நல்லாட்சி அரசு' என்று பன்னாட்டுச் சமூகத்துக்கு நற்சான்றிதழ் கொடுத்துவருவதுடன், தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்கும் என்றும் ஏமாற்றி வருகிறது. முதலில் 2016 என்றார்கள். பின்னர் 2017 என்றார்கள். இப்பொழுது 2018 என்கின்றார்கள். விந்தையிலும் விந்தை இந்தச் செயல். நிலைமைகள் இவ்வாறு நெருக்கடி மிகுந்ததாகவும் சிக்கலாகவும் இருக்கும் ஒரு சூழ்நிலையில்தான் முதலாவது வட மாகாண சபையின் 5 வருட காலம் முடிவுக்கு வந்துள்ளது.
எனது முதலமைச்சர் பதவிக் காலத்தின் பின்னர் எனது செயற்பாடுகள் எப்படி இருக்க முடியும் என்பது தொடர்பில் 4 தெரிவுகள் இருப்பதாகக் கூறிவந்தேன்: 1. அமைதியாக வீட்டுக்குச் செல்லுதல் 2. ஒரு கட்சியுடன் இணைந்து தேர்தலில் நிற்பது 3. ஒரு புதிய கட்சியை ஆரம்பித்து செயற்படுவது. 4. ஒரு மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்குவது. என்பவையே அவை.
முதலாவது வழியை நான் தெரிவு செய்தால் எனது குடும்பத்தினர் நன்மையடைவதுடன் நானும் எனது ஓய்வுக் காலத்தை அமைதியாகக் கொண்டு செல்லமுடியும். எனது உடல் நிலை சீரடையும். அப்படியான ஒரு முடிவை நான் எடுப்பதானால், நான் அரசியலுக்கே வந்திருக்கக் கூடாது. அதுவே அறமாக இருந்திருக்கும். அரசியலுக்கு வந்த பின்னர் இத்தகைய ஒரு முடிவை எடுப்பது நான் தொடர்ந்து ஆற்றவேண்டிய பல பணிகளை ஆற்றாமல், பூர்த்திசெய்ய வேண்டிய பல பணிகளை பூர்த்திசெய்யாமல் என்னை நம்பிய மக்களை நட்டாற்றில் விட்டு விட்டு எனது நலன்களை முதன்மைப்படுத்திச் செல்வதாகவே அமையும். இது மனச்சாட்சிக்கு விரோதமானது என்று உணர்கின்றேன். மேலும் என்னை ஓர் இடர் நிலையில் இருந்து காப்பாற்றிய எமது மக்களுக்கு 'நான் உங்களுடன் இருப்பேன்' என்று அன்று கூறிய வாக்கு பொய்த்து விடும். அதனால் இத்தகைய ஒரு தெரிவை என்னால் எடுக்க முடியவில்லை.


**என்னைப் பொம்மையாக வைத்து அரசியல் நடத்துவதற்கு எதிர்பார்த்திருந்தார்கள்**

நான் எந்த ஒரு கட்சியையும் சார்ந்தவன் அல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொது வேட்பாளராகவே கடந்த தேர்தலில் போட்டியிட்டேன். ஆனால் என்னை ஒரு பொம்மையாக வைத்து அரசியலை நடத்துவதற்கு அதன் தலைவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அதற்கு என்னால் இடமளிக்கமுடியவில்லை. எனக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைக்கும் இடையே கடந்த 4 வருடங்களில் இடைவெளி பெரிதும் அதிகரித்துள்ளது. இது நான் பெரிது, நீ பெரிது என்ற மனப்பான்மை காரணமானதாகவோ அல்லது தலைமைத்துவப்போட்டி காரணமாகவோ ஏற்படவில்லை. மாறாக, எமது
மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கோட்பாடு ரீதியாகவும் அணுகுமுறை ரீதியாகவும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இந்த வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆகவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சார்பில் மீண்டும் போட்டியிடுவதை என்னால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. நான் கைப்பொம்மையாக இருக்க சம்மதிக்காதவரை எனக்கு மீண்டும் இடமளிக்க அவர்களும் தயார் இல்லை. பல நண்பர்கள் ஒற்றுமை அவசியம் என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தே போட்டியிட வேண்டும் என்றார்கள்.

**இரண்டாவது தெரிவும் சாத்தியம் அற்றது**

கொள்கையில் திடமாக இல்லாது முன்பு 'துரோகிகள்' என்று வர்ணித்தவர்களின் வழித்தடத்திலேயே இப்பொழுது பயணம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எனக்கென்ன வேலை என்று கேட்டு அவர்கள் வாய்களை அடைத்துவிட்டேன். அதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது சாத்தியமற்ற ஒன்று. தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து பணியாற்றும் ஏதாவது ஓர் அரசியல் கட்சியில் இணைந்து போட்டியிடுவது எமக்கிடையிலான ஒற்றுமையைச் சீர்குலைப்பதாக அமைந்துவிடும். 'ஏன் இந்தக் கட்சி?' 'மற்றக் கட்சி கூடாதா?' என்றெல்லாம் போட்டியும் பொறாமையும் மேலோங்கும். ஆகவே இரண்டாவது தெரிவும் சாத்தியம் அற்றது.
எனது தனிப்பட்ட நலனில் அக்கறை கொண்ட நண்பர்கள் பலரும் நான் முதலாவது தெரிவை அல்லது நான்காவது தெரிவையே எடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறி வந்துள்ளார்கள்.

(17ஆம் பக்கம் பார்க்க)



# ஆங்கிலம் கற்பிப்பதற்கு இனி ரோபேக்கள்


டோக்கியோ.ஒக்.25
'செயற்கைப் புத்திசாலிகள்' எனப் பெயரிடப்பட்டுள்ள ரோபோக்கள் 2020ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானின் ஆரம்பப் பாடசாலைகளில் அறிமுகப்படுதப்படவுள்ளன. கிட்டத்தட்ட ஒரு பூனையின் அளவே உள்ள இந்த ரோபோக்கள் மிகப் புத்திசாலிகளாகும். 6ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனால் ஒரு கேள்வியை முழுமையாகக் கேட்பதற்குத் தெரியவில்லை. ஆனால் இந்த ரோபோ அந்தக் கேள்வியை முழுமைப்படுத்தியதுடன் அந்த மாணவன் சரியான பதிலைக்கூறியவுடன் மிக நன்று (வெரி குட்) எனக் கூறியுள்ளது. மாணவர்கள் ஆசிரியரிடம் படிப்பதைவிட இந்த ரோபோக்களிடம் படிப்பதில் ஆர்வமாக உள்ளனர் ஆசிரியாகளிடம் கேள்வி கேட்பதைவிட இந்த ரோபோக்களிடம் கேள்வி கேட்பதையும் அதற்கு ரோபோக்கள் கூறும் பதில்களும் மாணவர்களை நன்கு கவர்வதாகக் கூறப்படுகிறது. 2016ஆம் ஆண்டிலேயே இந்தவகை ரோபோக்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன. தற்பொழுது 30பாடசாலைகளில் இவை பயன்பாட்டில் உள்ளன. ஆங்கில அறிவு ஜப்பான் பாடசாலைகளில் அத்தியவாசியமானது என்ற காரணத்தால் 2020ஆம் ஆண்டளவில் சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் இந்த ரோபோக்கள் கடமைகளில் ஈடுபடும் என்று தெரியவருகிறது.



# செவ்வாய்க் கிரகத்தில் ஒட்சிசன்! கண்டுபிடித்தது நாசா


வோசிங்டன்.ஒக்.25
செவ்வாய்க் கிரகத்தில் உள்ள உப்பு நீரில் நுண்ணியிரிகள் வாழ்வதற்கான ஒட்சிசன் இருப்பதாக நாசா கண்டறிந்துள்ளது. 2012ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 'கியூரியாசிட்டி' என்ற நடமாடும் ஆய்வுகூடம் ஒன்றைச் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பியிருந்தது நாசா. செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் பயணிக்கக் கூடிய 'கியூரியாசிட்டி' ரோவரின் இலக்கு செவ்வாய் கிரக்த்திலுள்ள மண் மற்றும் பாறைகளைக் குடைந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில், அவற்றின் தோற்றம், அமைப்பு மற்றும் இரசாயன மூலக்கூறுகள் ஆகியவற்றை ஆய்வு செய்வது. இதன் மூலம், செவ்வாய்க் கிரகத்தின் தற்போதைய மற்றும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சுற்றுச்சூழல் எப்படி இருந்தது என்பதையும், அங்கு உயிர்களின் அடிப்படை மூலக்கூறுகளில் ஒன்றான கரி மற்றும் அதன் இதர வகைகள் இருக்கின்றனவா என்பதையும் பல்வேறு ஆய்வுகள் மூலம் கண்டறிவதே.
மிகவும் முக்கியமாகக் கடந்த 5 வருடங்களாக செவ்வாய் கிரக மாதிரிகளில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட 'கியூரியாசிட்டி' ரோவர் செவ்வாய் கிரகம் தொடர்பான பல அறிவியல் உண்மைகளைக் கண்டறிந்துள்ளது. அந்த வரிசையில் தற்போது 'கியூரியாசிட்டி' மங்கனீஸ் ஒட்சைட்டைக் கண்டுபிடித்தது. இது அதிகமான ஒட்சிசனை உற்பத்தி செய்யக்கூடிய இரசாயனக் கலவை ஆகும்.
செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்புக்கு கீழே உள்ள உப்பு நீர், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் உருவான நுண்ணுயிரியல் வாழ்க்கைக்கு உதவுவதற்குப் போதுமான ஒட்சிசன் மூலக்கூறுகள் இருப்பதைக் காட்டுகின்றது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இந்தக் கண்டுபிடிப்பு விண்வெளி ஆராய்ச்சியின் புதிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

# 40வயதுடைய பெண்ணுக்கு 44குழந்தைகள்!



கம்புலா.ஒக்.25
உகண்டாவில் மரியம் நபாடாசி என்ற பெண் 44 குழந்தைகளுக்கு தாயாகி அந்த நாட்டின் பத்திரிகை பலவற்றுக்குக் கடந்த சில ஆண்டுகளாகவே தலைப்புச் செய்தியாகி வருகிறார். ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான உகாண்டாவின் கபிம்பிரிக் கிராமத்தைச் சேர்ந்த 40 வயதான மரியம் நபாடன்ஸி 44குழந்தைகளை பெற்று அந்த நாட்டின் அதிக குழந்தைகளைப் பெற்ற பெண்மணி என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார். 12 வயதில் திருமணமான மரியம் ஆறு தடவைகள் இரட்டைக் குழந்தைகளையும், நான்கு முறை மூன்று குழந்தைகளையும், மூன்று முறை நான்கு குழந்தைகளையும் பெற்றெடுத்திருக்கிறார். தனது 40 ஆண்டு வாழ்வில் 18ஆண்டுகளைக் கர்ப்பவதியாகக் கழித்ததாகவும், 44 குழந்தைகளில் தற்போது 38குழந்தைகள் மட்டுமே உயிருடன் இருப்பதாகவும் அவர்கள் அனைவரையும் மரியமே வேலைக்குச் சென்று காப்பாற்றி வருவதாகவும் உகாண்டாச்செய்தி நிறுவனத்துக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் மரியம் தெரிவித்திருக்கிறார்.
மரியத்தின் கருப்பையில் மரபியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றத்தின் காரணமகவே அவருக்கு அதிக எண்ணிக்கையில் கருமுட்டைகள் உற்பத்தியனாதகாவும் அவற்றைக் கலைக்க முயன்றால் அவர் உயிருக்கு ஆபத்து என்று மருத்துவர்கள் கூறியதைத் தொடர்ந்து தனது 44 குழந்தைக்குப் பிறகு தனது கருப்பையை மரியம் நீக்கிவிட்டார். இவரை குறித்து செய்தி வெளி

யானதிலிரு
ளர்கள் அவ
இவர் பிரபல
தெரிவித்துல



# மெக்சிக்கோவைத் தாக்கியது 'வில்லா' காற்றுடன் கனமழை நீடிப்பு

மெக்சிக்கோசிற்றி.ஒக்.25
மெக்சிக்கோவை மிரட்டிய வில்லா புயல் வலுவடைந்து கரை கடந்ததையடுத்து, கடற்கரை நகரங்களில் சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. பசுபிக் கடலில் நிலைகொண்ட 'வில்லா' புயல், மேலும் வலுவடைந்து மெக்சிகோவை நோக்கி முன்னேறியது. அது கடும் புயலாக மாறி மெக்சிக்கோவின் மேற்குப் பகுதியைத் தாக்கியது. சினலோவா மாநிலம் ஐஸ்லா டெல் போஸ்க் பகுதியில் புயல் கரை கடந்ததையடுத்து மணிக்கு 195கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது. கடல் கடும் சீற்றத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து கனமழையும் பெய்து வருகிறது. புயல் காற்றுத் தாக்கியதால் மெக்சிக்கோவின் பசிபிக் கடற்கரை நகரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது புயல் வலுவிழக்கத் தொடங்கினாலும், தொடர்ந்து பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. 'வில்லா' புயல் வலுப்பெற்று மெக்சிகோவை தாக்கி, பெரிய உயிரிழப்பை ஏற்படுத்தலாம், பெரிய அளவில் மண் சரிவை ஏற்படுத்தலாம் என ஏற்கெனவே வானிலை மையம் எச்சரித்துள்ளது. எனவே, போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த மாத துவக்கத்தில் அமெரிக்கா வைத் தாக்கிய மைக்கல் புயல், பெரிய அளவில் சேதத்தை ஏற்படுத்தியது. புயல், மழை தொடர்பான விபத்துகளில் 27பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அணு
# பே


நியூயோ
அணு அ
ரஷ்யாவ
ஐ.நா. ச
ஆலோச
ஆண்டு
இருந்து
ரிக்க அ
இந்த ஒ
குற்றம் ச
அரங்கை
வழிவகு
கள் கரு
அமெரிக்
என்று ஐ
குத்ரெஸ்
இதுபற்றி
கூறுகை
அமெரிக்
செயலா
ஏற்பட்டு
ளும் பே
பிக்கை
அமெரிக்
போல்ட
யாவின்
ளதாகத்



# 6 மணி நேரம் தூங்கினால் ப
# ஊழியர்களை உற்சாகப்படுத்தும்

டோக்கியோ.ஒக்.25
இரவில் 6மணி நேரம் நன்றாகத் தூங்கும் ஊழியர்களுக்கு 48 ஆயிரம் ரூபாய் வழங்கி (இலங்கை மதிப்பில் 1 லட்சத்து 20 ஆயிரம்) உற்சாகப்படுத்தும் ஜப்பான் நிறுவனம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அண்மைக் காலமாக ஜப்பான் மக்களிடையே இரவில் தூங்கும் நேரம் குறைந்து வருகிறது. அவர்கள் சமூக ஊடகங்களில் அதிகமாக கவனம் செலுத்தி வருகின்றனர். அவர்களால் மறுநாள்காலை கவனத்துடன் வேலையில் ஈடுபட முடியவில்லை. இதனால் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உற்பத்தியும், வேலையும் பாதிப்பு அடைகிறது. இதைத் தடுக்கும் வகையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள 'கிரேசி இன்டர்நேஷனல்' எனும் நிறுவனம் புதுவிதமான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஊழியர்களின் கைபேசியில் ஒரு செயலியைத' தரவிறக்கி, ஊழியர்கள் தூங்கும்போது, அந்தச் செயலி தூங்கும் ஊழியர்களைக் கண்காணிக்கிறது. நாள் ஒன்றுக்கு இரவில் 6 மணிநேரம் அயர்ந்து தூங்கும் ஊழியர்களுக்கு

படுகிறது. இதன்மூலம், ஊழி
நலம் பாதுகாக்கப்படுகிற
தூங்குவதற்கு பரிசளிப்பதுட
விடுவதில்லை. சிறந்த சத்
உடற்பயிற்சிகள் செய்யவு
றோம், அலுவலகத்தில் எப்
மகிழ்ச்சியான சூழல் இருக்
கொள்கிறோம். விடுமுறை
ளைச் சுற்றுலா வுக்கும் அ
றோம் என அறிவித்துள்ளது



யானதிலிருந்து. வெளிநாடுகளிருந்து பத்திரிகையாளர்கள் அவரை பேட்டி காண வருவதாகவும் இதனால் இவர் பிரபலமாகி வருவதாகவும் உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளனர்.

# பத்திரிகையாளர் ஜமால் கொலை விவகாரம்

* ஜமாலைக் கொல்லச் சவூதி இளவரசர் ஆணை!
* சவூதி அதிகாரியின் தோட்டத்தில் ஜமாலின் உடல் பாகங்கள்
* ஜமாலின் குடும்பத்தாரைச் சவூதி மன்னர் சந்திப்பு
* சவூதி அதிகாரிகளுக்கு நுழைவிசை நிறுத்தியது அமெரிக்கா

**பத்திரிகையாளர் ஜமால் கொல்லப்பட வேண்டும் என்ற ஆணையைச் சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் 'ஸ்கைப்' மூலம் உத்தரவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சவூதி இளவரசர் அவரது சவூதி அரசுத் துறையில் பல பதவிகள் வகிக்கும் ஊடகத் துறை ஆலோசகரான அல் கவுடானி மூலம் இந்த உத்தரவை வழங்கி இருக்கிறார் என்று துருக்கி அளித்த ஆதாரங்களின் அடிப்படையில் அரபு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



அதில், துருக்கி அனுப்பிய 15 பேருக்கு சவுதி இளவரசர் முகமது பின் சல்மானின் ஊடகத் துறை ஆலோசகரான அல் கவுடானிதான் ஜமாலைக் கொல்ல உத்தரவு பிறப்பித்திருக்கிறார். ஜமாலைத் தாக்கிய பிறகு 'அவரின் தலையைக் கொண்டு வா' எனக் கூறும் அல் கவுடானியின் குரல் பதிவாகியுள்ளதாகவும் இந்த உத்தரவை இளவரசர் சல்மான் 'ஸ்கைப்' மூலம் தெரிவித்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆதாரத் தகவலை தற்போது துருக்கி வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜமாலின் உடல் பாகங்கள் துருக்கியிலுள்ள சவூதிக்கான தூதரக அதிகாரி வீட்டிலுள்ள தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவலை லண்டனில் இயங்கும் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. அதில், 'கொலை செய்யப்பட்ட சவுதி பத்திரிகையாளர் ஜமாலின் உடல் இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரகப் பொதுச் செயலாளர் இல்லத்திலுள்ள தோட்டம் ஒன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஜமாலின் வெட்டப்பட்ட உடல் பாகங்கள் அந்த தோட்டத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன' என்று கூறப்பட்டுள்ளது. துருக்கியின் ரோடினா கட்சியின் தலைவர் டோகு ப்ரென்சிக் இதை உறுதிப்படுத்தி இருக்கிறார். இதே நேரத்தில் ஜமாலின் குடும்பத்தாரைச் சவூதி மன்னர் சந்தித்திருக்கிறார். அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நிலமை இப்படியிருக்க, ஜமால் கொலை விவகாரத்தில் கவனம் செலுத்தி வரும் அமெரிக்காவானது ஜமால் கொலை வழக்கில் தொடர்புடைய சவுதி அதிகாரிகளின் நுழைவிசைவை நீக்கம் செய்வதாக அறிவித்துள்ளது. அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ கூறும்போது, 'ஜமால் கொலை குறித்து வெளிவரும் அனைத்துத் தகவல்களையும் பிற நாடுகளுடன் இணைந்து அவதானிக்கப்பட்டு வருகிறது. ஜமால் கொலை வழக்கில் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டுள்ள சவுதி அதிகாரிகளின் நுழைவிசைவு நீக்கம் செய்யபபட்டுகிறது. மேலும் அவர்கள் மீது தனிப்பட்ட முறையில் பொருளாதாரத் தடைகள் விதிப்பது குறித்தும் நாங்கள் ஆலோசித்து வருகிறோம்' என்றிருக்கிறார்.

**பின்னணி**

கொலை செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ஜமால் அமெரிக்காவிலுள்ள வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும் குறிப்பாக அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தார்.

துருக்கியைச்சேர்ந்தபெண்ணை ஜமால்திருமணம் செய்யவிருந்த நிலையில், கடந்த வாரம் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றவர் அங்கிருந்து காணாமல் போயுள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பாகச் சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரை வெளியிட்டு ஜமாலை சவூதிதான் கொலைசெய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான காணொலி மற்றும் ஒலிப்பதிவு ஆதாரத்தைத் துருக்கி வெளியிட்டிருந்தது. இதைச் சவூதி மறுத்து வந்தது. ஜமாலின் கொலைக்கு சவூதி பொறுப்புக் கூறவேண்டும் என்றிருந்தார் அமெரிக்க அதிபர். அத்தோடு அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சரையும் சவூதிக்கு அனுப்பியிருந்தார். பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி சவுதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

## அணு ஆயுத ஒப்பந்த விவகாரம் பேச்சுக்கு அழைக்கிறது ஐ.நா.

நியூயோர்க்.ஒக்.25

அணு ஆயுத ஒப்பந்த விவகாரத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அன்ரனியோ குத்ரெஸ் ஆலோசனை தெரிவித்துள்ளார். ரஷ்யாவுடன் 1987ஆம் ஆண்டு செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்ளப்போவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அதிரடியாக அறிவித்திருந்தார். இந்த ஒப்பந்தத்தை மீறி ரஷ்யா செயல்படுவதாகக் குற்றம் சாட்டி, இந்த முடிவை ட்ரம்ப் அறிவித்தது உலக அரங்கை அதிர வைத்தது. இது ஆயுதப்போட்டிக்கு வழிவகுக்கும் என்று பன்னாட்டு அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதனால், இந்தப் பிரச்சினையை அமெரிக்காவும், ரஷ்யாவும் பேசித் தீர்த்துக்கொள்ளும் என்று ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அன்ரனியோ குத்ரெஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுபற்றி அவரது செய்தித் தொடர்பாளர் பர்ஹான் ஹக் கூறுகையில், "அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா கூறி உள்ள கருத்தை ஐ.நா. சபை பொதுச் செயலாளர் அறிந்துள்ளார். அதே நேரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை இரண்டு நாடுகளும் பேசித் தீர்த்துக்கொள்ளும் என்று அவர் நம்பிக்கை வைத்துள்ளார்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன், ரஷ்யாவுடன் பேச்சு நடத்துவதற்காக ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவைச் சென்றடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.



## ...ல் பரிசு ...தும் ஜப்பான்




...யர்களுக்கு வெகுமதி அளிக்கப் ...மூலம், ஊழியர்களின் உடல் ...க்கப்படுகிறது. ஊழியர்கள் ...பரிசளிப்பதுடன் நாங்கள் நின்று ... சிறந்த சத்துள்ள உணவு, ...ள் செய்யவும் அறிவுறுத்துகி ...கத்தில் எப்போதும் அன்பான, ...சூழல் இருக்கும்படி பார்த்துக் ... விடுமுறை நாளில் அவர்க ... வுக்கும் அழைத்துச் செல்கி ...வித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## 2400 ஆண்டுகளாக கடலுக்கடியில் கிடந்த கப்பல்!


2ஆயிரத்து 400 ஆண்டுகளாகக் கடலுக்குள் மூழ்கிக் கிடந்த கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல்கேரியாவின் கடல் எல்லைக்குள் பழமையான இந்தக் கிரேக்க வர்த்தகக் கப்பல் கடலுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 23 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பல் சிதிலமைடையாமல் நல்ல நிலையில் இருப்பதாக இதைக் கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சரியான சாவியைக் கண்டுபிடிப்போம்





# பொய் பேசாதே!




ரமேஷ் தன் வீட்டில் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது சுகுமார் அங்கு வந்தான். "கணித ஆசிரியர் உன்னை உடனடியாகப் பாடசாலைக்கு வந்து தன்னைச் சந்திக்கச் சொன்னார். ஏதோ அவசரமாம்" என்றான்.

ரமேஷ் பாடப்புத்தகத்தை மூடி வைத்து விட்டுப் பாடசாலைக்கு ஓடினான். கணித ஆசிரியரை அவனுக்குப் பிடிக்கும். பாடசாலையை அவன் அடைந்த போது அவர் அங்கு இல்லை. விடுமுறை நாள் என்றபடியால் பாடசாலை மூடப்பட்டிருந்தது. ஏமாற்றத்தோடு வீடு திரும்பினான். திரும்பும் வழியில் சுகுமாரைக் கண்டான். ஆனால் சுகுமார் அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான். ரமேசுக்கு அந்தச் சிரிப்பு கோபத்தை மூட்டியது. ஆனாலும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். நாள்கள் சென்றன.

ஒருநாள் பாடசாலையில் விளையாட்டு நேரம். ரமேஷ் விளையாட்டு மைதானத்தில் இருந்தான். அப்போது ஏதோ ஒரு விடயமாக வகுப்பறைக்குள் சுகுமார் நுழைந்தான். அப்போது வகுப்பினுள் சில விடைத்தாள்களைத் திருத்தம் செய்து கொண்டிருந்த கணித ஆசிரியர் சுகுமாரை அழைத்து ரமேஷைக் கூட்டி வருமாறு கூறினார். உடனே சுகுமார் விடயத்தை ரமேஷிடம் தெரிவித்தான். அவனோ "நான் நம்பமாட்டேன். நீ விளையாட்டுக்கு என்னை ஏமாற்றுவதற்காகக் கூறுகிறாய். போன தடவையும் நீ என்னிடம் பொய்தானே கூறினாய், நான் வரமாட்டேன்" என்று கூறிவிட்டு விளையாட்டைத் தொடர்ந்தான். சுகுமார் எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும் அவன் வரவில்லை. வேறுவழியின்றி அவன் கணித ஆசிரியரிடம் சென்று ரமேஷ் வர மறுத்தமை பற்றிக் கூறினான். கணித ஆசிரியருக்கு பெரும் வியப்பாக இருந்து. பெரியோரை மதிக்கும் பண்புகளும் அடக்கமும் கொண்ட ரமேஷ் வர மறுத்தமைக்கான காரணத்தை அறிய ஆசிரியர் ஆவலானார். விளையாட்டு நேரம் முடிந்து வகுப்பறைக்குத் திரும்பிய ரமேஷை ஆசிரியர் அழைத்துதான் அழைத்தபோது அவன் வராமைக்கான காரணத்தை வினவினார். சுகுமாரால் விடுமுறை நாளொன்றில் தான் ஏமாற்றப்பட்டதையும் அது போல் இன்றும் அப்படித்தான் ஏமாற்றுவதற்காகவே கூறினான் என்றுதான் நினைத்ததாக வும் ரமேஷ் பயந்தபடி கூறி தான் வராமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். ஆசிரியர் உடனடியாக சுகுமாரை அழைத்து நடந்தவைகள் பற்றி விசாரித்தார். சுகுமாரும் உண்மையைக் கூற வேண்டியதாயிற்று.

ஆசிரியர் "நீ ஒருமுறை பொய் சொன்னாலே போதும் பின்பு நீ எத்தனை தடவை உண்மை சொன்னாலும் உன்னை எவருமே நம்பமாட்டார்கள். ஆகவே இனிமேலாகிலும் விளையாட்டுக்கு என்றாலும் பொய் பேசுவதை நிறுத்து" என்றார்.






## மகிழ்ச்சிக்கு உடற்பயிற்சி

உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் இதயநோய், பக்கவாதம் மற்றும் நீரிழிவு போன்றவை ஏற்படுவதற்கு இருக்கின்ற சாத்தியங்களைக் குறைக்கலாம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உடற்பயிற்சி எதுவும் செய்யாதவர்கள் மாதத்தில் 11 நாள்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர் எனில், உடற்பயிற் சி செய்பவுர்களுக்கு இந்தப் பாதிப்பு 7நாள்களாகக் குறையும் என்பது தெரிய வந்துள்ளது. குறைந்த பட்சம் வாரம் ஒன்றுக்கு 150 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பது ஆய்வாளர்களின் பரிந்துரையாக இருக்கிறது. இரண்டு நாள்களுக்கு ஒரு முறை 30 முதல் 60 நிமிடங்கள் வரை உடற்பயிற்சி செய்து வருவது உடல் நலத்துக்கும் உள நலத்துக்கும் பயன் தரும்.



## இலங்கையின் மறுபெயர்கள்

| | |
|---|---|
| 1.ஆரியர் | - தம்பபன்னி |
| 2.கிரேக்கர் | - தப்பிரபேன் |
| 3.இந்தியர் | - சீலயி |
| 4.அராபியர் | - செரண்டிப் |
| 5.சீனர் | - சீலன் |
| 6.போர்த்துக்கீசர் | - செயிலான்/செயிலாவோ |
| 7.ஒல்லாந்தர் | - சிலான் |
| 8.ஆங்கிலேயர் | - சிலோன் |





# வெட்டாதீர்கள்.., வலிக்கிறது

இயற்கையின் கொடைகளில் ஒன்றாகக் கருதப்படும் தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பது ஞானிகளின் ஆத்மார்த்தமான கருத்து.

அவற்றை மெய்ப்பிக்கும் வகையில் பல்வேறு அறிவியல் ஆராய்ச்சிகளும் நடந்துள்ளன. அதன்படி, அண்மையில் அமெரிக்காவின் 'விஸ்கான்சின்மாடிசன்' என்ற பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வின் முடிவுகளும், அதற்கான ஆதாரங்களும் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

தாவரங்கள் தாக்கப்படும்போது, அவற்றின் நரம்பு மண்டலங்கள் வழியே உணர்வுகள் கடத்தப்பட்டு இதர பாகங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. இந்த எச்சரிக்கையைக் கொண்டு அவை அடுத்து என்ன செய்யும்? என்பது குறித்தான ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனினும், நரம்பு மண்டலமே இல்லாத தாவரங்கள், விலங்குகளைப் போல தங்கள் உணர்வுகளை அடுத்த பாகங்களுக்கு கடத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் 'ஃப்ளூரோசெண்ட்' புரதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலமே தாவரங்களின் உணர்வுகள் கடத்தப்படுவது வெளிப்பட்டுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழக தாவரவியலாளர் 'சைமன் கில்ராய்' கூறுகையில், "இந்த முறையிலான சமிக்ஞை இருப்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். ஒரு இடத்தில் காயமடைந்தால் மீதமுள்ள இடங்களில் அதன் பாதுகாப்பு கலங்களைத் தூண்டுகிறது.

ஆனால் இந்த அமைப்புக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. தாவரத்தின் ஒரு பகுதி காயம் அடைந்தால் அது தாவரம் முழுவதும் பரவுகிறது" எனத் தெரிவித்தார்.

இதன்மூலம், நாம் அன்றாடம் மிக அலட்சியமாக வெட்டி வீழ்த்தும் தாவரங்களுக்கும் உணர்வுகள் உண்டு என்பதை உணர்ந்து, தாவரங்களை அழிவதிலிருந்து மீட்டு இயற்கையையும் பாதுகாக்க முயற்சிப்போம்.

சுவரொட்டி

# பெற்றோர்களே!

கல்வி கற்பது சிறுவர்களின் உரிமை

சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவோம்

**சிறுவர்களை வேலைக்கு அனுப்புவதைத் தடுப்போம்**



அனுசரணை யுனிசெப்

# எனது அரசியல் பயணம் தொடரும்!

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற தமிழ் மக்களை ஒன்றிணைத்து ஒரு மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் நான்காவது தெரிவு சிறந்த ஒரு தெரிவாக இருந்தாலும் அதில் சில பலவீனங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்துள்ளேன். குறிப்பாக, மக்கள் இயக்கப் போராட்டங்கள் சாத்வீகக் கோட்பாடுகளின் அடிப்படையிலானவை. சாத்வீக வழிமுறைகளில் ஆரம்பித்து வன்முறைகளால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டமே இன்று அரசியல் ராஜதந்திரப் போராட்டமாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

ஜனநாயகத் தேர்தல்களில் பங்குபற்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரசியல், இராஜதந்திர மற்றும் பன்னாட்டு உறவுச் செயற்பாடுகளில் ஈடுபட்டு எமது மக்களின் சட்ட ரீதியான பிரதிநிதிகளாக அவர்களின் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் பெறுவதும் ஆதரவைப் பெறுவதுமே இந்த அரசியல் இராஜதந்திர போராட்டத்தின் அடிப்படை. இதை உணர்ந்துதான் 1990களின் ஆரம்பத்தில் வெறும் ஒன்பது வாக்குகளுடன் ஒரு தமிழ் அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் வகையில் தேர்தலை நடத்திவிட்டு அவர்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எடுத்துக்காட்டித் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டமாகச் சித்திரித்து மழுங்கடிக்கும் செயற்பாடுகளை அரசு வெற்றிகரமாக மேற்கொண்டது. அதே 'ஒன்பது வாக்கு' கட்சியின் ஒரு முக்கிய உறுப்பினர்தான் நாம் எதுவுமே செய்யவில்லை என்று இன்று கூச்சல் போடுகின்றார்.

### கூட்டமைப்பு தடம்புரண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது

ஜனநாயகத் தேர்தல்கள் மூலமாக மக்களின் அபிலாஷைகளைப் பன்னாட்டுச் சமூகத்துக்குக் கொண்டுசென்று அவற்றுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் கசப்புணர்வுகள், பகைமைகளை மறந்து தமிழ்த் தேசிய கோட்பாட்டின் அடிப்படையில் பழம்பெருந் தமிழ் அரசியல் கட்சிகளையும் முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புக்களையும் ஒன்றிணைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கோட்பாடுகளைக் கைவிட்டுத் தடம் புரண்டு 'ஒன்பது வாக்குக் கட்சி'யுடன் கைகோர்த்து நிற்கின்றது. பொருளாதார அபிவிருத்தி ஏன் செய்யவில்லை என்று துணிந்து கேட்டுக் கொண்டிருக்கின்றது. அரசியல் தீர்வின் அத்தியாவசியத்தை அறியாமல் அரற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

நேற்றைய எனது உரையில் குறிப்பிட்டிருந்தபடி, நான் 2013ஆம் ஆண்டு வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் போது எமது மக்கள் கொடிய போர் ஒன்றினூடான இன அழிப்பைச் சந்தித்து மிகவும் பலவீனமான நிலையில் நொந்துபோய் இருந்தனர்.

ஆனாலும், தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளான இணைந்த வடக்குக் கிழக்கில் இறைமையின் அடிப்படையில் எம்மை நாமே ஆளும் சுய நிர்ணய அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்ற எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு எம்மை முழுமையாக நம்பி அதற்கு அங்கீகாரத்தை வழங்கியிருந்தனர். அந்த மனோ நிலையும் எதிர்பார்ப்பும் எமது மக்களிடையே இன்னமும் கனன்று கொண்டேயிருக்கின்றது என்பதே எனது அவதானிப்பு.

அன்றைய தேர்தல் காலத்தில் இந்த வாக்குறுதிகள் சாத்தியமானவைகளாகத் தெரிந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு புதிய ஆட்சிமாற்றத்துடன் புதிய பதவிகள், சலுகைகள் வந்துசேர அவை சாத்தியம் அற்றவைகளாக மாறிவிட்டன. நான் முன்னர் குறிப்பிட்டதுபோல நல்லாட்சி அரசு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற், கொண்டுவரும் நிலையிலும், அதற்கு முண்டு கொடுத்து இந்த் அரசு எமக்குத் தீர்வைத் தரும் என்று கூறிவருகின்றனர்.

தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாகக் கூடச் சிங்கள குடியேற்றங்களையும் பௌத்தமயமாக்கலையும் தற்காலிகமாகக் கூட நிறுத்தி வைக்க விரும்பாத இந்த அரசு எப்படி எமக்குத் தீர்வை வழங்கும் என்று சிந்திக்க முடியாதளவுக்குப் பதவிகளும் சலுகைகளும் அவர்களின் கண்களை மறைத்து வருகின்றன.

### இராணுவம் முகாம் அமைப்பதற்கு நிதி வழங்கும் விநோதம்

வராது என்று தெரிந்திருந்தும் வராத ஒரு தீர்வுத்திட்டத்துக்காக 'ஒற்றை ஆட்சி' முறையை ஏற்றுக்கொண்டு இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இவர்கள் இதற்கான மக்கள் ஆணையை எந்தத் தேர்தலில் இருந்து பெற்றுக்கொண்டார்கள் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விளக்கவேண்டும் அல்லது எதிர்வரும் தேர்தல்களில் இவற்றை மக்கள் முன்பு வைத்து ஆணையைப் பெற வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு கூற்று அரசியலில் மறு கூற்று என்றிருப்பது எமது மக்களை ஏமாற்றுவதாகவே முடியும்.

இராணுவம் முற்றுமுழுதாக வடக்குக் கிழக்கு மாகாணங்களை விட்டு வெளியேற வேண்டும் என்று எமது மக்கள் வலியுறுத்தும்போது தனியார் காணிகளிலிருந்து அவர்கள் வெளியேறினால் அதுவே போதும் என்ற அடிப்படையில் செயற்படுகின்றனர் தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். வடக்குக் கிழக்கில் இருந்து இராணுவம் முழுமையாக வெளியேற்றப்பட வேண்டும் என்று அரசையோ அல்லது பன்னாட்டுச் சமூகத்திடமோ கோர அவர்கள் அஞ்சுகின்றனர். மடியில் கனம் இருப்பதால் தான் அவ்வாறு அஞ்சின்றனர் போலும்!

இராணுவம் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு எமது மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட சொற்ப மீள்குடியேற்ற நிதியை இராணுவம் வேறிடத்தில் முகாம் அமைப்பதற்குச் செலவாக வழங்கும் வினோதம் இங்குதான் இடம்பெறுகிறது. எமது மக்கள் வீதிக்கு விரட்டப்பட்டு அவர்களின் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்வதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைக்கும் வகையில் வியாபாரங்களையும் செய்து வருகின்றது.

பொருளாதார முக்கியத்துவம் மிக்க இடங்கள் இனம் காணப்பட்டு தென்னிலங்கை மக்கள் வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மீன்பிடியில் ஈடுபடுவதற்கும் இராணுவம் ஊக்குவிக்கிறது. இராணுவம் முன்னர் இருந்த முன்னரங்க நிலைகள், மினி முகாம்கள் போன்றவற்றில் தாம் வணங்குவதற்கு என்று அமைக்கப்பட்ட புத்தர் சிலைகள், இராணுவம் அந்த இடங்களில் இருந்து வெளியேறிய பின்னரும் அகற்றப்படாமல் விடப்பட்டுப் பௌத்த விகாரைகளாக மாற்றப்படுகின்றன. இவற்றைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசி அரசைச் சங்கடப்படுத்தக்கூடாது என்றும் தமது பதவிகளுக்கு ஆபத்து வரக்கூடாது என்றுமே எமது தலைவர்கள் நினைக்கின்றனர்.

### முல்லைத்தீவு விழுங்கப்படுவதைத் தெரிந்தும் தெரியாமல் இருக்கிறார்கள்

வலி. வடக்கில் சிறிய துண்டுக் காணிகளை விடுவித்துவிட்டு, முல்லைத்தீவு என்ற ஒரு மாவட்டமே திட்டமிட்ட குடியேற்றங்களால் முற்றிலுமாக விழுங்கப்படுவதைத் தெரிந்தும் தெரியாததுபோல் உள்ளனர் எமது தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். வடக்குக் கிழக்கில் தொல்பொருள் திணைக்களம், வன இலாகா, மகாவலி அபிவிருத்திச் சபை ஆகியன பூர்வீகத் தமிழர் வாழ்விடங்களை எல்லாம் ஆக்கிரமிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர் தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். காணாமல் போனவர்களின் உறவுகள் வீதிகளில் பல வருடங்களாகப் போராடி வருகின்றனர். கண்துடைப்பு முயற்சியாக ஏற்படுத்தப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அதிகாரமற்ற அலுவலகம் தனது இடைக்கால அறிக்கையைக் கடந்த செப்ரம்பர் மாதம் ஐ.நா மனிதவுரிமைச் சபையின் கூட்டத்தொடரை ஒட்டி அவசர அவசரமாக வெளியிட்டுவிட்டு இன்று உறங்கு நிலைக்குச் சென்றுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளி உலகுக்குக் குறைத்துக் காட்டுவதே இந்த அறிக்கை வெளியிடப்பட்டதன் ஒரே நோக்கமாகும். முறைப்பாடு செய்தோர் மட்டுமே கணக்கில் எடுக்கப்பட்டுள்ளனர். பலர் முறைப்பாடே செய்யவில்லை. பலர் முறைப்பாடே செய்ய முடியாத அளவுக்குக் குடும்பத்துடன் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பலர் உயிருக்குப் பயந்து புலம் பெயர்ந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழு தனது ஆய்வில் இந்த மட்டுப்படுத்தல்கள் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. மன்னார் ச.தொ. ச வளாக் மனிதப் புதைகுழியில் இன்றுவரை குழந்தைகள் உட்பட எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை இருநூறை எட்டியுள்ளது. அதேபோல வேறு பல இடங்களிலும் மனிதப் புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சரியான முறையில் முகாமைப்படுத்திப் பன்னாட்டுக் கவனத்துக்கு எடுத்துச் செல்வதற்கு எமது தலைவர்களுக்கு வக்கில்லை. அவர்களால் அதைச் செய்ய முடியாது. ஏன் என்றால் அவர்கள் சலுகைகளுக்கும் சொகுசுகளுக்கும் அடிமைப்பட்டு விட்டார்கள்.

### அரசியல் சாணக்கியம் பற்றிக் குறிப்பிடும் கூட்டமைப்பு அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கவில்லை

குறைந்த பட்சம் இந்த நல்லாட்சி அரசுக்கு வழங்கும் ஆதரவின் ஊடாக ஒரு நல்லெண்ண நடவடிக்கையாகத் தடுப்பிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளையாவது விடுவிக்க முடிந்திருக்கின்றதா? அரசியல் சாணக்கியம் பற்றி அடிக்கடி குறிப்பிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16பேரை நாடாளுமன்றத்தில் வைத்துக்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஏன் இதுவரை எந்தவிதமான காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. ஆகக்குறைந்தது வரவு செலவு திட்டத்தைக் கூடச் சாதகமாகப் பயன்படுத்திக் கைதிகளின் விடுதலைக்கு முயற்சி செய்யாமல் அரசின் வரவு செலவுத் திட்டங்களுக்கு ஆதரவாகத் தவறாமல் வருடா வருடம் வாக்களித்து வருகின்றார்கள். இவர்களின் மீது நம்பிக்கை இழந்துள்ள நிலையிலேயே அரசியல் கைதிகளின் விடுதலைக்காக எமது பல்கலைக்கழக மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளையும் இடைநிறுத்தி வீதியில் இறங்கிப் போராடும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

### நான்காவது தெரிவிலும் உடன்பாடில்லை

போர்க்குற்ற விசாரணைக்கான பன்னாட்டு மனித உரிமைகள் சபையின் கோரிக்கையை மேலும் பலப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான காத்திரமான எந்த நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை. கால இழுத்தடிப்புக்களை மேற்கொள்ளும் அரசின் நடவடிக்கைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் துணை போகின்றது என்பதுதான் யதார்த்தம். ஆகவே, இன்றைய நெருக்கடியானதும் இக்கட்டானதுமான காலகட்டத்தில் தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்திச் சிந்திக்கும்போது, ஒரு மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கிச் செயற்படும் நான்காவது தெரிவு அதிகாரமற்ற ஒரு இயக்கத்தின் வெறும் ஆதங்க வெளிப்பாடாகவே இருக்கும் என்று எனக்கு புரிந்துள்ளது. அதனால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவர் மக்கள் இயக்கமொன்றை நான் முன்னெடுத்துச் செல்வதைத் தாம் வரவேற்பதாகக் கூறியுள்ளார்.

எனவேதான் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து தமிழ் தேசிய கோட்பாடுகளின்பால் பற்றுறுதியுடன் இருக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்கும் மூன்றாவது தெரிவே சிறந்ததும் அவசியமானதும் என்று உணர்கின்றேன். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் பல தமிழ் புத்திஜீவிகளும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களும் இது காலத்தின் அவசியம் என்றும் எனது கடமை என்றும் உணர்த்தியுள்ளதுடன் தமது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக, நான் சந்தித்த ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இந்த கோரிக்கையைத் தான் என்னிடம் விடுத்துவந்திருக்கின்றார்கள். ஆகவே நீங்கள் விரும்பியபடியே எனது அரசியல் பயணம் தொடரும். என்னை நம்பிய எனது மக்களுடன் இறுதிவரை வாழ்ந்து அவர்களுக்காகப் பணி செய்வது என்று முடிவுசெய்துள்ளேன்.

### தமிழ் மக்கள் கூட்டணி

பதவியில் இருந்து தற்போது தற்காலிகமாக ஒதுங்கியிருப்பது எனது உடல் நிலையை வெகுவாகச் சீர்செய்யும் என்று எதர்பாக்கின்றேன். வடமாகாண முதலமைச்சராக இருந்த காரணத்தால் வரையறைகளுக்கு அமைவாக எனது செயற்பாடுகள் வட மாகாணத்துக்குள்ளாகவே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. கிழக்கு மாகாண மக்களுக்கு எந்த உதவிகளையும் என்னால் செய்யமுடியவில்லை. உரிமைகளுக்கான எமது போராட்டத்துக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் செய்துள்ள தியாகம் மற்றும் காத்திரமான வகிபாகம் ஆகியவற்றை நான் அறிவேன். அவர்கள் இன்று சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்து வருவதையும் நான் அறிவேன். அங்குள்ள சமூக தலைவர்கள்ருபவ் செயற்பட்டாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்துதான் உருவாக்கவிருக்கும் புதிய அரசியல் கட்சியின் ஊடாகப் பணியாற்றுவதற்கு நான் உறுதி பூண்டுள்ளேன்.

தமிழ் மக்கள் பேரவையின் அனுசரணையுடன் ஓர் அரசியல் கட்சியை உருவாக்கும் நடவடிக்கைகளை நான் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டேன். தமிழ்த் தேசியக் கோட்பாடுகளின் வழிநின்று எமது இனத்தின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலையை வென்றெடுத்து மேன்மையை அடைவதற்கு, மனித உரிமைகளை மதித்து நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் அனைவரையும் ஒரு குடையின் கீழ் சேர்ப்பதற்கு இந்தக் கட்சிப் பயணம் உறுதுணையாக அமையும். இதற்கு 'தமிழ் மக்கள் கூட்டணி' (Thamizh Makkal Kootanii- T.M.K) என்ற காரணப் பெயரை இட்டுள்ளேன்.

என் அன்புக்குரிய மக்களே!

இது எனது கட்சி அல்ல. இது உங்களின் கட்சி. நீங்கள் வளர்க்கப்போகும் கட்சி. காலத்தின் அவசியத்தால் உதயமாகும் கட்சி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கொள்கைகளுக்கு விசுவாசமாக இதுகாறும் நடந்திருந்தார்களேயானால் நான் ஓய்வு பெறப் போயிருப்பேன். ஒரு கட்சியை உருவாக்க என்னைக் கட்டாயப்படுத்தி விட்டார்கள் கூட்டமைப்பினர்! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்த விதத்திலும் கூறு போட நான் விரும்பவில்லை.

எனது குறிக்கோள்கள் சரி என்றால் மக்கள் என் பக்கம் சார்வார்கள். இல்லையேல் என்னைத் ஒதுக்கி விடுவார்கள். அது மக்களின் விருப்பம். எமது மக்களின் அரசியல், சமூக பொருளாதார மற்றும் கலாசார விடுதலைகளுக்கான 'மக்கள் அரசியலை' முன்னெடுக்கும் பொருட்டாகச் சில செயற்திட்ட முன்மொழிவுகளை இந்தச் சந்தர்ப்பதில் இறுதியாக முன்வைக்க விரும்புகின்றேன். இவை மேலும் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டும். விவாதத்துக்கு உட்படுத்தப்படவேண்டும். உபாயங்கள் வகுக்கப்படவேண்டும். அவை யாவன

1. கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள், முன் கோபதாபங்கள், குரோதங்கள், விரோதங்கள் எல்லாவற்றையும் களைந்துவிட்டுத் தமிழ் தேசியக் கோட்பாடுகளுக்கு அமைவாக இணைந்த வடக்குக் கிழக்கில் பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் 'சமஷ்டி'த் தீர்வு ஒன்றைக் காணும் எனது அரசியல் பயணத்தில் கைகோர்க்குமாறு அகத்திலும் புலத்திலும் உள்ள அனைவரையும் அழைத்து அரவணைத்துச் செயற்பட வேண்டும்.
2. இணைந்த வடக்குக் கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அக்கறையுடனும் இதய சுத்தியுடனும் பரிசீலிக்கும் எந்த அரசுடனும் பேச்சுக்களில் கலந்துகொண்டு தீர்வை அடையப் பாடுபட வேண்டும்.
3. அரசுடன் தடைப்பட்டுப் போயுள்ள இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு உள்நாட்டிலும் பன்னாட்டுச் சமுகத்தின் ஊடாகவும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
4. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குக் குறுக்கு வழிகளைக் கையாளாமல் போர்க் குற்ற விசாரணைகள் மூலம் உண்மைகளை எமது சிங்களச் சகோதர்களுக்குத் தெரியப்படுத்திப் பரஸ்பர அவநம்பிக்கைகள் மற்றும் அச்சங்களை நீக்கி நிலையான சமாதானம் ஏற்படுவதற்குச் சகல வழிகளிலும் பாடுபடுபட வேண்டும்.

இதற்காகச் சிங்களப் புத்திஜீவி கள், மனித

(18ஆம் பக்கம் பார்க்க)



# 'வாசிப்பு' அழிவின்றிய மனிதத்தின் உயிர்ப்பான சுவாசிப்பு



உடுவிலூர் கலா

வாசிப்பு மாதத்தில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஐப்பசி மாதம் முழுவதும் வாசிப்புமாதமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. அறிவியலிலும், ஆடம்பர மோகத்திலும், இயந்திர வாழ்க்கையிலும் பின்னிப்பிணைந்து சல்லாபிக்கும் மனிதன் வாசிப்பை மறந்துவிட்டான். உலகளாவிய ரீதியில் பன்முக நிலைகளில் நாம் வளர்ச்சி அடைந்தாலும், வாசிப்பால் தன்னிறைவு காணக்கூடிய வாழ்வியலைப் புறக்கணித்து வருகின்றோம். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். எண்ணிலடங்காத நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றான். இது மனித நேயம்மிக்க வாழ்வியல் நெறியை எமக்குப் போதிக்கின்றது. ஆளுமை மிக்க மனிதர்களை உருவகம் செய்கிறது.

தாய்மொழி அறிவும், தாய்த் தமிழ் மொழி மீதான பற்றும் விசுவாசமும் அதிகரிக்கின்றது. சிறுபிள்ளைகளின் மொழித்திறன், கேட்டல் மற்றும் கிரகித்தல் திறன் என்பன அதிகரிக்கின்றன. எழுத்துக்களை சரியான முறையில் உச்சரிக்கவும், குறியீடுகளைத் தெரிந்து கொள்ளவும், பந்தி அமைக்கும் முறை மற்றும் வாக்கிய அமைப்புகள் குறித்து அறிந்துகொள்ளவும் உதவுகின்றது. பொது அறிவு வளர்ச்சியை மேம்படுத்துகிறது. பல்வேறுபட்ட கலாசார முறைமைகள்,பாரம்பரியங்கள் போன்றவற்றையும் வாசிப்பு என்ற செயல்வினை தெளிவுபடுத்தி எமக்குப் போதிய அறிவைத் தருகின்றது.

### தேசிய வாசிப்பு மாதம்

மனித வாழ்வியல் மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் வாசிப்பு என்ற செயற்றிறனை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு நாடுகளிலும் ஐப்பசி மாத காலப்பகுதி வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப் பட்டுள் ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த 2004 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதம் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் சனசமூக நிலையங்கள், நூலகங்கள், அரச பணிமனைகள், பாடசாலைகள் போன்ற பொது நிறுவனங்களில் பல்வேறுபட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகள் வருடந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உண்மையில் எம்மவரிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவரும் நிலையில் இத்தகு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை வரவேற்கத் தக்கவிடயம்.

### அறிவைத் தரும் கருவி

கல்வி என்ற பெருஞ் செல்வத்தை அடைவதற்கான முயற்சியின் படிக்கட்டுக்களில் பயணிக்கின்ற மாணவர் சமுதாயம், வாசிப்பு என்ற உயரிய செயற்காரியத்தைப் புறந்தள்ளுவது நியாயமற்றது. அதிவேக உலகில் நாம் வாழ்ந்தாலும் அறிவைத்தேடவும், அதன்படி நடக்கவும், சமூகவெளியில் நிமிர்ந்து வாழவும், எதிர்கால சந்ததிக்கு அறிவுசார்ந்த படைப்புக்களை வழங்குவதற்கும் வாசிப்பு உறுதுணைபுரிகின்றது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆகவே, ஆளுமை மிக்க மனிதர்களாக நாம் உருவாக்கம் பெறுவதற்கு நல்ல புத்தகங்களே துணை நிற்கின்றன. வாசிப்புத்திறனை அதிகரிக்க சிறுபராயம் முதல் விருப்புடன் வாசிக்கப் பழக வேண்டும்.

### பெற்றோரின் வகிபாகம்

பிள்ளைகளின் அறிவு விருத்தியில் பெற்றோரின் பங்கு அளப்பரியது. சிறுவயதிலேயே அவர்களுக்குப் பொருத்தமான இலக்கியப் படைப்புகளை பெற்றோர் வாங்கிக் கொடுக்க வேண்டும். வாசிப்பை நேசிக்கும் விதமாக நேர ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அவர்களை வாசிப்பில் ஈடுபடச்செய்யவேண்டும். அதேநேரம் பெற்றோர்களும் வாசிக்கும் பழக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும். அமைதியான, காற்றோட்டமுள்ள சூழலில் இலாவகமாக அமர்ந்திருந்து வாசிக்கவேண்டும். வாசிப்பு என்பது அன்றாடம் உணவு உண்பதுபோல, வாழ்வியலின் ஒரு பகுதியான செயலுருவாக அமையவேண்டும். வீட்டிலேயே பிள்ளைகள், பெற்றோர் என வாசிப்புக்கான போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கலாம். மேலதிகமாகப் புத்தகங்களை வாசிக்க நூலகங்களுக்குக் கூட்டிச்சென்று பெற்றோரும் சேர்ந்து வாசிக்கலாம். தனிமையில் வாசிக்கும்போது குறியீடுகள் , சொற்றொடர்களை அவதானித்து உரக்க வாசிக்கலாம். இத்தகு செயற்பாடுகள் எதிர்காலத்தில் பிள்ளைகளிடத்தே சிறந்த பேச்சுத்திறனை வளர்த்துவிடும். சனசமூக நிலையங்கள், நூலகங்களில் வாசிக்கும் போது அங்குள்ள ஏனையோருக்கு இடையூறின்றி அமைதியாக வாசிக்கவேண்டும். வாசிக்கும்போது விடயங்களை கருத்தூன்றி, பொருளுணர்ந்து வாசிக்கவேண்டும். வாசிப்பில் தெளிவின்மை இருந்தால் , திரும்பத்திரும்ப வாசித்து சீரான வாசிப்பைப் பெறலாம். தினமும் சிறிய பந்தி, கவிதை, சிறுகதை போன்றவற்றை பிழையின்றி வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். குறிப்பாக வாசிப்பை மேம்படுத்துவதற்கு அன்றாடம் செய்தித்தாள்களை வாசிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

### வாசிப்பை நேசித்த மனிதர்கள்

தொடர்ந்து விருப்புடன் வாசிப்பவர்கள் சிறந்த அறிவுடமையையும்,கல்வியையும் பெற்று வாழ்வியல் நெறியில் முழுமைபெறுகின்றனர். புத்தகங்கள் மனித வாழ்வியலின் பெரும்பேறாகும். பிரான்சிய படைத்தளபதி 'நெப்போலியன்' ஐந்து வயதில் இருந்தே வாசிப்பை நேசித்த மனிதர். போருக்குச் செல்லும்போது கூட வாசிப்பதற்காக முக்கிய நூல்களை எடுத்து செல்வதை நெப்போலியன் வழக்கமாகக் கொண்டிருந்தார். புத்தகத்தை இரவல் வாங்கி வாசித்த 'ஆபிரகாம் லிங்கன்' பின்னாளில் அமெரிக்க அரச அதிபரானார். 'கென்னடி, அப்துல்கலாம், ரைட் சகோதரர்கள், சோக்கிரட்டீஸ்' போன்றவர்களும் வாசிப்பால் அறிவைப்பெற்று உயர்நிலை அடைந்தனர். விழிப்புலனற்ற 'லூயிஸ் மினாரல்' தாயாரின் உரத்த வாசிப்பின் மூலம் அறிவை வளர்த்துக்கொண்டார். தொடுகைமூல எழுத்தை உலகுக்கு அறிமுகம் செய்தவர் இவரே. தொழிலாளர் தலைவர் என உலகம் போற்றும் 'சேகுவரா'வின் நாமங்களை உலகம் இன்றும் உச்சரித்துக்கொண்டிருக்கிறது. இதுதவிர எம்மத்தியில் இருந்துகொண்டு' அற்புதமான இலக்கியப் படைப்புக்களை தந்துகொண்டிருக்கும் படைப்பாளிகளும் புத்தகங்களின் பிரியமான நண்பர்களே.நல்ல வாசகர்களே.

### வாசிப்பை நேசிப்போம்!

தற்கால வாசிப்புப் பழக்கம் என்பது பாடசாலைப் புத்தகங்களோடே நிறைவுபெறுகின்றது. இது தவறான செயற்பாடு மட்டுமல்ல, குற்றம் கண்டுகொள்ளக்கூடிய பாரதூரமான செயற்பாடாகவும் அமைந்துள்ளது. ஆம், எம்மிடம் பொருள் இருந்தாலென்ன, பணம் இருந்தாலென்ன வாசிக்கும் பழக்கம் இல்லையேல் வாழ்க்கை என்பது தன்னிறைவோடு முழுமையடையாது. ஆகவே, வாசிக்க ஏற்ற சூழலை பெற்றோர் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். சிறந்த புத்த கங்களை பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுக்க வேண்டும். குறிப்பாக, திருமண நாள், பிறந்தநாள் போன்ற விசேடத்துவமான தினங்களில் புத்தகங்களை பிள்ளைகளுக்கு பரிசளிக்கலாம். வீடுகளில் சின்னதாக ஒரு நூலகத்தை அமைத்து வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலாம்.

ஆக, வாசிப்பதற்கு யாரும் தடை போட முடியாது. மகிழுந்து, தொடருந்துப் பயணங்களில் கூட வாசித்துக் கொண்டே பயணம் செய்யலாம். விடியும் ஒவ்வொரு நாள்களையும் ஒவ்வொருவரும் வாசிப்புடனேயே தொடங்கி, ஆரோக்கியமான அறிசார்ந்த சமூக வெளியைப் பரிசளிக்க வேண்டும். வாசிக்க முடியாது என்றோ, வாசிப்பின் மேல் கரிசனை இன்றியோ இருந்து வீணே காலங்களைக் கழிக்காது, மனிதமுடைய உயிரியாக வாழ்வதற்கு வாசிப்பை நோசிப்போம். வாசிப்பை சுவாசிப்போம்! வாழ்வியல் நெறிமுறைக்கு உறுதுணையாக புத்தங்கள் உள்ளன என்பதை சிந்தனைபூர்வமாக உணர்ந்து கொள்வோம்.

---

## எனது அரசியல் பயணம் தொடரும்!

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காகச் சிங்களப் புத்திஜீவி கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமூக மற்றும் மதத் தலைவர்கள் மற்றும் ஊடகங்களுடன் நெருக்கமாகச் செயற்பட வேண்டும்.

5. நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டின் மூலம் தனிப்பட்ட கட்சி நலன்களைப் புறந் தள்ளி மூலோபாய திட்டமிடலுடனான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

6. அரசியலையும் அபிவிருத்தியையும் சம அளவில் சமாந்திரமாகக் கொண்டுசெல்லும் நிறுவன மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

7. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் புலம்பெயர் மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உலக நாடுகளின் உதவியுடன் சுயசார்பு பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்தி மீண்டும் அவர்களுக்கு வளமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்தும் பொருத்தமான ஒரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

8. அரசியல் கைதிகள், காணமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் மக்களின் காணிவிடுவிப்புப் போன்றவற்றுக்குப் பன்னாட்டுச் சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் உதவிகளுடனும் அரசுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமும் தீர்வு காணும் நடவடிக்கைகளை மேலெடுக்க வேண்டும்.

9. இறுதிப்போரில் நடைபெற்றது இன அழிப்புத் தான் என்று வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வலுப்படுத்த, மேலும் ஆய்வுகளைச் செய்தும் தரவுகளைத் திரட்டியும் பன்னாட்டு ரீதியாக அதை ஏற்றுக்கொள்ளச்செய்தல் வேண்டும். இதற்குக் காலம் கனிந்து வருகின்றது என்பதே என் கருத்து.

10. உலகம் முழுவதிலும் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி எமக்கு அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலமான ஓர் ஆதரவுச் சக்தியை உருவாக்க வேண்டும். எமது இனத்தின் இருப்பை உறுதிசெய்யும் எமது நியாயமான இந்தச் சுய பாதுகாப்புப் போராட்டத்துக்குப் புலம்பெயர் தமிழ் மக்கள் முக்கியமாகத் தமிழ் நாட்டில் வாழுகின்ற கோடிக்கணக்கான எமது மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற தமிழ்மக்களும், அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழும் எம் தமிழ் மக்களும், சேர்ந்து அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பையும் ஆதரவையும் எமக்கு வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பதில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மக்கள் தந்த ஆணைதான் எனது மனசாட்சியாக இதுவரை இருந்துவந்துள்ளது. அவர்கள் அளித்த வாக்குகள் தான் என் சக்தி. நம்பிக்கையுடன் வாக்களித்த மக்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ, என்னால் துரோகம் செய்ய முடியாது. இதை என் பலம் என்பர் சிலர். சிலர் பலவீனம் என்பர். இது பலமா? பலவீனமா? என்பதை வரலாறு தீர்மானிக்கட்டும். ஒருபோதும் மக்கள் எனக்கு அளிக்கும் ஆணைக்கு விரோதமாக நடக்கமாட்டேன். மக்களின் ஆணைக்கு விரோதமாக நடந்துவிட்டு அதற்குச் சாணக்கியம் என்றும் ராஜதந்திரம் என்றும் முகமூடிகளை அணிந்து கொள்ளமாட்டேன். எமது இனத்தின் வரலாறு எனக்கு வழி காட்டும்.

எனதினிய தமிழ் மக்களே!

அகவை எண்பதில் இன்று காலடி எடுத்து வைக்கும் இந்த வயோதிபனை உங்கள் சேவகனாக்க முன்வாருங்கள். புதிதாக உதயமாகும் உங்கள் கட்சியைக் கையாள கனத்த எம் மக்கள் ஒன்று திரள வேண்டும். இன்றுடன் அரசு எனக்களித்த அதிகாரங்கள். சலுகைகள்ருபவ் சார்பான அனுசரணைகள் யாவும் அரசால் திரும்பப் பெறப்படுவன. இப்பொழுது நான் உங்கள் வீட்டுப் பிள்ளை. என்னை உரியவாறு உருவாக்குவது உங்கள் பொறுப்பு! என்னை வளர்த்த தமிழ் மக்கள் பேரவைக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி இராஜேஸ்வரி சிவஞானசுந்தரம்

மாதகல் மேற்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும் தற்போது Switzerland ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சிவஞானசுந்தரம் நேற்று (24.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - பொதுவேலைத் திணைக்களம்) மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை. பாவனியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவஞானசுந்தரத்தின் (சுவிஸ், முன்னாள் பணியாளர் - பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்) ஆருயிர் மனைவியும் சிவனேஸ்வரி (சுவிஸ்), சிவசேகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஞானசகரன் (சுவிஸ்), இராசசேகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணேசகுமார் (சுவிஸ்), ஜெயசீலி (சுவிஸ்), ஜெயவதனி (சுவிஸ்), சோபனா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் நித்தியானந்தன் (முன்னாள் பணியாளர் - பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்), சற்குணானந்தன் (டென்மார்க்), நாகேஸ்வரி (இலங்கை), இரத்தினேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜனனி (சுவிஸ்), யாழினி (சுவிஸ்), செந்தூரன் (சுவிஸ்), சோதியா (சுவிஸ்), மயூரன் (சுவிஸ்), ஜெய்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (29.10.2018) திங்கட்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்: ந.நித்தியானந்தன்**
**(சகோதரன்) 077 590 6528**

(CS 18497/15/17)

---



தோற்றம் 12 . 04 . 1954

மறைவு 23 . 10 . 2018

### வல்லிபுரம் தர்மகுலசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

யாழ். சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) 23.10.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். மனோன்மணியின் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) அன்புக் கணவரும். சாழினி (பிரான்ஸ்). சாழீபன் (Quantity Surveyor, Saudi), விசாழீபன் (ஆசிரியர் - மன்/ஆண்டான்குளம் R.C.T.M.S), பானுசங்கர் (மாணவன் - மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். புவனேஸ்வரராஜா (பிரான்ஸ்). கீதாஞ்சலி (முதலமைச்சர் அலுவலகம்.வ.மா) ஆகியோரின் அன்பு மாமனும். காலஞ்சென்ற பாலசுந்தரம். காலஞ்சென்ற பரமேஸ்வரி. காலஞ்சென்ற தியாகராஜா. காலஞ்சென்ற செல்வராஜா. விஜயரத்தினம். சீவரத்தினம். காலஞ்சென்ற தில்லைநாதன் ஆகியோரின் அன்பு சகோதரனும். காலஞ்சென்ற சௌவுந்தர நாயகி. காலஞ்சென்ற நாகராசா. சின்னராசா. நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும். நிவேக்கா. கிஷாரா. அனித்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**47, பொன்னுச்சுவாமி வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/20780)(11,17)

**077 978 9177, 077 202 8183**

---

**விற்பனைக்கு**

அல்ஷேசன் நாய்க்குட்டிகள் 35 நாள்
நிரம்பிய லயன் சப்பேட் நாய்க்குட்டிகள்.
வான்கோழிகள் விற்பனைக்குண்டு.
**077 592 5085**

---

## விண்ணக வாழ்வின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் றொசாறியோ
### வயலற் அந்தோனிப்பிள்ளை

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் "
– யோவான் 11:25


அருகிருந்து அரவணைத்து அன்பு செய்தீர் எம்மை
ஆறுதலும் தந்தெமக்கு ஆதரவாய் நின்றீர்
மேதினியில் சிறப்புடனே நாமும் வாழ – உம்மை
மெழுகாக உருக்கி நீரும் வாழ்வு தந்தீர்
மேன்மைகொள் இறையவனின் சந்நிதியில்
மேலான நிறை அமைதி கொண்டிடுவீர்

என்றும் உங்கள் நினைவில்
**குடும்பத்தினர்.**
பத்திமா கோயிலடி, பண்டத்தரிப்பு

அன்னையின் அணைப்பில் 08.12.1933
ஆண்டவன் அழைப்பில் 25.10.2015

---

## 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு




கடந்த 13.09.2018 அன்று
சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையான
அமரர்
### கந்தையா நடராசா
அவர்களின்
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (25.10.2018) வியாழக்கிழமை
அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

ஓட்டுசுட்டான் வீதி,
நெடுங்கேணி.
077 880 0934

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 02 . 1942

இறப்பு 22 . 10 . 2018

### திருமதி சற்குணமலர் இராசலிங்கம்

ஆனந்தா வீதி. மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணமலர் இராசலிங்கம் 22.10.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும். சுபாஸ்கரன் (பிரான்ஸ்). தபோநிதி. தயாபரன் (இந்தியா). மனோகரன். சாரதாநிதி. ஹரிகரன். காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் றாகிநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும். யோகேஸ்வரி (பிரான்ஸ்). சிறீஸ்காந்தராஜா. மரியரீட்டா (இந்தியா). பாலேஸ்வரி. மதிவாணி. ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும். நீதிராசா. தமிழினி. மதனவேல். பிரதீபா. அமீறா (பிரான்ஸ்). சங்கீர்த்தனன். குயிலினி. பிரதீபன். டிலோஜினி. சதுர்ஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். -

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனந்தாவீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS/20780)(11,17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 01 . 1946



மறைவு 04 . 11 . 2017

### திருமதி செந்திலெட்சுமி சோமசுந்தரம்

அம்மா உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசை முகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாய் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உமைக்காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம்.
எம் வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்
இறைவன் தாள்மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.

60, சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



### பேரின்பநாதன் பிரசாந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.10.2018) வெள்ளிக் கிழமை காலை 5.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீ கரண கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தல்லையப்புலம்"
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்:
077 088 2799

## மரண அறிவித்தல்

### செல்வி வசந்தமலர் பொன்னையா



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வசந்தமலர் பொன்னையா நேற்று (24.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், தருமலிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான பாலகிருஸ்ணன், துரைரத்தினம், பரம்சோதி, நாகம்மா, அம்பிகாவதி மற்றும் சுகிர்தமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜியலெட்சுமி (Canada), தனபாக்கியலட்சுமி, காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சண்முகரெட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், றமேஸ், றஜனி, சபேசன், மகேசன், றமணி, சந்திரராசா, சந்திரகுமார், சந்திரன், பவித்திரா, அகல்யா, றஞ்சி, ஜெயா ஆகியோரின் பாசமிகு மாமியும், சண்முகப்பிரியா, மயூரப்பிரியா ஆகியோரின் பெரியம்மாவும், கவின்யா, கனுசிகா, பவிசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருபாமூர்த்தி, கிசோர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மனியளவில் கொக்குவில் இந்து மயானத்துக் எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மனம் என்னும் மேடையிலே மலர்ந்திருக்கும் அன்புத் தெய்வத்தின் இருபத்தெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் புதுமலராய் 15 . 04 . 1904



விண்ணுலகில் ஒளிவடிவாய் 30 . 10 . 1990

### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

திதி: அபரபக்க பிரதமை (25.10.2018)

அன்புநிறை அப்பாவே அருள் நிறைந்த ஆலயமே
அயரா உழைப்பாலே அகிலமதில் புகழ் பெற்றீர்
மருதநிலம் சூழ்ந்திட்ட மதிப்புமிக்க ஊரினிலே
மாறா இளமையுடன் மகிழ்வுடனே வாழ்ந்தீரே....!

நீர்க்குமிழி போன்ற நிலையில்லா பிறவிதனில்
நேர்மையுடன் வாழ்வதற்கு நித்தமுமே பாடுபட்டீர்
கல்வி செல்வம் மிக்கவராய் காசினியில் வாழவிட்டு
காலத்தின் கோலமதால் கணப்பொழுதில் மறைந்தீரே!

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்தியமும் நினைவலைகளும்

### 31ஆம் நாள் 138ஆவது நாள்

தோற்றம் 08.10.1938



மறைவு 25.09.2018

தோற்றம் 07.10.1928



மறைவு 10.05.2018

**திருமதி சின்னம்மா தர்மலிங்கம்** அமரர் **கந்தையா தர்மலிங்கம்**

நாள்கள் பல ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபங்கள் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமைபோல எமைக் காத்த
அம்மா அப்பாவே - உங்கள்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

கடந்த 25.09.2018 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சின்னம்மா - தர்மலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.10.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நாஹறா மருத்துவ நிலையம்

முழங்கால் வாதம், பாரிசவாதம், எலும்பு சார்ந்த பாதிப்பு, தீராத புண்கள், கெற்ப வருத்தம் என்பவற்றுக்கு சிறப்பு சிகிச்சை T.P.: 077 321 2740

வங்கி முன்லேன்,
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

## தேவை

கல்விசார் புத்தக வெளியீட்டை மேற்கொள்ளும் நிறுவனத்தின் யாழ் கிளைக்கு Tamil மற்றும் English Type Setters, Pagemaker, Coral draw மற்றும் அச்சக அனுபவம் உள்ளவர்கள் தேவை.

077 361 3285

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட IT முதுமாணி, Consultant in A Leading New York Based Co இல் தொழில்புரியும் மணமகனுக்கு, வயது - 30-33, உயரம் -5' 5" -5' 8", மெல்லியவர், நிறம் முக்கியமல்ல, பல்கலைப் பட்டம் பெற்ற மணமகள் தேவை.

**754 252 0213 (அமெரிக்கா)**

## வெளிவந்துவிட்டது.

மாகாணமட்ட பொது பரீட்சை, புதிய பாடத்திட்டம் 2018 **5 பாடங்களுக்கானது** வெளிவந்துவிட்டது. O/L புதிய பாடத்திட்டம் 2016 வரலாறு மாதிரி வினாத்தாள்கள்

**சகானியா வெளியீடுகள்.**
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
**இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 350/= மட்டும்

**U.S.A பாம் (குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.)**
**T. P : 077 8689 500**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

# இது உங்களுக்கான தருணம்!

**அரசாங்க தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளில் நீங்களும் பங்குகொள்ள**

**திறந்த அரசாங்கத்திற்கான 2வது தேசிய செயல் திட்டத்திற்கு உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துங்கள்**

ஊழலுக்கெதிராக செயற்படுவது முதல் ஊனமுற்றோரது உரிமைகள் மற்றும் பொதுச் சேவைகளை வலுப்படுத்துவது வரை அரசாங்கத்தில் உங்கள் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகும்.

**www.presidentsoffice.gov.lk** அல்லது **www.tisrilanka.org/nap2** என்ற இணையத்தளத்தினூடாக 2வது தேசிய செயல் திட்டத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

2018 ஒக்டோபர் 26ம் திகதி வெள்ளி முன்னர் **ogp.progress@gmail.com** என்ற மின்னஞ்சல் ஊடாக அல்லது **0112 441 987** என்ற தொலைநகல் இலக்கத்திற்கு எழுத்துமூலமான உங்கள் கருத்துக்களை சமர்ப்பிக்கவும்.

Open Government Partnership












செழிப்பான நெல் வயல்கள் நிறைந்த கிளிநொச்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக LOLC பினான்ஸின் கிளிநொச்சி கிளையானது, VMS கட்டடம், கரடிப்போக்கு, A9 வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியிலுள்ள புதிய இல்லத்தில் பிரவேசிக்கிறது. இக் கிளையினால் வழங்கப்படும் லீசிங், நிலையான வைப்பு, சேமிப்புக் கணக்கு போன்ற பல்வேறு தரமுயர்ந்த நிதிச் சேவைகள் மூலம் உங்கள் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்ட நாம் அர்ப்பணிப்புடன் காத்திருக்கிறோம்.

LOLC பினான்ஸ்

கிளிநொச்சி கிளை,
VMS கட்டடம்,
கரடிப்போக்கு,
A9 வீதி,
கிளிநொச்சி.
தொலைபேசி : 021 5 880 880

www.lolcfinance.com 2001 டிசெம்பர் 13இல் கூட்டிணைக்கப்பட்ட எல் ஓ எல் சி பினான்ஸ் பி எல் சி 2011 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டு, ICRA லங்கா லிமிட்டட்டின் [SL] A (நிலையான) தரப்படுத்தலையும் பெற்ற நிதி நிறுவனமாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3100 திகதி:2018.10.24 புதன்கிழமை
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 44 46 51 63 J
போனஸ் இலக்கம்: 60
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 47,465,915/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சீட்டிழுப்பு வாரம்: 413
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.10.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,998,330/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்: 10 50 54 74 M
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

யாழ். மேல்நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய (01.01.2019 - 31.12.2019) கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்
2. மல்லாகம் நீதிமன்ற வளாகம்
3. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
4. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்
5. பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்
6. யாழ்ப்பாணம் சிறுவர் நீதிவான் நீதிமன்றம்

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ 100/= ஐயும் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 25 000/= ஐயும் செலுத்தி 15.11.2018 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 15.11.2018 பி.ப. 2.00 மணிவரை ஏற்றுக் கொள்வதுடன் பிற்பகல் 3.00 மணிக்கு விலை மனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.


ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும்.

**அன்னலிங்கம் பிரேமசங்கர்**
**மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி / தவிசாளர்,**
**மேல் நீதிமன்ற பெறுகைக்குழு, மாகாண மேல்நீதிமன்றம்,**
**வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.10.2018 வெற்றி வாரம் 2388 வர்ணம் பச்சை
துலாம்
வெற்றி இலக்கங்கள்: 16 23 42 46
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 547, 836/=
2018.10.26 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

DLB தசலக்ஷபதி CAR PLUS
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 81
சீட்டிழுப்பு திகதி 24.10.2018
வெற்றி இலக்கங்கள்: 08 16 50 0
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்க் கிழமை
08
வழங்கப்பட்ட மொத்த பரிசு 4, 161, 180/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அடுத்த சீட்டிழுப்பு 2018.10.31 ஆம் திகதி புதன்கிழமை

# கொள்கலன் திடீரென வெடித்தமையால் பதற்றம்




யாழ்ப்பாணம் ஓக் 26

கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் ஒன்று திடீரென வெடித்து சிதறியதால் குறித்த பகுதியில் நேற்று சற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டது. இந்தியாவில் இருந்து கடந்த 3 நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டுவந்த இரசாயன பொருட்கள் அடங்கிய கொள்கலனே இவ்வாறு வெடித்துள்ளதாக துறைமுகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கொள்கலன் பங்களாதேஷிற்கு அனுப்புவதற்கு தயாராகஇருந்தநிலையில் திடீரென வெடித்து சிதறியுள்ளது. குறித்த கொள்கலன் இருந்த வாகனத்தை ஓட்டிய சாரதி அதிர்ச்சியடைந்த நிலையில் தற்போதுவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (8)

## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.



தரம் III அதிபர்களுக்கான
வெளிநாட்டுப் பயிற்சிக்காக
வட மாகாணத்திலிருந்து தெரிவு
செய்யப்பட்டு மலேசியா சென்றுள்ள
எமது பாடசாலையின் அதிபர்

**திரு. செ. உதயபவன்**



அவர்களை உளமார
பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.


*Congratulations!*

வாழ்த்துவோர் : ஆசிரியர்கள், கிளி /வினாசியோடை மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

# ஐயம்பிள்ளை சச்சிதானந்தன்

*(ஓய்வுநிலை உதவி முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை)*



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.08.1948 | 22.10.2018 |

யாழ்ப்பாணம், நெடுந்தீவு மேற்கு நெல்வரை மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா மூன்றாம் ஒழுங்கை திருநாவற்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சச்சிதானந்தன் கடந்த (22.10.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் அன்னபூரணியின் (ஓய்வுபெற்ற தாதிய சகோதரி) அன்புக் கணவரும் பிரசாத்தின் (பிரான்ஸ்) பாசமிகு தந்தையும் திரு. நடராசா (ஓய்வுநிலை காணி அதிகாரி), திரு. தர்மலிங்கம், திரு. குமாரவேலு, திருமதி மங்கையற்கரசி, திரு. சண்முகநாதன் (கனடா), திரு. தயானந்தராசா (முன்னாள் அதிபர் - மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), திரு. திருநாவுக்கரசு (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திருமதி தங்கரத்தினம், திரு. சிவஞானமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற திருமதி கமலாம்பிகை, திருமதி பராசக்தி (ஓய்வுநிலை ஆசிரியர்), திருமதி அமிர்தாம்பிகை, திருமதி மலர், திருமதி கனகேஸ்வரி, திரு. லிங்கநாயகம் (ஓய்வுநிலை அதிபர்), திருமதி ஆனந்தி (கனடா), திருமதி சத்தியதேவி (ஆசிரியை வண்ணை நாவலர் ம.வி.), திருமதி புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு. பாலசிங்கம் (ஓய்வுநிலை கிராம சேவையாளர்), திரு. சண்முகம் (ஓய்வுநிலை விவசாய அபிவிருத்தி அதிகாரி), காலஞ்சென்ற திரு. செல்வராசா, திருமதி தனலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2018) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**076 603 4900, 077 538 4601** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.06.1947 | 24.10.2018 |



# திருமதி யோகாம்பிகை வல்லிபுரம்

அல்வாய் பூமாஞ்சோலைப் பிறப்பிடமாகவும், இங்கினியாகலை, புசல்லாவை, குளியாப்பிட்டிய, ரண்ண, தெனியாய, மல்லவ ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது றொபேட் குணவர்த்தன மாவத்தை, 12/5.1/1 றொபேட் ரெரஸ் கிருலப்பனையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை வல்லிபுரம் நேற்று (24.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா நாகமுத்து தம்பதியரின் அன்புமகளும் Dr. வல்லிபுரத்தின் அன்புமனைவியும் திருமதி Dr. தேன்மொழி - சுந்தரபாரதி, வசந்தன், வத்சலா ஆகியோரின் அன்புத்தாயும் சுந்தரபாரதி, Dr. சபேசன், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் தரேற், காஸ்வி, திதிக்ஷா, விவிந்ஷா, காருன், ஓவியா, கவின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.10.2018) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் கிரியைகளுக்காக வைக்கப்பட்டு பின்பு பூர்வாராம வீதி, கிருலப்பனை பொது மயானத்திற்கு மாலை 4.30 மணிக்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**வசந்தன் (மகன்) 077 706 2005**

# காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்



யாழ்ப்பாணம் ஒக் 26
பொது மக்களுக்கு சொந்தமான காணியை விடுவிப்பதில் அரசின் நிலைப்பாட்டிலேயே வான் படையும் இருப்பதாக படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகையில் இடம்பெற்ற இராணுவ வீரர்கள் ஞாபகார்த்த மத வழிபாட்டு நிகழ்வின் போதே எயார் மார்ஷல் கபில ஜயம்பதி இவ்வாறு குறிப்பிடார்.

பொது மக்களுக்கு சொந்தமான காணியை வான் படை கைப்பற்றவில்லை.படைப் பிரிவினர் வசமுள்ள மக்களின் காணிகளை டிசெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் விடுவிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்தல் விடுத்துள்ளார். அரசின் நிலைப்பாட்டிலேயே வான் படையும் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (8)

# அனந்தியின் சுயாட்சி கழகம் கட்சியாகப் பதிவாகவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 25
வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்கிற கட்சி இதுவரையில் பதிவு செய்யப்படவில்லை என்று உறுதிப்படுத்தியிருக்கிறார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை உதயன் பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பில் அனந்தியின் கட்சி பதியப்பட்டுள்ளது என்று எழுதப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களமானது 2015ம் ஆண்டின் 19ஆம் திருத்தச் சட்டத்தின்படி ஆணைக்குழுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்சிகளை அனுமதிக்கும் அதிகாரமும் ஆணைக்குழுவிடம் மட்டுமே உள்ளது. அதன்படி ஆணைக்குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் புதிய கட்சியை பதிவு செய்வது உடனடியாகச் சாத்தியப்படக்கூடியதல்ல.

இரு மாதங்களிற்கு முன்னர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தனது மகளுடன் ஆணைக்குழுவிற்குச் சமூகமளித்து கட்சி ஒன்றைப் பதிவு செய்வதற்கான வழி முறைகள் தொடர்பில் கேட்டிருந்தார். கட்சியை உடனடியாக பதிவு செய்ய முடியாது எனக் கூறியதோடு அதற்கான சட்ட ஏற்பாடு தொடர்பான புத்தகத்தையும் ஆணைக்குழு அவரிடம் வழங்கியது.

ஆயுதக் கலாச்சாரத்தை (துப்பாக்கி) ஒழிக்கும் நோக்கிலேயே கட்சி ஒன்றைத் தான் ஆரம்பிக்கிறார் என்று தெரிவித்து தவிசாளருடன் இணைந்து புகைப்படம் எடுத்து நன்றி கூறிச் சென்றார் என்று தெரிவித்துள்ளார் ஹூல். (உ-103)

## தமிழ்க்...

னர்கள், மக்கள் பிரதிநிதிகள் எவருமே கலந்து கொள்ளவில்லை.

தமிழ் மக்கள் பேரவையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் த.சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பினரும் பங்காளிகளாக உள்ளனர். தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தனது அரசியல் எதிர்காலம் தொடர்பில் பேரவையின் கூட்டத்தில் அறிவிக்கப் போவதாகக் கூறியிருந்தார்.

முதலமைச்சர் புதிய கட்சியை ஆரம்பிக்கும் நேற்றைய கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் எந்தவொரு உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை. புளொட் அமைப்பின் உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட எவரும் பங்கேற்கவில்லை.

மேலும், முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது அவரை ஆதரித்த மாகாணசபை உறுப்பினர்களில், திருமதி அனந்தி சசிதரன், க.சர்வேஸ்வரன், பொ.ஐங்கரநேசன், இ.இந்திரராசா ஆகியோரே பங்கேற்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலனும் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். தமிழ் மக்கள் பேரவையின் கூட்டங்களில் பங்கேற்கும், பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (5)

## மனோவின்...

ளதாக, வீடமைப்புச் செயலணியின் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமைதான் அந்த ஒப்பந்த வரைவு கிடைத்ததாகவும், அது அமைச்சு அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

25 ஆயிரம் கல்வீடுகளை வடகிழக்கு மாகாணங்களில் அமைக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சு மாற்றங்களால் அந்தத் திட்டத்தை முன்னெடுப்பது தாமதமானது. இது தொடர்பில் நீண்ட இழுபறி ஏற்பட்டு வடகிழக்கு மாகாண செயலணி ஊடாக அதனை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.


இந்தச் செயலணி ஏற்கனவே இரண்டு தடவைகள் கூடியுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மூன்றாவது கூட்டம் இடம்பெற்றது. 25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் ஒப்பந்தத்தை ஐ.நா. முகவர் அமைப்புக்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை வரைவு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிக் கருத்துக் கேட்கப்படவேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்புவதற்காக மனோகணேசனின் அமைச்சுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வீடமைப்புச் செயலணியின் கூட்டத்தில் இது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், வரைபு தயாரான விடயம் தனக்குத் தெரியாது என்று அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார். உடனடியாக அதனை சட்டமா அதிபரிடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோகணேசனைத் தொடர்பு கொண்டு உதயன் கேட்டது. கடந்த வெள்ளிக்கிழமைதான் அந்த வீட்டுத் திட்ட ஒப்பந்தச் சட்ட வரைவு எனக்கு கிடைத்தது. அது எனது அமைச்சு அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு நேற்று(நேற்றுமுன்தினம்) சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது - என்றார். (உ-5,26)

# தேசமும் அபிவிருத்தியும் இரண்டு கண்களாகும்

## இப்படிச் சொல்கிறார் சுமந்திரன் எம்பி



கொடிகாமம், ஒக். 25
எமக்கொரு தேசம் வேண்டுமானால் அதற்கொரு நிலப்பரப்பு வேண்டும். மக்கள் கூட்டம் வேண்டும். சொந்த மண்ணில் வளமாக வாழும் நிலமை இல்லையென்றால் தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிடுவார்கள். அதைத் தடுப்பதற்காகத்தான் உரிமையைக் கேட்கும் அதே நேரத்தில் அபிவிருத்தியையும் கேட்கிறோம். அவை இரண்டையும் இரண்டு கண்களாகப் பார்க்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஒரு தேசிய இனமாக இந்தத் தீவில் வாழும் நாங்கள் அதற்கான அங்கீகாரம் வேண்டும் எனக் கேட்கிறோம். மக்கள் இல்லாத தேசம் கிடையாது. தமிழர்கள் வாழும் பகுதி ஒரு தேசமாக இருக்க வேண்டுமானால் அதற்கொரு நிலப்பரப்புவேண்டும். மக்கள் கூட்டம் வேண்டும். எங்கள் நிலங்கள் அபகரிக்கப்படுகிறது. நிலங்களை பாதுகாப்பதும் அந்த நிலத்தில் மக்களை வளமாக வாழ வைப்பதும் எங்களுடைய இலக்காக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் நாங்கள் ஒரு தேசமாக மிளிர முடியும்.

ஏங்கள் மக்களின் வாழ்க்கை வளமாக இல்லாவிட்டால் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டுக்கு சென்று கொண்டிருப்பார்கள்.அதன் பின்னர் தேசமும் இருக்காது. எங்களை நாங்களே ஆளுகின்ற கட்டமைப்பினை நாங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று போராடி வருகின்றோம். அதற்காக நகருகிற கால கட்டத்தில் எங்கள் மக்கள் வளமாக வாழுகின்ற சூழல் தொடர்ச்சியாக உருவாக்கப்பட வேண்டும். அந்தச் சூழல் இல்லாத சமயத்தில் மக்களும் அகன்று போய்க் கொண்டிருப்பார்கள். அதற்கு பின் தேசமும் கிடையாது விடிவும் கிடையாது. ஆகையால் தான் அரசியலையும் அபிவிருத்தியையும் இரு கண்களாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. அரசியல் இலக்கை அடைவதற்கு எங்கள் மக்கள் வாழ வேண்டும். வளமாக வாழ வேண்டும். உரித்துக்கள் மறுக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் அந்த உருத்தினை நாங்கள் மீளப் பெற வேண்டும் என்று போராடுகின்ற வேளையிலும்கூட நாம் வாழக் கூடியதாக அந்தப் போராட்ட காலம் இருக்க வேண்டும்.

ஆகையால் தான் ஒவ்வொரு கிராமத்திற்கும் அத்தியாவசிய தேவைக்காக வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை வருவித்துக் கொண்டிருக்கின்றோம். அதன் மூலமாக எங்கள் அரசியல் இலக்கை அடைய வேண்டும். எங்கள் மக்கள் இந்த இடத்திலேயே வாழ்ந்து எங்களுடைய இருப்பை தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் தொடர்ந்தும் இந்த இடத்திலேயே ஒரு தேசமாக வாழுகிறோம் என்ற யதார்த்த நிலையைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசிய மாக இருக்கிறது. இந்த இரண்டையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையும் கடப்பாடும் இருக்கிறது. இப்படியான காலகட்டத்தில் தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இப்படியான சூழலில் தான் மக்கள் நாட்டை விட்டு ஓடும் சூழ்நிலையில் இருந்து ஓடுகின்ற சூழ்நிலையை மாற்ற ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்தோம்.

அரசமைப்பு சட்ட உருவாக்கல் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் முடியவில்லை இழுத்தடிக்கப்படுகிறது. இன்னும் நிறுத்தப்படவில்லை மெதுவாகவேனும் நடந்து கொண்டு இருக்கிறது. எதிர் பார்க்கும் காலத்தில் நடந்து முடிவதில்லை. 100 நாள்களில் நடக்கும் என்ற எதுவுமே நடை பெறவில்லை. ஆனால் நூறு நாள்களில் நடக்கும் என்று சொன்னதில் அரைவாசியாவது மூன்று வருடங்களில் நடைபெற்றுள்ளது.

ஆகையினால் எமது மக்கள் தொடர்ந்து இந்த தீவிலே தமிழ்த் தேசமாக வாழவேண்டும். அது எங்களுடைய இலக்கு தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஒரு முறைக்குள்ளாக அது மாற வேண்டும் என்று உண்மையிலேயே நாங்கள் நினைத்து வாழ்வோமாக இருந்தால் இறுதி வரைக்கும் அந்த முயற்சியை நாங்கள் செய்வோம். அப்படி செய்யாது கவுட்டுக் கொட்டி விட்டு போவோமானால் இன்னும் 50, 100 வருடங்களுக்கு பிறகு இலங்கை தீவிலே தமிழர் என்றொரு தேசம் இருந்தது என்று சரித்திர புத்தகத்திலே படிக்க வேண்டியிருக்கும். அரைவாசி மக்கள் வெளிநாடு சென்று விட்டார்கள். நிலங்களிலே பெரும் பகுதி அபகரிக்கப்பட்டுள்ளது.

நிதானம் மிக மிக அவசியமானது. நிதானத்தோடு சூழ்நிலையைப் புரிந்து கொண்டு மக்களை வழி நடத்த வேண்டியது இன்றைய சூழலில் கட்டாயமானது.இந்த நாட்டிலே மிக விரைவில் நாம் அடைய வேண்டும் என்று பயணிக்கின்ற போது மக்களுடைய முழுமையான அங்கீகாரமும் ஆதரவும் எங்களுக்கு இருக்கவேண்டும் என்றார். (உ-159)


### மரண அறிவித்தல்

## கந்தசாமி தவலோகநாதர்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தவலோகநாதர் நேற்று (24.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - திலகவதி தம்பதியரின் அன்புமருமகனும் தவலோகநாதர் ஸ்ரீமாலாவின் அன்புக்கணவரும் கந்தசாமி சிவலோகநாதன், கந்தசாமி பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருட்ஸ்ரீ, அமர்நாத் (லண்டன்), அகல்விழி, அருள்மலர் ஆகியோரின் அன்புத்தந்தையும் பாலமுரளி (வவுனியா), தேவகி, இரத்தினகாந் (சுதன், பின்லான்ட்), கரிகாலன் (சரவணை) ஆகியோரின் அன்புமாமனும் அபிநயன், மதுசன், டிசானி, ஆதித், டிலக்சிகா, கயானி, யாழவி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2018) வெள்ளிக் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் நெளுக்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அமர்நாத் (லண்டன், 0044 7402618886),**
**பாலமுரளி (கோபு, வவுனியா), 077 205 7955**
**இல. 9, பாரதி வீதி, கூமாங்குளம், வவுனியா.**

**தகவல் : குடும்பத்தினர்.**

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு உதவித்தொகை

2018 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. இந்த உதவித் தொகையை ஞானம்பெயின்ற் நிறுவன விஜயரட்ணம் பவுண்டேசன் ஊடாக வழங்கி வைத்தது.

உதவித் தெகையை, 'முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய மாணவி ஞானசீலன் ராகினி (169 புள்ளிகள்), முல்லைத்தீவு பழம்பாசி வித்தியாலய மாணவி ராசரூபன் துச்சாதனா (195 புள்ளிகள்), வவுனியா நொச்சிக்குளம் முத்துமாரியம்மன் வித்தியாலய மாணவி புஸ்பராசா குமுதினி (168 புள்ளிகள்)' ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.








யாழ்ப்பாணம் மக்கள்வங்கி முகாமையாளர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி மேற்கொண்ட வேண்டுதலின் பேரில்.மேற்படி கல்வி உதவித்தொகை தேவைப்படும் மாணவர்களின் தெரிவை இ.புவனேஸ்வரனும் மற்றும் வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீனிவாசன் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ - 222)

# விருது வழங்கல் நிகழ்வு





யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனம் (IBM) வடமாகாணத்தின் ஒரேயொரு வியாபார மற்றும் செயற்குழுத்துறை சார்ந்த பிரிவுகளுக்கான 'கோள்ட் பாட்னர்' விருதை வெற்றி கொண்டுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தால் நடத்தப்பட்ட தொழில் கல்வி நிறுவனங்கள் மற்றும் விரிவுரையாளர் களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வில் இந்த விருது வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக உயர் கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இந்த மதிப்பளிப்புக் குறித்து கருத்துரைத்த வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் ஆரம்பகர்த்தா எட்கார் தம்பு, " கடந்த மூன்று வருட காலமாக கல்வித்துறையில் முன்னனியில் திகமும் எமது நிறுவனத்துக்கு கிடைத்த மதிப்பளிப்பாக 'கோள்ட் பாட்னர்' விருது அமைந்துள்ளது." என்றார். இந்த நிகழ்வில் வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனம் சார்ந்த விரிவுரையாளர்கள், 'பா.கமலதாசன்.ல.தாருகாசன்,ப.அஜந்தன்,பொ.தயாபரன், எட்கார் தம்பு' ஆகியோர் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தால் பதிவுசெய்யப்பட்ட விரிவுரையாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ)

# சிறுவர் தினம்

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையினர் ஏற்பாடு செய்த சிறுவர் தின நிகழ்வு, சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் அமைந்துள்ள புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தேசிய சேமிப்ப வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையிலான வங்கி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.


சிறார்களுக்கு உண்டியல் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ஒ - 9)




# மதிப்பளிப்பு நிகழ்வு

பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை நிலையத்தினர் ஏற்பாடு செய்த மூத்தோர் மதிப்பளிப்பு நிகழ்வு வங்கி மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

வங்கிக் கிளை முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில், வங்கியில் நீண்டகால வாடிக்கையாளர்களாக உள்ள மூத்த குடிமக்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ஒ - 9)



## முதலாவது...

பர் மாதம் 21ஆம் திகதி வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி மாகாண சபையின் முதலாவது அமர்வு ஆரம்பமானது. நேற்று நள்ளிரவுடன் சபையின் ஆயுள் காலம் முடிவுக்கு வந்தது. (5)

## வடக்கு...

இராணுவத்தினரால் பண்ணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மக்களிடம் அவற்றைக் கையளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டன. வடகிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணிக் கூட்டத்திலும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.
தாம் நடத்தும் பண்ணைகளை மக்களிடம் கையளிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டிருந்ததாக, இராணுவப் பேச்சாளர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே அவற்றை மக்களிடம் கையளிக்க இராணுவம் முடிவு செய்துள்ளது.
இந்தப் பண்ணைகளை விவசாயத் திணைக்களத்திடமா அல்லது யாரிடம் கையளிப்பது என்று இராணுவத்தினர் கோரியிருந்தனர். விவசாயத் திணைக்களத்திடம் கையளிப்பதை விட, கூட்டுறவு அமைப்புக்கள் ஊடாக மக்களிடம் நேரடியடியாகக் கையளிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணைகளை, இராணுவத்தினரிடமிருந்து கூட்டுறவு அமைப்புக்களுக்கு மாற்றுவதற்குரிய நிதியை, அடுத்த மாதம் சமர்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குவதற்கு நிதி அமைச்சு இணங்கியுள்ளது. (5)

## தமிழர்கள்...

டுள்ளார்.
இந்தக் கடத்தல் சம்பவம் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி நடந்துள்ளது. கொட்டஞ்சேனையைச் சேர்ந்த இரு தமிழ் வர்த்தகர்கள் தெமடகொடவில் வைத்துக் கடத்தப்பட்டிருந்தனர்.
இந்தக் கடத்தலில் தொடர்புபட்டுள்ளார் என்ற சந்தேகத்தில் கடற்படை லெப்டினட் கொமாண்டர் கே.ஏ.தயானந்த என்ற கடற்படை அதிகாரியே கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட அவர் நேற்று கொழும்பு பதில் நீதிவான் கே.சீ.ஏ.சமரதிவாகரவிடம் முற்படுத்தப்பட்டார். அவரை இன்றுவரை விளக்கமறியலில். வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ற)

## அம்மாச்சி...

மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
காரைநகர்பிரதேசசபையின் கசூரினா சுற்றுலா மையத்தில் முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகக் கட்டடத்திறப்புவிழா நேற்று மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:
ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இருவர் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசும் போது அவர்களின் சம்பாசனைகள் ஜேர்மன் மொழியில் இருக்கும். அதேபோன்று இரண்டு ரஷ்ய நாட்டு நபர்கள் சந்திக்கும் போது ரஷ்ய மொழியில் பேசுவார்கள். இரண்டு ஆங்கிலேயர்கள் ஆங்கிலமொழியில் பேசுவார்கள். ஆனால் இரண்டு தமிழர்கள் ஒருவரை ஒருவர் வடகிழக்கிற்கு வெளியில் சந்திக்கும்போது தமிழில் பேசமாட்டார்கள். மாறாக ஆங்கிலத்திலோ அல்லது பிறிதொரு மொழியிலோதான் பெரும்பான்மையானவர்கள் பேசுவார்கள்.
அதேபோன்று அம்மாச்சி என்ற பாரம்பரியத் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துவதில் சிலருக்கு விருப்பமில்லை. மாறாக "ஹெலபொஜன்" என்ற சிங்களப் பதத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று துடியாய் துடிக்கின்றார்கள். எமது அலுவலர்களும் பிரதி அமைச்சரைப் பகைக்கக் கூடாது என்ற அடிப்படையில் அம்மாச்சி என்பதற்குப் பதிலாக ஹெலபொஜ்னுக்குப் பதில் "பாரம்பரிய உணவகம்" என மாற்றிவிட்டார்கள்.
தங்கள் அன்புத் தாயாராகிய இலட்சுமிப் பிள்ளையின் பெயரை சிங்கள ஆட்சியாளர்கள் கோவிப்பார்கள் என்ற காரணத்தினால் பொடிமெனிக்கே என்று மாற்றக்கூடிய சிந்தனையாளர்களே இன்று அம்மாச்சி என்ற பெயரை மெல்ல நீக்கி பாரம்பரிய உணவகம் என மாற்ற முனைந்திருக்கின்றார்கள்.
நான் இறுக்கமாகக் கூறிவிட்டேன் அம்மாச்சி என்ற பெயர் காணப்படின் மட்டுந்தான் நான் இந்தத் திறப்பு விழாவிற்கு வருவேன் என்று. எமது பகுதியில் எமது மாகாணசபையின் நிதியிலிருந்து அமைக்கப்பட்ட உணவகத்திற்கு அன்பு கலந்த அம்மாச்சி என்ற பெயரை வைப்பதற்கு இவ்வளவு தடைகள் எனின் ஏனைய விடயங்கள் பற்றிக் கூறத் தேவையில்லை.
ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் மற்றும் அலுவலர்களும் சுயமாகச் சிந்திக்கத் திராணியற்றவர்களாக அரசின் அடிவருடிகளாக அவர்களைத் திருப்திப்படுத்துகின்ற அநாகரிகச் செயல்களில் ஈடுபட்டு வருவது வேதனைக்குரியது. ஆளும் வர்க்கத்தின் செல்லப் பிள்ளைகளாக என்றென்றும் இருக்க விரும்புகின்ற சிலரின் அப்பட்டமான கீழ்த்தரமான நடவடிக்கைகளாலேயே சிங்கள ஆட்சியாளர்கள் எம்மீது குதிரை விடப் பார்க்கின்றார்கள். நான் சிங்கள சகோதரர்களைக் குறைகூற வரவில்லை. என் தமிழ்ச் சகோதர சகோதரிகளின் வருத்தத்திற்குரிய செயற்பாட்டையே கூறவருகின்றேன் என்றார்.
இதேவேளை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட உணவகத்துக்கு "பாரம்பரிய உணவகக் கட்டடம்" என்றே கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்தது. அதில் பாரம்பரிய என்ற சொல் அழிக்கப்பட்டு உணவகக் கட்டடம் என்றே திறந்து வைக்கப்பட்டது. விக்னேஸ்வரன் அங்கு ஆற்றிய உரையில் அம்மாச்சி உணவகம் என்ற பெயர் இருக்காவிட்டால் தாம் இந்த உணவகத்தை திறந்து வைக்கமாட்டேன் என்று கூறியிருந்தாலும் அம்மாச்சி என்ற பெயர் பொறிக்கப்படாத கட்டடத்தையே திறந்து வைத்தார். (உ-8)

## புதிய...

சந்திப்பின்போது அந்தக் கட்சியின் பேச்சாளர் புபுது ஜகொட இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்தாவது;
நாட்டின் பயங்கரவாத செயல்களுக்கு எதிராகவும், பயங்கரவாதத்துடன் இணைந்த செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும், 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதைப் பார்க்கிலும் தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமானது நீதிக்கு எதிரானது.
பயங்கரவாத தடைச்சட்டத்தை தடை செய்தல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உட்பட நாட்டுமக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் அமையும் அடக்கு முறை சட்டங்களை தவிர்பதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதற்காக இடதுசாரி கட்சிகள் மற்றும் அமைப்புக்களை உள்ளடக்கிய வகையில் செயற்படவுள்ளோம். என்றார். (ற)

## மலையகத்...

இணைந்த இளைஞர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.
வாழ்வாதாரத்துக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்தல், தீபாவளி முற்பணத்தை உரிய நேரத்தில் வழங்குதல், கூட்டு ஒப்பந்தத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல், கூட்டு ஒப்பந்தத்தை மீறி உரிமைகளை பறிக்காதிருத்தல் மற்றும் தோட்டத் தொழிலாளர்களை கௌரவமாக நடத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைத்து பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.
கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் இடம்பெற்ற மூன்று சுற்றுப் பேச்சுக்களும் தோல்வியில் முடிந்துள்ள நிலையில் மலையகத்தின் பெரும் பகுதிகளில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு வலு சேர்க்கும் வகையில் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
நண்பகல் 12 மணியுடன் ஆர்ப்பாட்டம் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதன்பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச தலைவர் செயலகத்தை நோக்கி ஊர்வலமாகச் செல்ல முயன்றனர். அதையடுத்து அங்கு சிறப்பு அதிரடிப் படையினரும், தண்ணீர் பீய்ச்சியடிக்கும் வாகனங்களும் வரவழைக்கப்பட்டன. ஊர்வலமாகச் செல்வதற்குப் பொலிஸார் தடைகள் ஏற்படுத்தினர். அதனால் சற்றுப் பதற்றம் ஏற்பட்டது. (ற)

## அமைச்சர்களுக்கு...

னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
தங்காலை ரஜமாஹா விகாரையில் நேற்று நடைபெற்ற சமய வழிபாடுகளைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டு எதிர்க்கட்சியும் எதிர்வரும் தேர்தல்களில் இணைந்து போட்டியிடுவது குறித்து இதுவரையில் நாம் எந்தவிதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை. தற்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு ஏதாவது ஒரு தேர்தலைக் கூட நடத்துவதற்கு மிகவும் அச்சமாக உள்ளது. அவர்கள் தோல்வியடைந்து விடுவார்கள் என்ற பெரும் அச்சம் அவர்களுக்கு உள்ளது. அதன் காரணத்தினாலேயே தேர்தலை பிற்போடும் செயற்பாடுகளை நடத்தி வருகின்றார்கள். நாங்கள் போரை நிறைவு செய்த பின்னர் ஜனநாயகத்தினை நிலைநாட்டுவதற்காக வடக்கிலும், கிழக்கிலும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தினோம். நாம் வெற்றி பெறுவோம், தோல்வி அடைவோம் என்று சிந்தித்து பார்க்கவில்லை.
அரசுக்குள் 'றோ' சம்பந்தமாக மட்டுமல்ல பல விடயங்களில் நெருக்கடிகள் உள்ளன. அமைச்சர் மகிந்த அமரவீர 'றோ'வுடன் அமைச்சர்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறியுள்ளார். அவ்வாறாயின் அவர் பெயர்களை வெளியிட வேண்டும். அதனை விடுத்து பொதுவான கருத்தாக கூற முடியாது. றோவுடன் அமைச்சரவை அமைச்சர்களுக்கு தொடர்பிருக்கும் என்று நான் கருதவில்லை என்றார். (5,61)

## ஒபாமாவுக்கு...

ளில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருந்தமையை அமெரிக்காவின் உளவுத்துறை கண்டுபிடித்து மீட்டது.
அமெரிக்காவின் அதி முக்கியப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் பொதிகள் தீவிர சோதனைக்குப் பின்னரேயே அவர்களிடம் ஒப்படைக்கப்படும். அந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே ஒபாமா, ஹிலாரி ஆகியோருக்கு அனுப்பப்பட்ட பொதிகளில் அபாயகரமான வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருந்தமை கண்டறிந்து மீட்கப்பட்டது.
இந்த விடயம் தொடர்பில் துரித விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வொஷிங்டன் அறிவித்தது. (ம)

## புதிதாகக்...

புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்கும் முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.
நல்லூர் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் வைத்து தனது புதிய கட்சிக்கான அறிவிப்பை முதலமைச்சர் வெளியிட்டார். திருமண மண்டபம் நிறைந்த சுமார் 800 பேர் அளவில் கலந்து கொண்ட கூட்டத்தில் வைத்து கட்சிக்கான அறிவிப்பை கரகோசங்களின் மத்தியில் முதலமைச்சர் அறிவித்தார்.
முதலமைச்சர் தனது உரையில், வடக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டது என்பதையும் அதனால் எதனையும் செய்ய முடியவில்லை என்றும் குறிப்பிட்டார். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தவறிழைத்து வருகின்றது. அவர்கள் தயாரித்த தேர்தல் அறிக்கையிலிருந்து விலகி நிற்கின்றார்கள் என்று காரசாரமாக கூட்டமைப்பின் தலைமையை முதலமைச்சர் விமர்சித்தார்.
முதலமைச்சர் பதவிக் காலத்தின் பின்னர் செயற்பாடுகள் எப்படி இருக்கமுடியும் என்பது தொடர்பில் 4 தெரிவுகள் இருப்பதாக முன்னர் தெரிவித்தமையை முதலமைச்சர் நேற்று மீண்டும் நினைவூட்டினார். அமைதியாக வீட்டுக்குச் செல்லுதல், ஒரு கட்சியுடன் இணைந்து தேர்தலில் நிற்பது, ஒரு மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்குவது என்ற மூன்று தெரிவுகளை ஏன் நிராகரிக்கின்றேன் என்பதைக் காரணங்களுடன் கூறி, ஒரு புதிய கட்சியை ஆரம்பித்து செயற்படுவது என்ற முடிவை எடுத்துள்ளதாக அறிவித்தார்.
'தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தி சிந்திக்கும்போது, ஒரு மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கி செயற்படும் நான்காவது தெரிவு அதிகாரமற்ற ஒரு இயக்கத்தின் வெறும் ஆதங்க வெளிப்பாடாகவே இருக்கும் என்று எனக்கு புரிந்துள்ளது. அதனால்த் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் மக்கள் இயக்கமொன்றை நான் முன்னெடுத்துச் செல்வதைத் தாம் வரவேற்பதாகக் கூறியுள்ளார். எனவேதான் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து தமிழ் தேசிய கோட்பாடுகளின்பால் பற்றுறுதியுடன் இருக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்கும் மூன்றாவது தெரிவே சிறந்ததும் அவசியமானதும் என்று உணர்கின்றேன்' எனக் கூறிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவையின் அனுசரணையுடன் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கும் நடவடிக்கைகளை நான் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டேன். தமிழ்த் தேசிய கோட்பாடுகளின் வழிநின்று எமது இனத்தின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலையை வென்றெடுத்து மேன்மையை அடைவதற்கு, மனித உரிமைகளை மதித்து நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் அனைவரையும் ஒரு குடையின் கீழ் சேர்க்க, இந்தக் கட்சிப் பயணம் உறுதுணையாக அமையும். இதற்கு 'தமிழ் மக்கள் கூட்டணி' என்று காரணப் பெயர் இட்டுள்ளேன் என்று அறிவித்தார்.
தமிழ் மக்களின் அரசியல், சமூக பொருளாதார மற்றும் கலாசார விடுதலைகளுக்கான 'மக்கள் அரசியலை' முன்னெடுக்கும் பொருட்டாக சில செயற்திட்ட முன்மொழிவுகளை அவர் முன்வைத்தார். (5)

## விக்கியின்...

றார் அவர். காரைநகர் பிரதேச சபையின் கசூரினா சுற்றுலாமையத்தில் முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகக் கட்டட திறப்புவிழா நேற்று மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஜதீபன் தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தரப்புகளுக்குள் பிளவுகள் ஏற்படக்கூடாது என்று வலியுறுத்தினார்.
கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் விக்னேஸ்வரனும் முரண்படுவதால் அவர்களுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. ஆனால் தமிழ் இனம் தான் பெரும் பிரச்சினையை எதிர்கொள்ளப் போகின்றது. தந்தை செல்வா ஜி.ஜி.பொன்னம்பலத்தை விட்டுப் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியைத் தொடக்கினார். கட்சியைச் சிறந்ததோர் நிலைக்குக் கொண்டு வந்த பின்னரும் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஜி.ஜி. பொன்னம்பலத்தின் வீடு சென்று ஒற்றுமையை வலியுறுத்தியிருந்தார்.
நாம் வரலாற்றின் முக்கியமான கட்டத்தில் உள்ளோம். எமது இனத்துக்கான தீர்வு முயற்சியில் எமது தலைமைகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது நாம் பிளவுகளை ஏற்படுத்துவது பொருத்தமல்ல. நாம் இவ்வாறு பிரிந்து செல்வோமாயின் கிழக்கு மாகாணத்துக்கு ஏற்பட்டுள்ள நிலைமையே வடக்கு மாகாணத்துக்கு ஏற்படும். முதல்வர் இதனை உணர்ந்து ஒற்றுமையை சிதைக்காது ஒருமித்து செயற்படவேண்டும் எனக் கோரினார்.
தனது உரையில் அதற்குப் பதிலளித்த விக்னேஸ்வரன், தமது கொள்கையுடன் ஒத்துப் போனால் தனது கூட்டணியில் இணைந்து கொள்ளலாம் என்றார். (உ-8)

## பின்னர்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், புதிய கட்சிக்கான அறிவிப்பை வெளியிட்டு அது தொடர்பில் நீண்ட உரையாற்றியிருந்தார். இது தொடர்பில் இரா.சம்பந்தனைக் கேட்ட போது, புதிய கட்சி அறிவிப்புத் தொடர்பான தகவலை அறிந்தேன். அவர் ஆற்றிய உரையை நான் பார்க்கவில்லை. அதன் பின்னர் அது தொடர்பில் பதிலளிப்பேன் என்றார். (5)

## திருக்குமரன் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திருக்குமரன் அணி போராடி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மணியம்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## வளர்மதி அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வளர்மதி அணி அபார வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கொக்குவில் இந்து இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

55:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், ஒக். 25
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் த பப்பரே வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கந்தானை டீ மெசனற் கல்லூரி அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 69ஆவது நிமிடத்தில் பற்றிக்ஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பவிராஜ். 79ஆவது நிமிடத்தில் கந்தானை டி மெசனற் கல்லூரி அணியின் சார்பில் கோலொன்று பதிவானது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதையடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23)

## சென். ஹென்றிஸை வீழ்த்தியது ஏஞ்சல்



யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையால் பாடசாலைகளின் அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் பிரிவு ஆட்டமொன்றில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இதில் 85:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கரப்பந்தாட்டத்தில் ஜின்னா சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 25
மன்னார் மாவட்ட அணிகளுக்கு இடையிலான மஞ்சி கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் தாராபுரம் ஜின்னா அணி சம்பியனானது.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தாராபுரம் ஜின்னா அணியை எதிர்த்து துள்ளுக்குடியிருப்பு சென். மேரிஸ் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலிரு செற்களையும் முறையே 25:23, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஜின்னா அணி. மூன்றாவது செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது சென். மேரிஸ். நான்காவது செற்றில் மீண்டும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஜின்னா அணி முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (ம-422,23)



## யோகபுரம் மகா வித்தியின் பகீரதன் வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 25
ஜோன்காபற் தேசியமட்ட தடகளத் தொடரில் உயரம் பாய்தலில் முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பகீரதன் அன்பழகன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். அநுராதபுரத்தில் அண்மையில் இந்தத் தொடர் நடைபெற்றது.
இதில் 12 வயதுக்கு உட் பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியால யத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பகீரதன் அன்பழகன் 1.41 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)



# சென். பற்றிக்ஸ் அணி தேசியத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 25
பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தேசியமட்டக் கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. கொழும்பிலுள்ள இலங்கை கால்பந்தாட்டச் சம்மேஎன பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் அல்ஹமார் மத்திய கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## விண்மீன் அணி இறுதியாட்டத்தில்

கரணவாய், ஒக். 25
ஆதிசக்தியின் கால்ப்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்கு முன்னேறியது பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி.
சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இதில் அபாரமாகச் செயற்பட்ட விண்மீன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குள் நுழைந்தது. (ம-108)



## 16 ஓட்டங்களில் சுருண்டது மானிப்பாய் இந்து



யாழ்ப்பாணம், ஒக். 25
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸில் வெறும் 16 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 121 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பவிதரன் 33 ஓட்டங்ளையும், விமல்ரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் விதுசிகன் 4 இலக்குகளையும், யதுசன் 3 இலக்குகளையும், தேவிகன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 12.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹரிகரன் 4 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் பவிதரன், விருட்சிகன் இருவரும் தலா 4 இலக்குகளையும், லம்போதரசர்மா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். மானிப்பாய் இந்துக் கல்லூரி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்டது. மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நாள் முடிவுக்கு வந்தது. (ம-23)

## கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் இறுதிக்குத் தகுதி பெற்றது

கரணவாய், ஒக். 25
ஆதிசக்தியின் கால்ப்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்கு முன்னேறியது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி.
வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்ப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி முதல் கோலை பதிவுசெய்ய 12ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்து ஆட்டத்தைச் சமனிலைப்படுத்தியது றேஞ்சர்ஸ் அணி.
மேலதிக மாற்றங்கள் ஏற்படாததைத் தொடர்ந்து முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது றேஞ்சர்ஸ். (ம-23)



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

HIACE வான் வாடகைக்கு
அனைத்து வசதிகளும் உள்ள Hiace வாகனம் மாதாந்த / நாளாந்த தேவைகளுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு - 077 026 1966

PHYSICS
ENGLISH & TAMIL MEDIUM
GROUP & PERSONAL CLASSES
G.C.E. (A/L) 2019, 2020
By : Mr. M. Jeya Bsc, PGDE
Contact No : 076 294 3565
CAPS No. 52, Palaly Road, Thirunelvely-Junction. (Near Sampath Bank)
Contact No : 021 205 2240

அமெரிக்க லொத்தர் 55000 இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் 6 நாட்களே உள்ளன!
எனது நண்பன் V2 Travels விளம்பரம் பார்த்து என்னையும் பதியுமாறு சொல்லியிருக்காவிட்டால் இன்று அமெரிக்காவில் கை நிறைய சம்பளத்துடன் நிரந்தர விசா வாய்ப்பு கிடைத்து இருக்காது. V2 Travelsக்கும் நட்புக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.
கரிகாலன்
V2 TRAVELS
0768226243

# கோக்லி நெருப்பாட்டம் ஆட்டம் சமநிலையில்!

இந்தியா - தீவுகள் இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இரண்டு அணிகளும் 321 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமநிலையானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 6 இலக்குகளை இழந்து 321 ஓட்டங்களைக் குவித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ரோகித் 4, தவான் 29 என்று ஏமாற்றினாலும் கோக்லி, ராயிடு கூட்டணி இந்திய அணியைத் தூக்கி நிறுத்தியது. இணைப்பாட்டமாக 139 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராயிடு. எனினும் தொடர்ந்தும் நிலைத்து நின்று சதம் கடந்தார் கோக்லி. பன்னாட்டு அரங்கில் இது அவரின் 61ஆவது சதமாகப் பதிவானது. இறுதி வரை கோக்லி ஆட்டமிழக்காது 157 ஓட்டங்களைக் குவித்தார். கோக்லியின் இன்னிங்ஸ்தான் இந்தியா 321 ஓட்டங்களைக் குவிக்க முக்கிய காரணமாக அமைந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்ப வீரர்களான பவல் 18, கேம்ராஜ் 32 ஓட்டங்களைச் சேர்த்தனர். கோப் ஒரு முனையில் நிலைத்து நிற்க மறுமுனையில் இளம் வீரர் ஹெட்மயர் அற்புதமான ஆட்டத்தை வழங்கினார். 64 பந்துகளில் 94 ஓட்டங்களுடன் ஹெட்மயர் ஆட்டமிழந்தாலும் கோப் தொடர்ந்தும் நிலைத்துநின்று தீவுகளை பலப்படுத்திக் கொண்டிருந்தார். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 14 ஓட்டங்கள் தீவுகளுக்குத் தேவைப்பட்டது. அந்த அணி 13 ஓட்டங்களைப் பெற்றதையடுத்து ஆட்டம் சமநிலையானது.

**கோக்லி 10,000**


நேற்றுக் குவித்த 157 ஓட்டங்களின் உதவியுடன் பன்னாட்டு அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் கோக்லி. 205 இன்னிங்ஸில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த கோக்லி அதிவேகமாக 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையை சச்சினிடம் இருந்து தட்டிப்பறித்தார். (ம)



அமெரிக்க லொத்தர் 55000 இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் 6 நாட்களே உள்ளன!
எனது நண்பன் V2 Travels விளம்பரம் பார்த்து என்னையும் பதியுமாறு சொல்லியிருக்காவிட்டால் இன்று அமெரிக்காவில் கை நிறைய சம்பளத்துடன் நிரந்தர விசா வாய்ப்பு கிடைத்து இருக்காது. V2 Travelsக்கும் நட்புக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.
கரிகாலன்
V2 TRAVELS
0768226243

HIACE வான் வாடகைக்கு
அனைத்து வசதிகளும் உள்ள Hiace வாகனம் மாதாந்த / நாளாந்த தேவைகளுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு - 077 026 1966

PHYSICS
ENGLISH & TAMIL MEDIUM
GROUP & PERSONAL CLASSES
G.C.E. (A/L) 2019, 2020
By : Mr. M. Jeya Bsc, PGDE
Contact No : 076 294 3565
CAPS No. 52, Palaly Road, Thirunelvely-Junction. (Near Sampath Bank)
Contact No : 021 205 2240




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.